# நந்தலாலா

பெப்ரவரி 2014










- சர்வதேச கட்டுரைகள்
- கவிதைகள்
- சிறுகதை

**கலை இலக்கிய விமர்சன சஞ்சிகை**

# கூவல்களுக்குப் பின்னர் ...



சேர்த்து, இணைத்து,

அணைத்துக்கொள்ளப்பட்டு பின் இயக்க

நியதிகளுக்கு ஒப்ப வளர்ந்து,

நீ உன் குரலில் பாடுவாயானால் நின் பாடல்

நெரிக்கப்படும்.

இது, இயல்பானதெனின் காந்திய இயக்கமும்,

இயல்பானது

அம்பேத்கரின் குரல் நெரிக்கப்படுவதும்

இயல்பானதே

ஆக,

இவ்வியல்பின் சாரத்தை அம்பேத்கர் முதல்

சோசலிச சோவியத்திற்கு பின்னரான

சமுகம்வரை இயல்பாகவே விஸ்தரிக்கலாம்

என்பதாலோ என்னவோ இன்குலாப்பின்

அவாவுதல் இங்கே குயிலின்

கூவலை வேறோர் தளத்திற்கு

கொண்டு சென்று (இங்கே சொல்லுமாப்போல்)

கூவுதல் இல்லை என முடிக்கிறார் போலும்.

பல படிமங்களை உள்ளடக்கி உயரிய தளத்தில்

இயங்கக்கூடிய ஓர் கவிதை இது எனலாம்.

உச்சி சரிந்த வெயிலின் மென்மையில்
தோழர்களுடன் செவ்வி...
கவிதைக் கீற்றுகள் இடையிடை தெறிப்பினும்
இசையற்ற மணித்துளிகளாய் நீண்டது.
பேச்சொலியையும் மீறிக்
கேட்டுக் கொண்டிருந்தது
இரண்டு பறவைகளின் பேச்சரவம்

அசைவதை நிறுத்தின எனது உதடுகள்
பிறகு எல்லாரது உதடுகளும்

கேள்வியும் பதிலும் போலப்
பறவை பறவையிடம் செவ்வி நிகழ்த்துகிறதோ?

பறவைகளின் குரல்கள் அறை முழுவதும்
எம் மொழியின் மௌனத்தை
என் குரல்தான் கலைத்தது;
“குயில்கள் பேசுகின்றன”
எப்படி தெரியும் என்பதுபோலத்
தோழர்களின் புருவங்கள் நெரிந்தன

சுற்றுச் சுவருக்கு அப்பால்
வேம்பின் இலை நெருக்கிய கிளையில்
அன்றொரு பகலில் பார்த்தேன்

இப்பொழுதும்
கூவுதலின் இசைமை இல்லை எனினும்
பேச்சின் இனிமை இருந்தது

கருப்பில் மினுங்கும் ஆண்மையும், பெண்மையும்
தீராத காதலைப் பேசித் தீர்க்கின்றனவோ
இசையின் சாயலிலான தமது மொழியில்?

பப்பாளி உச்சிப் பழத்தைக் கோதி
மாங்கிளை இலைகளின் மறைவில் கூவிய
வசந்த காலத்தை நினைவுக் கூர்கின்றனவோ?

தேக்கின் உச்சியில் குச்சிகளால் இழைத்த
காக்கையின் கூடுபோல்
ஒரு கூடுகட்ட
இயலாமை குறித்து ஏங்குகின்றனவோ?
வெளிச்சென்ற காகம் கூடுத் திரும்புமுன்
இட்டு வந்த முட்டையை
அக்காகம்,
ஏற்குமோ ஏற்காதோ என்ற கவலையோ?

அப்படியே காகம் அடைக்காத்தாலும்
குஞ்சுக் குயிலின் முதற் கூவலில்
ஏமாற்றப் பட்டது தெரிந்து தன் குஞ்சை;...
தன்னை அடைக்காத்த காக்கை அன்று
கொத்தியது போலத் துரத்திக் குதறுமோ?
ஊட்டிய வாயால் உயிரை உண்ணுமோ?

சின்னஞ் சிறு சிட்டும் தனக்கெனக் கூடு கட்டும்.
தன் குஞ்சின் பசியறிந்து தன் அலகால் உணவூட்டும்,

காடு வெறிக்கொள்ளக் கூவித் திரிந்தும்
கூடு கட்டத் தெரியாமல்
என்ன பெரிய குயில்வாழ்க்கை?
எண்ணிலாக் குருவிகளின் எண்ணிலா மொழிகளில்
குயில்களின் பேச்சொலிக்குக் குறித்த பொருள் எதுவோ?
குயில் முட்டையாய் பிறந்து
காக்கைச் சூட்டில் பொரிந்து
காக்கைக் குஞ்சுப் போல கருஞ் சிறகுடன் வளர்ந்து
காக்கா என்றது கரையும் காலத்தில்
கூ கூ என்ற தன் மொழியில் கூவுகையில்
அடைக்காத்த காகம் அடையாளம் கண்டு
கொத்திக் குதறும் கூர் அலகுக்குத் தப்பித்
தத்தித் தடுமாறி, வளரும் சிறு சிறகில்
பறந்து பாதுகாப்பாய் வேறு கிளையில் அமர்ந்து
வளர்ந்தால் கருங்குயிலாய் வலம் வரலாம்.
அப்பொழுது
தாய் சொல்லித் தராத தாய்மொழி அறிந்திடலாம்.

கூவல்களுக்குப் பின்னர்
எத்தனைக் கொடூரங்கள்?

கவிதை, கலை, மானுட விடுதலை
இவைக்குறித்தெல்லாம் இன்னும் தொடர்ந்த
செவ்வியின் அப்பொழுதில்
கிளையில் குயில்களில்லை.

-இன்குலாப்-
16-01-2014

முன் அட்டை:- வான்கோவின் Almond Blossoms.

உள்ளே ....

**கட்டுரைகள்**


- ஈரானிய ஒப்பந்தம் வெற்றியா? தோல்வியா யாருக்கு? 01
- ஜெனீவா கண்ணோட்டத்தில் இலங்கை இந்திய உறவுமுறைகள் 06
- சிரியா - ஜெனிவா-2 எதிர்காலம் 17
- பங்களாதேஷ் - அடுத்தது என்ன? 45


**சிறுகதை**


- ஆசாரி 10
  - இராமையா முருகவேல் -


**கவிதைகள்**


- - வான் காத் -
- - இன்குலாப் -
- - வாசுதேவன் -
- - ஜெயம் நிவேதன் -
- - பீஷ்மா -


*Nandhalala*
*133-1/1, Dimbulla Road,*
*Hatton.*

## தீக்குள் விரலை வைத்தால் ...

வணக்கம்

நந்தலாலா சார்ந்த ஒரு சில நண்பர்களின் அபிப்பிரா யத்தை அடுத்து இவ்விதழ் சற்றே வித்தியாசப்பட்டு, பெருமளவு பக்கங்கள் சர்வதேச விவகாரங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிலையில் தயாரித்தளிக்கப்பட்டுள்ளது.

இந்நடைமுறையை அடுத்து வரும் இதழ்களில் தொடரும் எண்ணம் இல்லை.

இப்படியான தயாரிப்பு தொடர்பில் நண்பர்கள் மத்தியில் எழுந்துள்ள அபிப்பிராயங்கள் சர்வதேச நிகழ்வுபோக்குகளின் உக்கிரத்தால் விளைந்த ஒன்று என்பதை புரிந்துக்கொள்கின்றோம்.

மூலவளங்கள் நிறைந்த மத்திய கிழக்கு நாடுகளும், ஆபிரிக்க நாடுகளும் வரும் காலங்களில் அநேக சவால் களுக்கு முகம் கொடுக்ககூடும் என்பதனை இன்று அவற்றை சூழ நிகழும் நிகழ்வுகள், சுட்டுவனவாக உள்ளன.


வெறும் வியாபாரம் என்ற கோதாவில் அடியெடுத்து வைத்து, பின் இறுதியில் இந்திய சாம்ராஜ்ஜியத்தையே அடிமைக்கொண்ட கிழக்கிந்தியகம்பனிகளை ஒத்த காப்ரேட்டுகளின் கடைக்கண் பார்வை, இன்று உலகின் பல்வேறு மூலவளங்களையும், சந்தைகளையும் பெருத்த தாகத்துடன் பார்ப்பதை கண்டுகொள்ளாமல் இருப்பது சற்றே சிரமம்தான்.

இதனடிப்படையில் பிறந்த நண்பர்களின் கருத்து குவியலிலேயே இவ்விதழ் வித்தியாசப்பட நேர்ந்தது. இருந்தும் இப்பாணியை தொடரும் எண்ணம் இல்லை.

ஏனெனில், நந்தலாலா அடிப்படையில் இலக்கிய சமாசாரங்களுக்கென ஆக்கப்பட்ட ஓர் இதழே.

எனவே இவ்விதழின் தோற்றப்பாட்டை நிரந்தரமென கருதாது, ஓர் தோற்றமயக்கம் எனக்கருதி, நந்தலாலா தனது வழமையான இலக்கிய சாயலுடன் வெளிவர, செழுமையான பங்களிப்புகளை ஆற்றுமாறு நண்பர் களை அன்புடன் வேண்டுகின்றோம்.

வாழ்த்துக்கள்.
–நந்தலாலா–




கட்டாரும் ஈரானும் பகிர்ந்துக்கொள்ளும் உலகின பிரமாண்டமான எரிவாயு கிணறுகள்.

# ஈரானிய ஒப்பந்தம் வெற்றியா ? தோல்வியா ? யாருக்கு??

-நித்தியபிரகாஸ்-

நவம்பர் 24 ஆம் திகதி அதிகாலையில் பின்வரும் செய்தி வெளியாகியிருந்தது:
**'Day 5, 3 A.M, its white smoke'**
(நாள் ஐந்து: அதிகாலை 3 மணி: புகை, வெண்புகை)
பாப்பரசரின் தேர்வை ஒட்டி வெளியாகும் அறிவிப்பின் தோரணையில், வெளிவந்த இச்செய்தி, வெளிவருவதற்கு கிட்டத்திட்ட ஒன்றரை மாதம் முன்பதாக, செப்டெம்பர் 04 இல் கீழ்வரும் செய்தி வெளியாகி இருந்தது:

"சிரியா மீது நேற்று வீசப்பட்ட இரண்டு "பார்ல்லிஸ்டிக்" ரக ஏவுகணைகள் மத்தியத்தரைக் கடலில் விழுந்தன."

"இஸ்ரேல் தனது "அங்கர்" ஏவுகணையை இயக்கிச் சோதனை செய்ததாகப் பொறுப்பேற்றுள்ளது." இச்செய்திகளில் பொதிந்திருந்த விடயங்கள் அனந்தம்.

மயிரிழையில் தொங்கிக் கொணடிருந்த ஒரு "சிரிய" தலைவிதி தனது ஒருகாலை, தன் சவக் குழியில் இருந்து மீட்டுக்கொண்ட தருணம் என ஒன்று அண்மைக் காலங்களில் இருந்திருக்குமேயானால், அது இதைத்தவிர வேறொன்றாக இருக்க முடியாது.

இன்றுவரை, தொடர்ந்துக் கொண்டிருக்கின்ற சிரிய போரில் பங்கேற்றுக் கொண்டிருக்கும் பாத்திரங்கள் அனேகம். வெளிப்படையாக, "பங்கேற்கின்றோம்" என்று சொன்னவை போக, திரைமறைவில் என்று கூறி ஆனால், நேரிடையாகவே சிரிய போரில் தீவிரமாக ஈடுபட்ட நாடுகளின்

விமானத்தாங்கி கப்பல்



எண்ணிக்கையும் கணிசமானதே. இவ்வகையில் ஈரானும்கூட தனக்குரிய பங்கை செவ்வனே ஆற்றத் தயங்கவில்லை. ஈரான், இஸ்புல்லா, அஸாட்டின் படைகள் - என்ற வகையில் அமைக்கப்பட்டிருந்த கூட்டணியின் பலம், தரையில் குறிப்பிடத்தக்க சக்திப் பிரயோகத்தை கொண்டிருக்கவே செய்தது. இதற்குப் பக்கபலமாய் வான் சார்ந்த விடயங்களில் ரஷ்யா தனது விஞ்ஞான, தொழில்நுட்ப வலையை நுணுக்கமாக விரித்திருக்கவும் பின்தங்கவில்லை.

ஈரானிய அணுவாயுதத்திட்டம் கைகூடிய மகிழ்ச்சி



இதுவொருபுறமிருக்க, மறுபுறத்தில் அமெரிக்காவின் பிரம்மாண்டமான யுத்தக் கப்பல்களும் விமானம் தாங்கிக் கப்பலும் (அது இரண்டு மூன்று கால்பந்தாட்ட மைதானத்தின் ஒன்றிணைந்த பரப்பளவை உள்ளடக்கியது. சில கப்பல்கள் 1106 அடி நீளம், 4000 வீரர்கள், 90 விமானங்கள், ஒரு நாளில் மொத்தம் 220 விமானத்தாக்குதல் பறப்புகளை (விமானத்தாக்குதல்களை) மேற்கொள்ளும் வசதிக் கொண்டவை) அமைதியான முறையில் சிரியாவை எட்டித் தொட்டுவிடும் தூரத்திற்கு அண்மிக்கத் தொடங்கியிருந்த வேளையிலேயே மேற்படி " ஏவுகணை அனர்த்தம்" நிகழ்ந்து, சிரியாவின் அக்கணத்திலான உயிர்த் தப்பலை சாத்தியப்படுத்தியிருந்தது.

சிரிய போரில் தீட்டப்பெற்ற இவ்வெதிர்பாராத திருப்புமுனையை ஒரு முன்னுரையாகக் கொண்டு தற்பொழுது சமைக்கப்பட்டு வரும் ஒரு நவீனத்தின் தலைப்பே ஈரானிய அணு ஒப்பந்தம் எனக் கூற முற்படுவதில் அதிக தவறுகள் இராது என நம்பலாம். காரணம் சிரியாவின் "அந்தக்" கணம் இல்லாமல் ஈரானின் "இந்தக்" கணமும் இல்லை. வேறுவார்த்தையில் சொல்வதானால் தீவிரம் பெற்று வந்த ஒரு சிரிய போக்கின் மரணத்தில் நின்று இன்று ஓர் புதிய ஈரானிய போக்கின் ஜனனம் உதயம் பெறுகின்றது எனலாம்.

நவம்பர் 24, அதிகாலை நான்கு மணி அளவில் சாத்தியமான இவ் ஈரானிய ஒப்பந்தம் சாத்தியப்படும் பொருட்டு ஈரான், சீனா, ரஷ்யா, அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுகள் ஒன்று கூடி ஐந்து தினங்களாய் தீவிரப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தாலும் பேச்சுவார்த்தையின் இறுதிக்கட்டங்களில் பங்கேற்ற நாடுகள், ஐரோப்பிய யூனியனின் தலைமையில் அமெரிக்காவும் ஈரானும் மாத்திரமே என்பதும் மேலும் ஒப்பந்தமானது ஆறு மாத காலமே நீடிக்கக் கூடிய ஓர் இடைக்கால ஒப்பந்தமாகவே உருப் பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத் தக்கது. (இருபகுதியினரும் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் இவ் ஆறமாத கால எல்லை நீடிக்கப்படலாம் எனவும் ஒப்பந்தம் கூறுகிறது)

பேச்சுவார்த்தையின் போது ஒப்பந்தத்திற்கு எதிராகச் செயற்பட்ட நாடென்றால் அது பிரான்ஸ் மாத்திரமே.


ஒப்பந்தத்தின் போதும் ஒப்பந்தத்தின் பின்னரும் ஒப்பந்தத்திற்கு எதிராக தீவிரமாகப் பேசியும், செயற்பட்டும் வந்த நாடுகளாக இஸ்ரேலையும் சவுதி அரேபியாவையும் குறிப்பிடலாம் (இரண்டுமே பேச்சுவார்த்தைகளில் இடம்பெறாதவை). இஸ்ரேல் இதை ஒரு "வரலாற்றுப் பிழை" என வர்ணித்த போதும் இஸ்ரேலின் உண்மையான உள்நோக்கங்கள் அமெரிக்காவைப் போன்றே என்றும் வெளிப்படையாகத் தெரிவதில்லை, என்பது யாவரும் அறிந்ததே.

பிரான்ஸ்சின், ஒப்பந்தத்திற்கு எதிரான செயற்பாடுகளுக்குப் பின்னணியில் அது இக்காலப்பகுதியில் சவுதி அரேபியாவுடன் செய்துக் கொண்ட பிரம்மாண்டமான இராணுவ வர்த்தக ஒப்பந்தமே காரணம் என ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ( இ∴து

கப்பலில் இருந்து ஏவப்படும் "பார்லிஸ்டிக்" ஏவுகணை



Qom அணு உலை



ஒரு பில்லியன் டொலர்களுக்கு மேலான பெறுமதியினைக் கொண்டது) இது, ஒருபுறமிருக்க ஒப்பந்தமானது, இப்பொழுது அமெரிக்கத் தடைகளின் காரணமாக பல்வேறு வங்கிகளில் முடங்கிக் கிடக்கும் ஈரானின் எண்ணெய் ஏற்றுமதிக்கான பணத்திலிருந்து நான்கு கோடி டொலர்களை ஈரான் தற்போது பெற்றுக் கொள்ள வழிசெய்கிறது. (சில அறிக்கைகளின் கணிப்பீட்டின் படி இது 07 கோடி டொலர்கள் என மதிப்பிடப்படுகிறது) உண்மையில், இன்றளவில் இப்படியான தடைகள் காரணமாக பல்வேறு வங்கிகளில் முடங்கிக் கிடக்கும் ஈரானிய பணத்தின் மொத்தத் தொகை கிட்டத்தட்ட 100 கோடி டொலரை தாண்டக்கூடும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

1979 இல் இடம்பெற்ற ஓர் ஈரானிய - இஸ்லாமியப் புரட்சித் தினங்களிலிருந்து, இன்று வரை, 34 வருட காலமாய் ஈரானுடன் தொடர்ச்சியானப் பகைமையை பாராட்டிவந்த அமெரிக்கா, இன்று தனது பகைமை உணர்வை மறந்து நேசக்கரம் நீட்டியுள்ளதை ஒரு "நிக்சனின் கணம்" என ஒப்பிட்டு வர்ணிப்பவர்கள் பலர். (1972 இல் ரிச்சர்ட்ஸ் நிக்சனின் சீன விஜயம் வரலாற்றில் ஏற்படுத்தியதாக கூறப்படும் ஒரு திருப்புமுனை அதாவது ரஷ்யா சீன உறவில் ஏற்பட்ட புதிய திருப்பம், மேலும் சோவியத்தின் வீழ்ச்சிக்கான புதிய அத்திவாரம், பின் சீன "திறப்பிற்கான" புதிய அடிக்கல் - என ஒன்றையடுத்து ஒன்றாக, அக்கணத்தை அடையாளப்படுத்துபவர்களின் பார்வையில், இவ் ஈரானிய ஒப்பந்தமும் ஓர் "நிக்சனின் கணமே" என வாதிக்கப்படுகின்றது.)

இதனை அடியொட்டி, மேலும் சிலர், சீனம் எப்படி தற்போது ஒரு பலமிக்க அரசியல் - பொருளியல் சக்தியாக, அவ் "நிக்சன் கணத்தை" அடுத்து உலகில் பரிணமித்துள்ளதோ அந்த வகையில் ஈரானும் இன்று பரிணமிக்கக் கூடிய சாத்தியப்பாட்டை இவ்வொப்பந்தமும் ஏற்படுத்தி யுள்ளது என்று கூறுவோரும் உளர்.

இவ்வாதங்களின் சாத்தியப்பாடுகளை காலம்தான் இறுதியாகத் தீர்மானிக்கப்போகிறது என்றாலும், இது தொடர்பில் ஓர் அருட்டுணர்வை பெற்றுக்கொள்ளும் வகையில், சில வாதப் பிரதிவாதங்கள் முன்னெடுக்கப்படுவது இன்றைய சூழலில் தேவையானதே என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது.


இவ்வொப்பந்தமானது, விஷேடமாக ஈரானுக்கு பின்வரும் கட்டுப்பாடுகளை விதிப்பனவாக அமைந்துள்ளது:

i. ஈரான், யுரேனிய செறிவாக்கல்களை 5 விகிதத்திற்கு மேல் அதிகரிக்கக் கூடாது என்றும் (அணு வாயுத தயாரிப் பிற்கு 5 விகிதத்திற்கும் மேலான செறிவூட்டல் தேவையுறும்)

ii. அராக் (Arak), Nathanz, fordon போன்ற அணுவுலைகளின் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்யாது இருப்பதற்கும் (அல்லது மட்டுப்படுத்துவதற்கும்) என்றும்

iii. தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ளக் கூடியதும் மலைப் பாங்கான பகுதியில் அமைந்துள்ளதுமான Qom அணுவலையை மூடிவிடுவதற்கு என்றும்

iv. சர்வதேச அணு அமைப்பின் தீவிர கண்காணிப்பிற்காக தனது அணுவுலைகளை முக்கியமாக அராக்கில் அமைந்துள்ளதை திறந்துவிடுவதற்கும் (அராக் அணுவுலை, தனது அணுவாயுத தயாரிப்பிற்கு, யுரேனியத்தில் தங்கியிராது, வேறு முறைகளில் அணுவாயுத உற்பத்திக்குத் தேவை யான புளுட்டோ



அராக் அணுவுலை

32ம் பக்கம் பார்க்க



# பற்றி எரியும் இதயம்!

-வான் காத்-

இக்கவிதை, பல உயிர்ப்புகளை வாழ்வின் மேல்மட்டத்திற்கு இழுத்துவந்து சேர்த்த பிரெஞ்சுப் புரட்சி அலைகளின் கொந்தளிப்புகளின் மத்தியில் உருவாகிய ஜெர்மனியக் கவிஞரான வான் காத்தினுடையது. (Von Goethe 1749 - 1832) இவர் சிரத்தைக் காட்டிய துறைகள் பல்தரப்பட்டவை. கவிதை, விமர்சனத்துறை, நாடகத்துறை, ஓவியம் என்பது முதல் தாவரவியல், உடற்கூற்றியல் (Anatomy) போன்ற துறைகளையும் ஆகர்ஷித்த இவரது ஆளுமை இவருக்குப் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்த மாபெரும் ஆளுமைகளை ஆகர்ஷிக்கத் தவறவில்லை. இவரது கவிதை வரிகளுக்கு மொசார்ட், பீத்தோவன் போன்ற உயர் கலைஞர்கள் இசை வடிவம் தந்துள்ளனர்.

இங்கே பிரசுரமாகும் இவரது இக்கவிதை, கிரேக்க இதிகாச நாயகர்களில் ஒருவனான பிரமித்தியூஸ் கடவுளிடம் (ஸீயூஸ்) உரையாடுதல் போல எழுதப்பட்டுள்ளது. பிரிமித்தியூஸின் உருவகம் மனித இனத்தின் அறிவையும் ஆற்றலையும் குறிப்பது. பிரமித்தியூஸ் கடவுள்களுக்குத் தெரியாமல் அவர்களிடம் இருந்து நெருப்பைத் திருடி மனிதர்களுக்குத் தந்தவன் - இதனால் ஆயிரக்கணக்கான வருடங்கள் கடும் சித்திர வதைகளுக்கு உள்ளானான் என்பது ஐதீகம்.

முதலில்,

சவத்துணியால்
மூடுதற் போலவே
மூடு ஸீயூஸ்
நின் சொர்க்கத்தை,
இருள்
மேகம் கொண்டு

பின்,
ஓர் சிறுவன் போல கிட
வெறும்
ஓக் மரங்களினதும்
மலை உச்சிகளிலும்
கிடக்கும் முட்களின்
தலைகளை
வெட்டி தள்ளியவாறு

நீ,
இப் புவி பந்தை
விட்டகன்று
எனக்காய்
விட்டுத்தரத்தான் வேண்டும்
கூடவே,
நீ கட்டுவிக்காத
எந்தன் வீட்டு குடில்..
நீ,
பொறாமையுரும்
செந்தழல் பற்றி எரியும்
என் நெருப்புள்ள
அடுப்பு...
இவற்றையும் தான்...

இச்சூரியனுக்கு கீழே
உள்ள ஜீவராசிகளில்
கடவுள்களைத் தவிர
கையாலாகாத
ஜீவராசித்தான்
ஏது?

நீ
வெறும், சம்பிரதாய சடங்குகளாலும்
நொய்ந்தோரின் பிரார்த்தனைகளாலும்
முடியாதிருக்கும் நின் கம்பீரத்தை
தூக்கி பிடிக்கவே முயல்கின்றாய்.
இதுவும் இங்கே,
உலர்ந்தே போய்விடும்
வெறும் நப்பாசைகளைக்
கொண்டு
முட்டாளாகி போன
குழந்தைகள் கூட்டமும்
பிச்சைகளின் கூட்டமும்
இல்லாதிங்கே
இருந்துபோம் எனில்
இதுவும்
இங்கே
உதிர்ந்துலர்ந்தே
போய்விடும்

நான்,
உள் – புறம்
எதிலிருந்து எதைநோக்கி
என்றெல்லாம்
அறியா குழந்தையாய்
இருந்த ஓர் பருவத்தில்
என்
அலையும் கண்களை
சூரியனுக்கு அப்பால்
இருத்தியிருந்தேன்

என்
புலம்பலைக் கேட்கும்
ஓர் செவி அங்கே
இருத்தல் கூடும் – என்றும்
வருத்தப்பட்டோர்க்காய்
இளகி நெகிழ்ந்திட
என் இதயம் போன்றதோர்
இதயம் அங்கே
இருத்தல் கூடும் என்றே
என் அலையும் கண்களை
அங்கே இருத்தியிருந்தேன்.

சொல்,
ராட்ஷச டைட்டான்களின்
வன்மத்துக்கெதிராய்
யார் இங்கே
எனக்கு
உதவிகள் செய்தது?

இறப்பிலிருந்து
தப்புவித்தது
யார் என்னை, இங்கே?

பின்,
அடிமையாய்
ஆவதிலிருந்து?

செந்தழல் ஜொலிக்க
பற்றி எரியும்
என் புனித
இதயமே,
நினையன்றி
யார் பிறரின்
சாதனைகள்
இவை இவை இங்கே?

தூய்மைகளும் துடிப்புகளும்
கொண்டிட்ட
ஜ்வாலிக்கும் செந்தழலே
ஏமாற்றப்பட்ட
ஓர் முக்தியின் பெயரால்
மேலே தூங்கும்
எந்த ஒருவனுக்காய்
உன் நன்றி?

சொல்,
ஏன் உன்னை
நான் இங்கே
வணங்குதல் வேண்டும்?
எதற்கு?

துயருற்ற ஒருவனின்
வலிகளை
நீ
என்றாவது குறைத்ததுண்டா?
சுமையால் நசியும்
ஒருவன்
கண்ணீரை
பொழுதாவது நீ
துடைத்ததுண்டா?

உனதும் எனதும்
எஜமானர்களான
சர்வ சக்தியும்
படைத்திட்ட
காலத்தால்,
முடிவற்ற நீட்சி
கொண்டிட்ட
விதி வலியால்
இங்கே நான்
ஓர் மனிதனாய்
உருப்பெற வில்லையோ?

பூக்கள் சுமந்த
கனவுகள் என்னில்
வற்றும் தருணம்
வாழ்வை இங்கு நான்
வெறுத்தல் வேண்டும்
பாலையில் நான்
திரிதலும் வேண்டும்
என்று நீ
கனவுகள் காண்கினேயோ?

ஓடேன்.
அமர்வேன்
நான் என்றுமே
இங்குதான்.
நான் கொள்ளும் – ஓர்
தரிசனத்தில்
என்னை ஒத்த
மனிதரை உருவாக்கிட
எனை ஒத்த மனித இனத்தை
படைத்தளித்திட..
அவர் தாம்
அல்லலுற,
அழ,
அவர்களாகவே
இன்புற,
திளைத்து எழுந்து
உன்னையும் இகழ்ந்திட
இங்கேயே,
எனைப் போலவே..

# ஜெனிவா கண்ணோட்டத்தில்

# இலங்கை இந்திய உறவு முறைகள்...

## சில கேள்விகள்...?

-சிதம்பரநாதன்-

> **13வது திருத்தம் – இரு இறைமைப் பூண்ட நாடுகளின் உடன்பாட்டின் விளைப்பொருள் – ஒரு தலைப்பட்சமாக சிதைக்கப்பட முடியாதது**
>
> – இந்தியா.



இந்திய வெளிவிவகார அமைச்சர்

கடந்து சென்ற வருடத்தை எடுத்துக் கொண்டால், இலங்கை-இந்திய உறவுகள் கடந்த வருடத்தின் நடுப்பகுதியிலும் பின், அதன் பிற்பகுதியிலும் தமது ஊசலாட்டத்தின் அதிவுயர் வீச்சினையடைந்து மீண்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வூசலாட்டங்களின் ஒரு முனை சீர்குலைவு என்றால் அதன் மறுமுனை, “நேர்த்தியானதொரு சிநேக உறவு“ என்று தப்பபிப்ராயம் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. மாறாக இம்மறுமுனையை வெறுமனே பேச்சளவில் இருக்கக் கூடிய ஒரு சகஜமான “உறவுத் தோற்றம்“ என்று கொள்ளுதலே பொறுத்தமானது.

சென்ற ஏப்ரல்-மே காலப்பகுதியை நோக்குவோமானால் இவ் உறவுகளின் மீது பல அழுத்தங்களின் பிரயோகிப்புகளும், பின் அவை தொடர்பான நிராகரிப்புகளும் மாறி மாறி ஏற்பட்டு, இழுபறியின் தீவிரம் மேற்குறித்த உச்ச நிலைகளை அடைந்து அடைந்து மீண்டிருப்பதைக் காணலாம்.

## 13வது திருத்தம் – இலங்கை, இந்திய நிலைப்பாடு

அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை மீள ஓர் திருத்தத்துக்கு உட்படுத்தி, மாகாண சபையை காயடித்தே தீர்ப்பது அதுவும் வடமாகாணசபைத் தேர்தல் இடம்பெறுவதற்கு முன்னதாக - என்ற ஓர் அரச-கங்கணத்தின் பின்னணியில், இந்தியாவின் நெருக்குதல்கள் தமது உச்ச நிலையை அடையத்தொடங்கின என்பது உண்மைதான். இவ்வருடத்தின் மே மாத ஆரம்ப அளவில் முளைவிட்டு நன்கு வேர்பிடிக்க ஆரம்பித்த அம்முன்னெடுப்பினை தொடர்ந்து, மாதத்தின் நடுப்பகுதியளவில் இடம்பெற்ற குர்ஷித்-பீரிஸ் தொலைபேசி தொடர்புகள், இலங்கை அரசினது 13 திருத்த யோசனை தொடர்பிலான இந்தியாவின் தீர்க்கமான நிலைப்பாடுகள் ஆகியவை சமரசமற்ற முறையில் முன்னிறுத்தி வைக்கப்பட்டன.

13வது திருத்தமானது இலங்கை-இந்தியா என்னும் இரு இறைமைப் பூண்ட நாடுகளிடையே செய்து கொண்ட ஓர் உடன்பாட்டின் விளை பொருள் என்ற ரீதியில் அஃது சர்வதேச சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது என்றும், தனியொரு பகுதியினரால் ஒருதலைப்பட்சமாக, அது திருத்தத்திற்கோ அன்றி சிதைவிற்கோ உட்படுத்தப்படலாகாது என்ற நிலைப்பாடு மேற்படி 13வது திருத்தம் தொடர்பில் முதற்தடவையாக இந்தியாவால் அரங்கேற்றப்பட்டது. இவை, இலங்கை-இந்திய உறவுகளை ஓர் எதிர்மறைப் புள்ளியை நோக்கி உந்தி செலுத்திய காரணிகளில் முக்கியமான ஒன்றாக அடையாளம் காணப்படலாம்.

## சீனா இந்தியாவுடன் தான் கொண்டுள்ள வர்த்தக – ஏனைய நலன்களை விடுத்து, இலங்கைக்காக இந்தியாவுடன் பகைமைக்கொள்ளுமா, இலங்கைச் சார்பாக களத்தில் இறங்குமா?

இது ஒருபுறம் இருக்க, இந்தியாவின் இந்நிலைப்பாடானது இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்காத ஒன்று. அதாவது, 13வது திருத்தம் சிதைக்கப்படுவதோ அன்றி முற்றாக அழித்து ஒழிக்கப்படுவதோ, முற்றாய் ஓர் உள்நாட்டு விவகாரம் சம்பந்தமானது என்ற வகையில் பேசியும் நடந்தும் வந்த ஒரு பேரினவாத சுவாத்தியச் சூழலில், மேற்படி கூற்று வெறும் ஒரு சவாலாக மாத்திரம் அமையாமல் ஓர் சர்வதேச சட்ட அடிப்படையில் இந்தியா அதனை எதிர்க்கவும் - எதிர்திசையில் பயணப்படவும் தயாராகி வருகிறது எனும் அச்செய்தி இலங்கையின் வெளிவிவகார துறையை ஆட்டங்காண வைத்த செய்தியாக, அரசியல் அவதானிகள் கொண்டதில் தப்பில்லை என்றாகிறது.

காரணம், 13வது திருத்தத்தின் அடிப்படையில், வடகிழக்கு ஒருங்கிணைப்பு, சில வருடங்களின் முன், இலங்கை உயர்நீதிமன்ற ஒத்தாசையுடன் பிரிக்கப்பட்ட போது, இந்தியா இவ்வாதத்தினை எடுத்திருந்ததாக தெரியவில்லை என்றாலும் புலிகளின் அரசியல் ஓங்கியிருந்த அக்காலப் பகுதியில், இந்தியாவின் அத்தகையதோர் மௌனத்திற்கான காரணங்களை ஊகித்தறிவதில் அதிக சிரமங்கள் இராது என்பதும் புரிந்துக்கொள்ளக்கூடிய ஒன்றே.

இந்தியாவின் மேற்படி அணுகுமுறைகளை இலங்கை முகங்கொடுக்க நேர்ந்த சில தினங்களிலேயே இலங்கை தனது எதிர்நகர்த்துதலை தீவிர உற்சாகத்துடன் மேற்கொள்ள தலைப்பட்டது.

குர்ஷித்-பீரிஸ் தொலைதொடர்பு ஏற்பட்டு - இன்னும் கறாராக கூறினால், குர்ஷித்தின் நெருக்குதல்கள் ஏற்பட்டு, கிட்டத்தட்ட எட்டு தினங்கள் முடியும் முன்னரே எதிர்நடவடிக்கையாக இலங்கை-சீன சந்திப்பு பீக்கிங்கில் மே 25 அளவில் இடம்பெற்றது.

குர்ஷித்தின் “முறையற்ற பேச்சால்” அல்லது “முறையற்ற வேண்டுகோளால்” உற்சாகம் குன்றியிருந்த இலங்கையின் ரத்த நாளங்களுக்கு ராஜபக்ஷவின் இச்சீன விஜயம் புது ரத்தத்தை பாய்ச்சியதாகவே காணப்பட்டது. போதாததற்கு, அடுத்துவந்த தினங்களில் (02.06.13) இலங்கைப் போர்க்கப்பல்கள் கச்சத்தீவுக்கு அருகாமையில் நங்கூரமிட்டன எனும் செய்தியும், தொடர்ந்து ஹெலஉருமய, 13வது திருத்தம் தொடர்பிலான தன் பிரேரணையை, ஓர் தனியார் பிரேரணையாக பாராளுமன்றத்தில் சமர்பித்து முன்மொழிய முற்படுகின்றது என்ற செய்தியும், சீனம் பாய்ச்சிய இப்புது ரத்தித்தின் விளைவாக அன்றி வேறு ஒன்றாக



இந்திய, சீன பிரதமர்கள்

**'குவாடர்'' துறைமுகமானது இந்தியாவிற்கான எண்ணெய்க் கப்பல்களைத் தடைசெய்யக்கூடிய கேந்திரப் புள்ளியில் அமைந்துள்ளது.**

இருக்க முடியாது என்பதும் பரவலாக நம்பப்பட்டது.

இக்கச்சைக் கட்டுதலின் தொடர்ச்சியாக, அடுத்துவந்த சில தினங்களில் "13"ஐ ஒழித்துக்கட்ட பொதுபல சேனா, சிங்கள ராவய உட்பட மொத்தமாய் 28 அமைப்புக்களின் இணைவு நிகழ்ந்துள்ளதாகவும் கூடவே பல் சேர்ந்தது.


இவற்றை எல்லாம் கணக்கில் எடுத்து நிதானிக்கும் போது, எங்கோ, ஒப்பீட்டளவில், தொலைதூரத்தில் இருக்கக் கூடிய சீனத்தின் உறவு மாத்திரமே இப்புதுரத்தப் பாய்ச்சலுக்கான காரணியாக இருந்திருக்கக் கூடுமா அன்றி இப்புதுரத்தப் பாய்ச்சலில் பின்னணியில் வேறு நலன்களும் பங்கேற்றிருக்கக் கூடுமா எனும் கேள்வி இயல்பாக எழக்கூடிய ஒன்று தான்.

காரணம், இலங்கைக்காக அல்லது இலங்கையை மையம் கொண்ட தனது ஒரு சில நலன்களுக்காக சீனானது மிகப்பெரிய வர்த்தகக் கூட்டா

கப்பல்களை துணிச்சலுடன் நங்கூரமிடச் செய்யவும், குர்ஷித்-பீரிஸ் இழுபறியின் பின்னணியில் இந்தியாவின் முகத்தில் அடித்தாற் போல் ஒரு சீன விஜயத்தை மேற்கொள்ளவும், மேலும் முக்கியமாக இந்தியாவின் சார்பில் உத்தியோக பூர்வமாக விடுக்கப்பட்ட யோசனையை கேள்விக்கேற்பாரற்ற முறையில் நிராகரிப்பதாகவும் வினையாற்ற இங்கே மேலதிக ஏவுகணை ஒன்று தேவையாகின்றது.

இத்தொடர்பிலேயே அண்மைக் காலமாக நடந்தேறும் அமெரிக்க-இந்திய உறவுமுறைகள் நுணுகி நோக்கத் தக்கன.

**அண்மைய கால அமெரிக்க-இந்திய உறவுகள் :**




பாகிஸ்தானின் குவாடர் துறைமுகம்

வேறு கோயில் சிலைகள் ஆங்காங்கு உடைபடுவதாகவும் செய்திகள் வெளிவந்தனவாய் இருந்தன.

இப்போக்கிற்கு சிகரம் வைத்தாற் போல் தொடர்ந்து வந்த நான்கு தினங்களில், (16 ஜூன் 2013) உத்தேச அரசியலமைப்புத் திருத்தத்தை வட மாகாணசபைத் தேர்தல் முடியும் வரை பிற்போடுமாறு இந்திய அரசாங்கம், இலங்கை தூதுவர் பிரதீப் காரியவசந் ஊடாக விடுத்த உத்தியோகபூர்வமான கோரிக்கையை இலங்கை அரசு முற்றாய் நிராகரித்து விட்டது என்ற செய்தியும் வந்து


ளிகளில் ஒருவரை தாரைவார்க்காது என்ற புரிதல் இலங்கையிலும் இல்லாமல் இருப்பது சற்றே கடினம் தான். (2011 இல் மாத்திரம் இந்திய சீன வர்த்தகத்தின் பெறுமதி 73.9 பில்லியன் டொலர்களாக இருந்தது). அதாவது, தீர்க்கமான ஒரு நெருக்கடியில், சீனா இந்தியாவுடன் தான் கொண்டுள்ள வர்த்தக-ஏனைய நலன்களை விடுத்து, இலங்கைக்காக இந்தியாவுடன் பகைமைக் கொள்ளுமா இலங்கைச் சார்பாக களத்தில் இறங்குமா என்பதெல்லாம் அடிப்படைகள் சார்ந்த வினாக்கள்தாம்.

ஆகவே, கச்சத்தீவில் தனது போர்க்

மேற்கின் வாய்ப்பாடுகளில் ஒன்றான சீனாவின் முத்துமாலை, உண்மையில் சீனத்தின் பாதுகாப்பு தொடர்பிலான ஒன்று மாத்திரமா அன்றி இந்தியாவின் கழுத்தைச் சுற்றி நெரிக்கும் ஓர் போக்கினையும் மையமாகக் கொண்டதாக உள்ளதா என்பதெல்லாம் இன்று ஆழமிக்க கேள்விகளாகவே உருவாகி வருகின்றது. ஏனெனில் சீனத்தின் முத்துமாலையின் பெரும் பகுதி இந்தியாவைச் சுற்றி எழுப்பப்படும் வேலியாக மறுபுறத்தில் செயற்படக்கூடியதாகவும் உள்ளதை நிராகரிக்க முடியாது.



தாய்நாடு திரும்பிய மகிழ்ச்சியில் தேவயானி.



முன்னாள் இந்திய ஜனாதிபதியும் அணுவிஞ்ஞானியுமான அப்துல்கலாம்.

அதாவது, முத்துமாலைக்கூடாக சீனம் தனது பாதுகாப்பை முன்னெடுக்கக் கூடும் என்றாலும், இம்முன்னெடுப்புக்களின் மறுபுறம் இந்தியாவிற்கெதிரான நெருக்குதல்களை உருவாக்குவதை உள்ளடக்கியே உள்ளதெனில், அதனைக் கண்டும் காணாத ஓர் போக்கினை "மேற்கு" திட்டமிட்ட முறையில் மேற்கொண்டு வருகிறதா எனும் கேள்வி மறைக்கப்பட முடியாத ஒன்றாகும்.

உதாரணமாக, சீனத்தின் முத்துமாலை தொடரில் மிக இறுதியாக வந்து இணைந்துக்கொண்ட முத்து (கன்னி) பாக்கிஸ்தானின் "குவாடர்" துறைமுகமாகும்.

"குவாடர்" துறைமுகமானது இந்தியாவிற்கான எண்ணெய்க்கப்பல்களைத் தடைசெய்யக்கூடிய கேந்திரப் புள்ளியில் அமைந்துள்ளது.

இனி, அமெரிக்காவின் நேரடி செல்வாக்கிற்குள்ளும் கண்காணிப்புக்குள்ளும் சிக்கியுள்ள பாக்கிஸ்தான் (மேலோட்டமான, எதிர்ச் சித்திரங்கள் உண்டு என்றாலும்) தனது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகத்தை சீனாவிற்கு தாரைவார்க்கச் சம்மதிக்கும் எனில் (அதுவும் அமெரிக்கா சீனாவிற்கு எதிராக ஆசிய நகர்வை (Pivotal) ஏற்படுத்தியுள்ளது என்று கோஷமெழுப்பப்படுகின்ற ஓர் பின்னணியில்) குவாடர் துறைமுகம் தொடர்பிலான மேற்கின் மறைமுக ஆமோதிப்பின்றி மேற்படி தாரைவார்ப்பை பாக்கிஸ்தான் சீனாவுக்குத் தந்திருக்க முடியாது.

**தேவயானிசெய்தி வந்த மறுதினமே இலங்கை அரசு, இந்திய எண்ணெய்க் குதங்களை மீளப்பெறுவதற்கான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் என்று பிரகடனப்படுத்தியது.**

இனி இதன் எதிர் நகர்வாக இந்தியா ஈரானின் துறைமுகமான "சாபார்" துறைமுகத்தை பொறுப்பேற்பதில் வெற்றிகண்டது. (சாபாருக்கும் குவாடருக்கும் இடையிலுள்ள தூரம் வெறும் 76 கிலோமீட்டரே ஆகும்) இது ஒருபுறமிருக்க, இந்துசமுத்திரப் பிராந்தியத்திற்கு, சீனாவை விட அமெரிக்காவின் அச்சுறுத்தலே பாரியது என்று இக்காலப்பகுதியில் ஆற்றப்பட்ட முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாமின் கூற்றும் (பின்னர் சற்றே திருத்தம் செய்யப்பட்டாலும்) சற்றே அவதானிக்கத்தக்க ஒன்றே.



தேவயானியின் கைதை தொடர்ந்து இந்தியா அமெரிக்க தூதுவராலயத்திற்கு வழங்கியிருந்த பாதுகாப்பு வேலியை அகற்றும் சந்தர்ப்பம்.

23ம் பக்கம் பார்க்க

**● சிறுகதை**

சிறுவன், திரட்சி என்பது, மோனத்திருக்குமடி வையம் போன்ற சிறப்பான முத்திரைக் கதைகளைத் தந்த இராமையா முருகவேலின் இன்னொரு சிறப்புக் கதை

# ஆசாரி...

-இராமையா முருகவேல்-



இன்று சனிக்கிழமை, லயத்தில் சந்தடி அதிகமாகவே இருந்தது. அம்மைநோய் காரணமாக நான் வெளியில் செல்லவில்லை.

ஆனால், வெளிச் சூழலை என்னால் உணரக்கூடியதாய் இருந்தது - செல்வத்தின் மகள் போடும் கூச்சல், ஊமையனின் அரட்டைகள், கோபால் மகனின் நாணல் தட்டையிலான குழலோசை, கோழியை விரட்டிய டிக்கும் செல்லா... தொடர்ந்து தெய்வானை அக்காவின் எச்சரிக்கைக் கூப்பாடு, "ஏய் அடியே... அடே... அடே... கொலவாரிகளா சத்தம் போடாதீங்க... அம்மா பார்த்த வீடு இங்கத்தானே இருக்கு... இப்படி கத்துறீங்களே" அனைத்தும் ஒன்று சேர்ந்து ஒலித்துக்கொண்டிருந்தது.


ஆனால் எனக்கு, மனம் என்னவோ குமைந்தவாறே இருந்தது...

நேற்றுத்தான் தெய்வானை அக்கா, ஆசாரி பொறுத்த செய்தியை கூறிக் கொண்டிருந்தாள்; "ஆசாரிக்கு சுகமில்லை... நாவலப்பிட்டி ஆஸ்பத்திரிக்கு கொண்டு போய் விட்டாங்க..." அச்செய்தியின் அடிமுடி இதுவரை எனக்கு ஒன்றும் எட்ட வில்லை. போதாதற்கு, இதை லயத்தில் யாரும் என்னிடம் கதைக்காதது வேறு என்னவோ போல் இருந்தது.

இந்த ஆசாரி அண்ணன் தான் எப்படிப்பட்ட மனிதர்! எனது பாடசாலை காலத்திலிருந்து இவர் என்னில் எத்தனை கரிசனைகளை அவ்வப்போது தெளித்திருந்தார். இவர்மீது எனக்கு ஒரு ஒட்டுதல் வருவதற்கான காரணத்தை நானே அறியேன். அவர் உருவமா? அல்லது அவர் எனக்கு வாங்கித்தந்த இனிப்புகளா...? அல்லது என் தந்தையோடு படம் பார்க்கப்போன போது என்னைத் தூக்கிவந்ததா? இல்லை, அவர் ஓர் உண்மையான பிரக்ஞை உள்ள தொழிலாளி என்பதாலா?

**இவர் என்னில் எத்தனை கரிசனைகளை அவ்வப்போது தெளித்திருந்தார். இவர்மீது எனக்கு ஒரு ஒட்டுதல் வருவதற்கான காரணத்தை நானே அறியேன். அவர் உருவமா? அல்லது அவர் எனக்கு வாங்கித்தந்த இனிப்புகளா...? அல்லது என் தந்தையோடு படம் பார்க்கப்போனபோது என்னைத் தூக்கிவந்ததா? இல்லை, அவர் ஓர் உண்மையான பிரக்ஞை உள்ள தொழிலாளி என்பதாலா?**

படம் பார்க்க அட்டனுக்குப் போன போது சனம் தலைக்குமேல ஏறி முண்டிக்கொடிருந்தது. நாங்கள் கியூவில் கடைசியாக நின்று கொண்டிருந்தோம். நான் ஊதா நிறத்தில் சட்டையும், அதே நிறத்தில் காற்சட்டையும் போட்டிருந்தேன். என் சட்டைக்



கழுத்துப்பட்டையில் கருப்பும் வெள்ளையும் கலந்த ஒரு "போ" இருந்தது அதை அடிக்கொரு தடவை தொட்டுப் பார்த்துக்கொண்டேன். இந்த சட்டையை அப்பா தைக்க, அதற்கு "போ" தைத்தது இந்த ஆசாரி அண்ணன்தான்.

அப்போதெல்லாம், இந்த ஆசாரி அண்ணன் அப்பாவிடம் தையல் பழகிக் கொண்டிருந்தார். என்னை... "சின்னத்தம்பி" "சின்னவர்" என்றுதான் அழைப்பார். இரண்டு வார்த்தைகளையும் ஒன்றாக இணைத்து அழைக்கும்போது அதில் ஒரு குழைவு, ஒரு சாந்தம் எல்லாம் வந்து என்னை தொட்டு பார்க்கும்.

நாங்கள் கியூவில் கடைசியில் நின்றிருந்தோம். கூட்டம் அலை மோதியது. சிலர் ஆட்களின் தலையில் ஏறியும் டிக்கட் பெற்றுக்கொள்ள முயற்சித்தனர், ஆசாரி அண்ணனுக்கு இயற்கையாவே ஒரு கால் கட்டை அதன் பாதம் வளைந்து பெருவிரல் மட்டுமே நிலத்தை எக்கித் தொட முயற்சிக்கும். மற்ற பாதம் சமாந்தரமாக இருக்கும். அதனால்

**ஆசாரி அண்ணனின் வருகை தேவையற்ற விதத்தில் மிகவும் சுணங்கியதும் அப்பா தைப்பதை நிறுத்திவிட்டு தோளில் கிடந்த "டேப்பை" உருவி லாச்சியில் போட்டு டப்பென்று மூடினார். நான் நினைத்தேன் அப்பா, அண்ணாவை கூட்டிவரப்போகின்றார் என்று.**

அவர் நடக்கும்போது உடலில் எல்லா பாகங்களும் குலுங்கி தாழ்ந்து உயரும். மிகவும் கஷ்டப்பட்டே நடந்து திரிவார். இருந்தும் இதை ஒருபோதும் அவர் தாழ்வாக, ஒரு பாரமாக எண்ணிக்கொண்டதாக எனக்கு என்றுமே தெரிந்ததில்லை.

என்ன செய்தார், எதைச் செய்தார் தெரியவில்லை, நொண்டி அடித்து டிக்கட் வாங்கி எங்களை படம் பார்க்க வைத்துவிட்டார். படம் பார்க்கும் போது எனக்கு இனிப்பு, கடலை என கைநிறைய வாங்கித்தந்து என் திருப்தியைக் கவனிப்பதில் அவதானமாக இருந்தார். இடையிடையே இவர் இந்த நடிகர், இப்படி சண்டைபோடுவதில் கெட்டி, என்றெல்லாம் ஓர் தொடர்விளக்கம் தந்து என்னை படம் முடியும்வரை ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்தார்.

அன்று அப்படித்தான், அண்ணா ஸ்கூல் முடிந்து வீட்டுக்கு வர சுணங்கிவிட்டது, அப்பா குழப்பத்தில் இருந்தார். நேரம், மாலை ஆறு மணியையும் தாண்டி விட்டது. அம்மாவுக்கு விழி ஓரத்தில் கண்ணீர் முட்டத் தொடங்கிவிட்டது. அப்பாவை ஒரு பார்வை பார்த்துவிட்டு உள்ளே சென்று கண்ணைத் துடைத்துக் கொண்டு வந்து, மீண்டும் கதவு நிலையில் சாய்ந்து நின்றுக்கொண்டு பக்கத்தில் நின்ற என் தலையை மெல்ல கோதத் தொடங்கினாள், தன்னை அறியாமல்.

"என்னங்க ஆசாரியையாவது அனுப்பிப்பாருங்க..." என்று மெல்ல சொல்லும் போதே அம்மா அழுதுவிட்டாள்...

"ம்... சரி.... சரி... சொல்லிவிட்டிருக்கேன்... ஆசாரி வரட்டும்" - அப்பா தைப்பதில் மூழ்கிவிட்டார்... தையல் மெசினின் தடதடத்த சத்தம் இதயத்தையும் அதிரவைத்துக் கொண்டிருந்தது. நாங்கள் இந்த ஆசாரி அண்ணன் வருவதை எதிர்பார்த்து காத்திருந்தோம்.

ஆசாரி அண்ணனின் வருகை தேவையற்ற விதத்தில் மிகவும் சுணங்கியதும் அப்பா தைப்பதை நிறுத்திவிட்டு தோளில் கிடந்த "டேப்பை" உருவி லாச்சியில் போட்டு டப்பென்று மூடினார். நான் நினைத்தேன் அப்பா, அண்ணாவை கூட்டி வரப்போகின்றார் என்று.

"அப்பா நானும் வரட்டா?"

“நா அங்கப் போகலடா குட்டி” ஆசாரியை பார்த்து அனுப்பிவிட்டு இத வந்து தைத்து முடிக்கனும்... “நீ இங்க இதுக்கு பொத்தான கட்டித் தா?” என் கன்னத்தை வருடி முத்தமிட்டு விட்டு, வெளியில் இறங்கி விட்டார்.


“அன்று இரவு எட்டு மணிதாண்டியே ஆசாரி அண்ணன், அண்ணாவை கூட்டிவந்தார். அம்மா கட்டுக் கொள்ளாது அண்ணனை வாரி அணைத்துக்கொண்டு “சாமி... வந்துட்டியா... ஏம்ப்பா... இவ்வளவு நேரம்...” என உச்சிமுகரத்தொடங்கினாள். அண்ணாவால் பேசமுடியவில்லை. கோபமும் பசியும்... களைப்பும் அவனைத்தள்ளாட வைத்தது போலும்.

சீடிபி பஸ்சு இல்லாமா.... “சீசன்” னதும்... மத்த பஸ்சுல எல்லாம் ஏத்த மாட்டேங்கிறானுங்க.” எனக் கூறிக் கொண்டே அம்மாவிடம் இருந்து விடுப்பட்டு அப்படியே கட்டலில் உட்கார்ந்து விட்டான்!

அண்ணனின் புத்தக பேக்க.. ஆசாரி அண்ணனே தூக்கி வந்திருந்தார்.. அவர் என்னிடம் பேக்கை கொடுத்தார்...

“இந்த பஸ் கண்டக்டர் எல்லாம்... தமிழ் பயலுகனா ஏத்தமாட்டானுங்க... எப்பப்பாரு இதே எலவு தான்” என்று... திட்டிக்கொண்டே, “மைய்னி... பெரிய தம்பிக்கு சாப்பாடு கொடுங்க, பகல் சாப்பாடு... கூட இல்லாம... இவ்வளவு தூரம் நடந்து வந்திருக்கான்... நானும் “பெற்றோல்செட்” கிட்ட போய் நின்னேன். மத்த பஸ்ல வந்து எறங்குன பயலுக சொன்னானுங்க. பெரிய தம்பியும் இன்னும் ரெண்டு பயலுகளும் அட்டன்ல இருந்து நடந்து வாராங்கனு... நான் கிளங்கன் வரைக்கும் நடந்து போனேன்... அங்க, நடந்து வந்துட்டானுங்க... இருட்டு வேற” என்று கூறிக்கொண்டே பக்கத்து வீட்டுக்குப் போய் விட்டார்.

சிறிது நேரத்திற்குள் திரும்பி வந்தார். அண்ணன் சாப்பிடுவதை கருணையோடு பார்த்துக்கொண்டிருந்தார். அம்மா, ஆசாரியண்ணனுக்கு காட்டமும் கருப்பட்டியும் கொடுக்க, வாங்கி சுவைத்து முடித்தார். கைவிரல்களில் ஒட்டிக்கிடந்த கருப்பட்டி பாகுவின் பிசுபிசுப்பை போக்கிக்கொள்ள மென்மையாக நாக்கில் விரல்களை வைத்து, சுவைத்



தெடுத்தார் - தேனீர் கோப்பையை என்னிடம் நீட்டிவிட்டு அண்ணாவை கூப்பிட்டு பக்கத்து வீட்டில் வாங்கி வந்த சூடத்தைல எண்ணெய்யை பூசி நன்றாக கால்களைத் தேய்த்து விட்டார்... அவரின் காப்புகாய்த்து முரடுதட்டிப்போன உள்ளங்கையின் பிடிப்பால் அண்ணா முணங்கி கிடந்தான்.

“கிளாஸ் முடிச்சிட்டு அஞ்சர பஸ்சுல... ஏறிரு... கடைசி பஸ்ஸ நம்பியிருக்காத” என அவனுக்கு உபதேசம் கூறிக்கொண்டிருந்தார். அவரின் வார்த்தைகள் அவனுக்கு மட்டுமல்ல. எங்களுக்கும் இதம் தந்தது. அப்படி குழைத்துக் கூறுவது அவர் வழக்கம்.

“சரி அண்ணே நா வரட்டா...” என அப்பாவிடம் தான் செல்வதற்கு அனுமதியை கோரினார்...

“என்ன. ஆசாரி... இரு... இத முடிச்சிர்றேன்.... காசான் புடிச்சிரு...”

அப்பா மொழிய ஸ்டுலில் நெளிந்தார். கைகளுடன் உடம்பை முறுக்கி “ம்...ம்..” என சோம்பல் முறித்தார்.

“இல்லண்ணே, வந்து, இன்னைக்கு நாடகம் பழக...” என இழுத்தார். அப்பா தையல் மெசினை நிறுத்தி இவர் பக்கம் திரும்பி... “இப்ப பொங்கல், தீபாவளி ஏதும் வரலயே! அப்ப எதுக்கு இப்ப நாடகம்”

“அதுக்கு இல்லண்ணே... அட்டன்ல ஒரு போட்டி இருக்கு. அதுக்காக பழகுறம்... பெனடிக்தான் பழக்குராரு...

“சரி... சரி... நல்லா செய்... வழம மாதிரி இதுவும்... ஹாசியம் தானா....”

முகமெல்லாம் பிரகாசிக்க... உற்சாகமாய், “ஆமாண்ணே... ஒரு கோமாளி டான்ஸ்வேற... “என்றார்.

பறங்கி தொரையை... பார்த்து
பல்ல காட்டி
பழைய சேட்ட நீவி விட்டு
வேட்டிய மடிச்சுக் கட்டி
செருப்ப கக்கத்தில் வச்ச காலம்
மலையேறி போச்சி... மச்சான்
மலையேறி போச்சிமச்சான்.

பாட்டை ஒருவித ராகத்தோடு பாடி சேட்டை இழுத்து விட்டு... செருப்பை கழட்டி கை இடுக்கில் வைத்து, பதுங்கி பதுங்கி, வளைந்து நெளிந்து,

**பாட்டை ஒருவித ராகத்தோடு பாடி சேட்டை இழுத்து விட்டு... செருப்பை கழட்டி கை இடுக்கில் வைத்து, பதுங்கி பதுங்கி, வளைந்து நெளிந்து, கூனிக் குறுகி நிமிர்ந்து.... "மலையேறி போச்சி மச்சான்..." என்ற போது மாத்திரம் நெஞ்சை சாடையாக நிமிர்த்தி... நிறைவாக காலை விறைத்தது அது ஹாசியமாக படவில்லை.**

கூனிக் குறுகி நிமிர்ந்து.... "மலையேறி போச்சி மச்சான்..." என்ற போது மாத்திரம் நெஞ்சை சாடையாக நிமிர்த்தி... நிறைவாக காலை விறைத்தது அது ஹாசியமாக படவில்லை.

"ம்... பரவாயில்லையே" என்று அப்பா ஆமோதிக்க, சாரத்தை சரி செய்து கொண்டு... பவ்வியமாய் நின்றார்...

அந்த பவ்விய கோலம்.... அந்த ஆட்டம் இன்னும் மேக துகிலாய் என்மேல் கவிந்து சென்றது.

எப்போ பாரு... ஒரு பழைய பாடலை முணுமுணுத்துக் கொண்டிருப்பாரே இந்த மனுஷன் என்று சகாக்கள் அவரது மனத்திண்மையை வரவேற்றனர்.

❖❖❖

அமாவாசை இருட்டு மிக விரைவாக அன்று கவ்விக்கொண்டது. விளையாட்டை நாங்கள் நிறுத்தி விட்டோம்... அப்போதுதான் எனக்கு ஞாபகத்தில் தட்டியது. அம்மா டவுனுக்கு போய் சாமான் வாங்கி வரச் சொன்னது. நான் கொண்டு வந்திருந்த "உமல்" கிரவுண்ட் ஓரமாக பத்திரமாக இருந்தது... "செல்வம் வாடா இப்படியே ஆத்தோட டவுனுக்கு ஓடிட்டு வந்திருவோம்..." என அவனை கெஞ்சினேன். "மனோகரனையும் கூப்பிடு, போய்விட்டு வந்திடுவோம்" என்றான் செல்வம்.

"மனோகர், வா டா... டவுனுக்குப் போயிட்டு வந்திடுவோம்.."

"எங்க அப்பா டவுனுக்கு போயிருக்கு... கண்டா பிச்சுப்புடுவாருடா..."


"இல்லடா, போனதுமே முன்னுக்குள்ள கடையிலையே, வாங்கிட்டு வந்துருவோம்"

"சரி... சரி...."

நாங்கள் மூவருமாய், ஆத்துரோட்டுக்கு ஓட்டமாக ஓடினோம். எங்களுக்கு இடுப்பளவுதான் தண்ணீர் இருக்கும், பெரியவர்கள் சாரத்தை மடித்துக் கொண்டு நடந்து கடந்து விடுவார்கள். நாங்கள் கால்சட்டையை கழட்டி தலையில் மாட்டிக்கொண்டு துள்ளிக்குதித்து போவோம், அன்று இருள் விரைவாகவே கவ்விக்கொண்டிருந்தது. நாங்கள் ஆற்றைக் கடக்கும்போதே மனோகரனின் அப்பா அக்கரையில் மூட்டை முடிச்சோடு பேய் போல நின்றிருந்தார். ஆனால் என்ன நினைத்தாரோ தெரியவில்லை, வழமைக்கு மாறாக இவனைத்திட்டத்தொடங்காமல், "மனோகரா... வா... வா... வந்து இந்த லாம்பெண்ண கேனை எடுத்து தலையில வச்சிக்க" என்று அழைத்து, அவனைத் திரும்பவும் அவருடனேயே அழைத்துப்போய்விட்டார்.

நானும் செல்வமும் வேக வேகமாக கரையைத் தாண்டி ஓட்டமும் நடையுமாக டவுனுக்குப் போய் சேர்ந்தோம். பின், வேக, வேகமாக சாமான்களை வாங்கி "உமலில் போட்டுக் கொண்டு திரும்பினோம். எங்குமே இருட்டு, பாதைகூட சரியாக தெரியவில்லை. தனியாக நடப்பதின் பயத்தில் அவசர அவசரமாக எட்டி நடந்தோம். எங்கள் தோட்டத்து ஆட்கள் யாராவது வருகிறார்களா, என்று ஏங்கி ஏங்கி முன்னும், பின்னும் பார்த்து நடந்தோம். அப்போதுதான் அருமையப்பன் கங்காணி டார்ச்சோடு எதிர்த்தாற்போல், டவுனுக்கு வந்துக் கொண்டிருந்தார்... "கங்காணி ஐயா, கங்காணி ஐயா, நம்ம தோட்டத்து ஆளுக யாரும் ஆத்து ரோட்ல போறாங்களா..." என செல்வம் கேட்டான்.

"ஏய்... என்னங்கடா... சின்னப் பயலுக இவ்வளவு நேரமா டவுன்ல என்னடா செய்றீங்க. உங்க ஆட்டத்துக்கு அளவே இல்லாம போச்சு, ம்... கொஞ்சம் முன்னுக்குத்தான் ஆசாரியும் கரட்டானும் போறாங்க... ஓடிப்போய் புடிச்சுக்கங்க..." என்று உறுமிபின்,



"இருட்டுல எதக்கண்டும்....." என பயமுறுத்த தொடரும் முன்பே நாங்கள் "உமலோடு' விரையத் தொடங்கினோம், ஆசாரியை, எட்டிப் பிடிக்க. இருளில் யாரும் முன்னால் போவது தெரியவில்லை.

"அண்ணே.... கொஞ்சம் நில்லுங்க...."

சும்மா ஆள் தெரியாமல் கூவி வைத்தோம்.... எங்கள் சத்தம் எந்த பதிலொலியும் இல்லாமல் இருளில் அமுங்கிப்போனது. போதாததற்கு மூங்கில் புதர்களில் அடைந்திருந்த காக்கைகள் வேறு சத்தத்தைக் கேட்டு, ஆட்சேபனை தெரிவிக்கும் வகையில் சடசடத்து ஒரேடியாக கரையத் தொடங்கின. இதனுடன் சேர்ந்து எங்களுக்குள் இருளின் பின்னணியில் செந்நாக்குத் தொங்கும் இரத்தக்காட்டேரியின் நினைவும் சேர்ந்து வர, இன்னும் வேகமாய் ஓடினோம், மூச்சு வாங்கி, உமலுடன்.

"அண்ணே... யாருங்க முன்னுக்குப் போறது..." மீண்டும் செல்வம் கண்மண் தெரியா இருட்டில், ஊகத்தில் மூச்சு வாங்கி கொண்டு குரல்



**இருளில் மின்னிய கரிய நீரோட்டத்தை தள்ளி விலக்கி நிலத்தை முத்துமிடும் அவரது காலின் ஒற்றை விரல் ஆற்று அடி மணலில் தடம் பதித்து முன்னேறிக்கொண்டிருந்தது. இடையோடு என் கால்களை பின்னி பிடித்துக்கொண்டு அக்கரை சேர்த்தார்.**

கொடுத்தான். எந்த பதிலும் கிடைக்கவில்லை. இருட்டு, மீண்டும் மூச்சு வாங்க விரைந்து போனோம். ஆற்றங்கரையை அணிமிக்கும்போது "அண்ணே... யாரும் முன்னுக்குப் போறிங்களா....?" இப்போது, நான் குரல் கொடுத்துப் பார்த்தேன். "யாரப்பா அது.... பின்னுக்கு வாரது?" - அப்பாடி! ஆசாரியின் குரல், உயிர் வந்தது. நாங்கள் வரும்வரை அவர்கள் காத்திருந்தார்கள். இருட்டிலும் அவர்களின் தோற்றத்தைக் கொண்டு அவர்களை எங்களால் இலகுவாக இனங்காண முடிந்தது.

"என்னா சின்னவரு... இவ்வளவு நேரமாகி..."
"அம்மா சாமான் வாங்கி வரசொன்னுச்சி.... வெளாண்டதுல மறந்துட்டே அண்ணே" என்று உண்மையைக் கூறிவிட்டேன் நான்.

"சரி.. சரி.... கொண்டா பேக்க..." என உமலை வாங்கி எடுத்துக்கொண்டு ஆற்றங்கரை பாதையில் முன்னால் சென்றார். யாருமே பேசவில்லை. கரட்டான் மட்டும் பீடியை பற்ற வைத்து இரண்டு இழுப்பு இழுத்து விட்டு, பீடியின் நுனியை திருப்பி அதன் செந்தனலை இருட்டில் பரிசீலித்து விட்டு, தீக்குச்சியை கீழே வீசினார். தீக்குச்சு ஒளியால் பாதை ஒருகணம் தெளிவு பட்டு மறைந்தது. மீண்டும் இருட்டு.... செல்வம், பயம் காரணமாய், என்னைப் பற்றி இழுத்து பின்னால் தள்ளிவிட்டு எனக்கு முன்பாக நகர்ந்தான். ஒற்றை யடிப்பாதை என்பதால் ஒருவர் பின் ஒருவராய் முன்னகர்ந்தோம். ஆற்றங்கரையை அடைந்தவுடன், கரட்டான் ஆசாரி அண்ணனிடம் இருந்த உமலை வாங்கிக்கொண்டு, செல்வத்தை அப்படியே ஒத்தக்கையால் வாரி, அவன் பிருஸ்டத்தில் உமல் பிடித்திருந்த கையைக்கொடுத்து தோளில் வைத்துக்கொண்டு, விருவிறுவென ஆற்றில் இறங்கி விட்டார்.... ஆசாரி அண்ணன் சாரத்தை மடித்துக் கட்டிக்கொண்டு ஆற்றில் இறங்கினார். நான் இறங்குவதற்கு எனது காற்சட்டையை கழற்ற தயாரானேன்.

"சின்னவரு.... உப்புக்குட்டி ஏறிக்க நா தூக்கிட்டு போறே..." என்றார்.

எனக்கு சங்கடமாக இருந்தது. அவரது காலின் குறை என்னைக் குத்தியது! "இல்லண்ணே... நான்.. வந்திருவேன்... நீங்க போங்க... முன்னுக்கு..." என்று இழுத்தேன். நான் இறங்குவதற்கு முன்பாகவே அவரின் கரங்கள் என்னை பற்றி இழுத்து முதுகில் தொங்கச் செய்து கொண்டன. ஒற்றைக் காலின் நிதானத்துடன், மிக லாவகமாக ஆற்றில் காலை ஒருவிதமாய் துலாவி துலாவி ஆற்றின் ஓட்டம் லபக் லபக் என்று சலசலக்க குறுக்கா நகர்ந்தார்.

இடையே என்னை முதுகால் அசைத்து தோளின் பாரத்தை ,சமப்படுத்தி... எனக்கு எதுவும் பேசமுடியாது இருந்தது. இருளில் மின்னிய கரிய நீரோட்டத்தை தள்ளி விலக்கி நிலத்தை முத்துமிடும் அவரது காலின் ஒற்றை விரல் ஆற்று அடி மணலில் தடம் பதித்து முன்னேறிக் கொண்டிருந்தது. இடையோடு என் கால்களை பின்னி பிடித்துக்கொண்டு அக்கரை சேர்த்தார்.

நாங்கள் சவேரியார் கோவிலை தாண்டி பாடமாத்திக்கு வந்தபோது திடீரென எரியும் பத்திக்குச்சியின் மணம் கம்மென்று அடித்தது. முன்னால் கரட்டான் "கொஞ்சம் இரு ஆசாரி, எவனோ எட்டுக்குச்சுக்கு வேலை செய்றானுங்க..." நாங்கள் இருளை துழாவினோம்..... எவனும் இருக்கானுங்களா....?" மனிதர்களின் நடமாட்டமே இல்லை. அல்லது எங்களைக் கண்டு அவர்கள் எங்கோ பதிங்கியிருக்க வேண்டும்.


"கரட்டான்..... வேனா..... வா போகலாம்...." ஆசாரி அண்ணன் இழுத்தார். "சின்ன பயலுக இருக்கானுங்க... பெறகு பார்ப்போம்...." என்று கூறிவிட்டு எங்களை இழுத்துக் கொண்டே போனார்.

நாங்கள் அரிசிக் காம்பிராவைத் தாண்டி தரப்பைண்ட் படி வழியாக வீட்டை நோக்கி விரைந்தோம். ஸ்டோர் லயத்து, தொங்க வீட்டில், உடுக்கு அடி கிடுகிடுத்து ஒலித்தது....

**"நாலு.... திக்குக்கும்.... நடுவுல...**
**அந்த தீர்த்தக் கரைக்கு முன்னால்....**
**ஹ.... கே....டும்....டும்.... டும்....டும்....**
**சுடலையா காவ நிற்கும் சந்தியில...**
**ஹ....ஹ....கே....டும்....டும்....டும்...."**

லயமே அதிரும்படி கோடங்கி, இழுத்து ஒலித்துக்கொண்டிருந்தது. பூசாரியின், ஆவேசம்... சுழன்று, சுழன்று அந்த பிரதேசத்தையே இழுத்துக் கவ்விக் கொண்டிருந்தது. நாங்கள் வீட்டை நோக்கி நடந்துகொண்டிருந்தோம். அம்மா சமைப்பதற்கு சமான்களை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்தாள். என் வரவைக் கண்டதும், "ஒனக்கு எத்தன தடவ சொல்றது... சாமான வாங்கி கொடுத்துட்டு ஒன்... வேலைய பாருனு" என்று கூறி, உமலை பிடித்து ஒரு கரத்தால் இழுத்துக்கொண்டே மறு கரத்தால் முதுகில் "பளார்" என்று சாத்தினாள்.

முதுகெலும்போடு ஒட்டி அவள் கை தந்த "சுளீர்" என்ற அடி, பொறி தட்டிப்போனது. அப்படியே முதுகை தேய்த்துக்கொண்டு வெளி யில் ஓடினேன். முதுகு எரிச்சல் எடுத்தது. அப்பா, தைத்த உடுப்புக் களை டிக்கோயாவுக்கு கொடுக்க போனவர் இன்னும் வரவில்லை என்பது எனக்கு



தெளிவாக தெரிந்த தால் துணிவாக வெளியில் இறங்கி விட்டேன்.

உடுக்கு ஒலி... மூன்று லயங்களையும் தாண்டி வந்து பயமுறுத்திக் கொண்டிருந்தது. ஆசாரி அண்ணனும் இன்னும் சிலரும் பாலத்து கம்பியில் சாய்ந்துகொண்டு உடுக்கடிப்பிற்கான காரணத்தை ஆராய்ந்து கொண்டிருந்தனர்.

"தேவருக்கு.... வட்டி கொறஞ்சிரிச்சாம்...."

"அதா, எவனோ சூனியம் வச்சிட்டான்..."

"ஓ, அதுக்குத்தான் இந்த..... கூத்தோ...." ஒருவகை எரிச்சலும் ஆவேசமும் அவ்வுரையாடலில் கசிந்தது.

"அவனவனுக்கு சாப்பாட் டுக்கே காசு இல்ல.... இதுல இவ னுக்கு வட்டி கொறய, கைக்காச செலவழிச்சி சூனியம் வைக்கிறானுங் களாம்..." எனக்சுகூறிக் கொண்டே ஆசாரி அண்ணன் குனிந்து மண் தரையில் கிடந்த மணலையும், சிறுகற்களையும் வாரி ஒரு பிடியை அள்ளி எடுத்துக்கொண்டு உடுக்கடிக்கும் லயத்தை நோக்கி விரைந் தார். சற்று நேரத்தில், மணல் லயத்து தகரத்தில் விழுந்து சடசடத்தது. சிறு கற்கள் தகர கூரையில் கடகடத்து உருண்டோடியது.... உடுக்கு சத்தம் சப் என்ற ஒலியோடு உடனடியாகவே நின்றது. எங்கும் அமைதி, பாலத்து மதிலில் நாங்களெல்லாம் அப்படியே மறைந்து மூச்சுக் காட்டாமல் கீழே உட்கார்ந்து விட்டோம்.

தேவர் வீட்டில் கொளுத்திய பந்தம் வெளியே வந்து எட்டிப்பார்த்தது

வெறும்மேலோடு கையிலும் உடம்பிலும் விபூதியை பட்டைப் பட்டையாக பூசிய பூசாரி தேசிக்காயை வாசலில் வைத்து வெட்டி நாலுக்கு திக்கை நோக்கி அங்கொன்றும் இங்கொன்றுமாக வீசி எறிந்தான், ஏதோ ஒர் சவாலை விட்டவாறு.

"தேவர், 'ஏவல்' வாசல் வரைக்கும் வந்திருச்சி இனி.... சரிபடாது.... நா சொடலையானுக்கிட்ட போய்தான் முடிக்கனும்" என்று "வானில் இருந்து" மண்ணை வீசிய பூதங்களைக் கண்டுணர்ந்து கூறினான்.

எல்லோரும் பேயரைந்தாற்போல் பூசாரியை தொடர்ந்து வீட்டினுள் போனார்கள். ஆசாரி அண்ணன் மிகுந்த உற்சாகம் அடைந்தார். பயலுகளை தூண்டினார். "கரட்டான், வீட்டுக்கு ஓடிப்போய் மரக்காசுக்கு பக்கத்துல சலங்க கட்டி வச்சிருப்பேன் அதையும்... கட்ல்ல கம்பிளி இருக்கும், அதையும் எடுத்துக்கிட்டு பட்டுனு ஓடிவா...." என்றார். கரட்டானும் மிகுந்த உற்சாகத்தில் இருளில் ஓடி மறைந்தான்.

தேவர் வீட்டில் பந்தம் இருளில், புகை எழுப்பியவாறு வெளியில் வந்தது.... வாசலிலும்..... வெளிமுற்றத்தில் நான்கு மூலைக்கு சூடமேற்றி விபூதியை பூசாரி பூவென்று ஊதினான், எரியும் சூடத்தில். பின், மீண்டும் வாசலுக்கு வந்து மீண்டும் ஒரு பிடி விபூதியை எடுத்து வாசிலில் கோடாக போட்டான்.

"வீட்டில் இருப்பவுங்க... வெளிய வராதிங்க, நானா.... ஏவலானு.... பாத்துறேன். தேவரு.... என்.... பேக்க எடுத்தாங்க.... ஏ.... அருணாசலம் கொடுவாள கொடு..." என்றுக் கூறி கொண்டே, அருள் வந்தவன் போல "உஸ்... உஸ்...." என தேசிக்காய் குத்தப்பட்ட கொடுவாளை.. நெஞ்சுக்கு நேராய் பற்றிப் பிடித்துக் கொண்டு "ஏ... பின்னுக்கு வாங்களே...." என்று சொல்லியவாறு, பாடமாத்தியை நோக்கி ஓடினான். தேவர், பையைத் தூக்கிக் கொண்டும் வேட்டியை சுருக்கிப் பிடித்துக் கொண்டும் தொங்கு தொங்கென்று பின்னால் ஓடினார். அருணாசலம் பந்தத்தைப் பிடித்துக் கொண்டு அவர்களுக்கு பின்னாலேயே ஓடி னார்.

**"தேவர், 'ஏவல்' வாசல் வரைக்கும் வந்திருச்சி இனி.... சரிபடாது.... நா சொடலையானுக்கிட்ட போய்தான் முடிக்கனும்" என்று "வானில் இருந்து" மண்ணை வீசிய பூதங்களைக் கண்டுணர்ந்து கூறினான்.**

அதற்குள் ஆசாரியும் கரட்டானும் சலங்கையை சத்தம் காட்டாமல் கம்பிளியில் நன்கு சுற்றிப் பிடித்துக் கொண்டு, வேறு வழியாக பாடமாத்திக்கு ஓடினார்கள். அங்கிருந்த இரண்டொரு இளைஞர்களுடன் நானும் ஓடினேன். ஐந்தாம் நம்பர் மலையில், இருந்து பார்ப்பதற்கு, ஏற்ற ஓர் இடத்தில் போய், சத்தமில்லாமல் உட்காரந்து கொண்டோம்.

பாடமாத்தியில் பந்தம் எரிந்து கொண்டிருந்தது... மூன்று பேரும் அமர்ந்திருப்பதும், பையிலிருந்து பொருட்களை வெளியே எடுப்பதும் புகை சித்திரம் போல் தெளிவாக எமக்கு பந்த ஒளியில் தெரிந்தது. சூடத்தை எடுத்து நான்கு மூலைக்கும் வைத்து பூசாரி நடுவில் அமர்ந்து கொண் டான். மந்திர உச்சாடனம் தொடங்கி யது. நாங்கள் ஆசாரியையும் கரட்டானையும் எதிர் பார்த்துக் கொண்டிருந் தோம். ஒரு பத்து பதினைந்து நிமிடத்திற்கு பின்... மணலும் கற்களும் அங்கு வந்து விழுந்தன. தேயிலைகள் சத்த மிட்டுக் குளுங்கி ஆடின. "ஐயையோ... ஐயையோ.... சொடல வெரட்டுதுடா... ஓடுங்க... ஓடுங்க" என்ற ஓலம் எங்கும் வியாபித்து ஓய்ந்தது.

சிரிப்பை அடக்கபடாத பாடுபட்டோம். பின் மெதுவாக தேயிலை நிரைகளை விலக்கிக் கொண்டு

**நான்கு மூலைக்கு சூடமேற்றி விபூதியை பூசாரி பூவென்று ஊதினான்**

ஆத்து ரோட்டுக்கு இறங்கினோம்... தேவர்.... வெடவெடுத்து.... துண்டை தலையில் சுற்றிக்கொண்டு பந்தத்தோடு ஓடுவதைக் கண்டோம். வேறு எவரையும்... காணவில்லை... இருளின் அமைதி எங்கும் வியாபித்திருந்தது. "ஜல்... ஜல்...." என சலங்கை ஒலி.... மெல்ல ஆரம்பித்து, அந்த இருளில் மெது மெதுவாக கூடிக் கொண்டே வந்தது.

"ஆசாரி ஏய் ஆசாரி.... போதும் சலங்கைய கழட்டுரா" செல்வராஜ் அண்ணன் மெதுவாக குரல் கொடுத்தார். கம்பளியை போர்த்திக் கொண்டு சலங்கை சத்தத்துடன் ஆசாரி அண்ணன் வந்து சேர்ந்தார்.

"இதுக்கு மேல போன.... மாட்டிக்குவோம்...."நான் மற்றவர்கள் பின்னால் இருட்டில் வீட்டை நோக்கி நடந்தேன். இருள் ஒரு கருநீல பொழுதாய் அப்போது எனக்கு தென்பட்டது. ஆசாரி அண்ணன் எங்கோ சூட்சுமமாய் மறைந்து போய்விட்டார். நான் வீட்டிற்கு போகும்போது அப்பாவுடன் அங்கே அவர் சகஜமாக சம்பாசித்துக் கொண்டிருந்தார். அப் போது தான் எனக்கு அம்மா அடித்த ஞாபகமே வந்தது....

"ஏய்...! எங்க போயிட்டு வார...? அடிச்சா ஓடிப் போயிடுவீங்களோ....? இரு வாரே..."
அம்மா, கையை ஓங்கிக்கொண்டு வந்தாள். "உடுங்க மைய்னி... அவனே கடைக்குப்போயிட்டு தனியால வந்தான்...."
ஆசாரி அண்ணன் எட்டி என்னை இழுந்து தன் பக்கமாய் அணைத்துக் கொண்டார். அவர் தோள் சாய்ந்து இருந்தேன். கம்பிளியின் மணம் அந்த தோள்களில் முசுமுசுத்தது.

(வரும் ...)

# சிரியா


# ஜெனீவா !!

# எதிர்காலம்...

- வ. சேனாதிபதி -



“ ஜெனிவா மகாநாட்டின் நோக்கம் அஸாட்டை அதிகாரத்திலிருந்து அனுப்புவதும், இடைக்கால அரசொன்றை சிரியாவில் ஸ்தாபிப்பதுமே. ”




கிட்டத்தட்ட மூன்று வருட கடுமையான யுத்த சீரழிவுகளின் பின் உலக நாடுகளால் (?) சிரியாவின் ஜெனீவா-II அரங்கேற்றப்பட்டுள்ளது.

இருப்பினும், எதிர்பார்த்தாற் போல் விடயங்கள் அங்கே அரையங்குலமாவது முன்னேற்றம் கண்டதாகத் தெரியவில்லை.

மாநாட்டுக்கு முன்னதாய், மாநாட்டுக்கான “முஸ்தீபுகள்” மிக வலுவாக ஆக்ரோஷத்துடன் ஆங்காங்கே நிறைவேறின.

சிரிய அதிபர் - அஸாட்டுக்கு எதிராக கடுமையாகப் போர் புரிந்து வரும் எதிர்ப்பாளிகளின் கூட்டம் இஸ்தான் புல்லில் ஜனவரி 19இல் இடம் பெற்றது அஸாட்டுக்கு எதிரான போரில் ஒரு பொது இணக்கப் பாட்டை எட்டும் நோக்கத்துடனும், அதிலும் முக்கியமாக இதற்காக எதிர்வரும் ஜெனீவா-II மகாநாட்டில் பங்கேற்பதா இல்லையா என்பதை வாதித்துத் தீர்ப்பதற்காகவும் இக்கூட்டம் கூட்டப்பட்டதாய் சொல்லப்பட்டது. சிரிய தேசிய கூட்டமைப்பின் தலைவர் (இதைத் தவிர பல்வேறு குழுக்களும் பல்வேறு தலைவர்களும் இருப்பதென்பது அறிந்த ஒன்றே) அஹமட் ஜபார் ஜெனிவா

மகாநாட்டின் நோக்கம் அஸாட்டை அதிகாரத்திலிருந்து அனுப்புவதும், இடைக்கால அரசொன்றை சிரியாவில் ஸ்தாபிப்பதுமாகுமே என அறிவித்திருந்தார்.

இருந்தபோதிலும், 120 டெலிகேட்டுகளில் (பேராளர்களில்) 75 பேரே ஜெனீவா -II பேச்சுக்கு முன்னோடி யாக அமைந்த இவ் இஸ்தான்புல் கூட்டத்தில் பங்கேற்க முடிவு செய்தனர். அதில் 58 பேர், ஜெனீவா-II மாநாட்டில் பங்கேற்கலாம் எனவும் 14 பேர் அத்தீர்மானத்திற்கு எதிராகவும் வாக்களித்தனர். (இருவர் வாக்களிக்கவில்லை. ஒருவர் கலந்தும் கலக்காமலும் இருந்தார் என்பது போல் அறிவிக்கப்பட்டது.) சிரியாவில் போராடி வரும் தலையாய குழுக்களில் ஒன்று (ISIS) ஏற்கனவே, பங்கெடுப்பவர்களை கொன்றுத் தீர்க்கப் போவதாக வேறு அறிவித்திருந்தது.

ஆக, மேற்கின் அனுசரனையோடு இடம்பெற்ற இக்கூட்டத்து நிகழ்வுகளே, ஜெனீவா-II இன், விளைப்பயன்களை முன்னதாகவே கோடிட்டுக் காட்டக் கூடிய முன்னோடியாக அமைந்துவிட்டது எனலாம்.

மறுபுறமாய், ஜெனீவா-II தொடர்பாக ஒரு தீர்க்கமான தந்திரோபாயத்தை வகுத்துக் கொள்ளும் முகமாக ஓர் சிரிய-ஈரான்-ரஷ்ய, முத்தரப்பு சந்திப்பு, கிட்டத்தட்ட இதே தினங்களில் ரஷ்யாவில் நடந்தேறியது. (16.01. 2014)

இவ் ஆரவாரங்களைத் தொடர்ந்து ஜெனிவா-II 22. 01. 2014 சுவிட்சலார்ந்தில் அரங்கேறியது.

சிரியாவில் இருந்து அஸாட்டை அசைக்கக் கூடிய இடைக்கால அரசின்றி மாநாடு அசையாது என்று எதிர்ப்பாளர்களும் அஸாட்டை இம்மியும் அசைக்கக் கூடிய எந்தவொரு தீர்மானத்திற்கும் சிரிய அரசு அசைந்துக் கொடுக்காது என்று சிரிய அரசு தரப்பிலும் கோஷம் போடப்பட்டதால் மாநாடு மீண்டும் சந்திப்பது (பெப்ரவரி 10) என்ற தீர்மானத்துடனும் தேவைப்படும் நன்றி கூறல்களுடனும் இனிதே முடிந்தது.

ஆனால், இந்நிழ்வுகள் இடம்பெற சில காலத்திற்கு முன்னர் (நான்கே நான்கு மாதங்களுக்கு முன்) இடம் பெற்ற நிகழ்வுகள், தற்போது இடம் பெறும் நிகழ்வுகளுக்கான சாத்தியப் பாடுகள் குறித்து கிஞ்சித்தும் கட்டியம் கூறுவதாக இருக்கவில்லை.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நான்கே நான்கு மாதங்களுக்கு முன் சிரியா தொடர்பில் இடம் பெற்ற நிகழ்வுகளும் தற்போது இடம் பெறும் நிகழ்வுகளும் இருவேறு துருவங்களை - இருவேறு உலகங்களை சார்ந்தவை என திண்ணமாகக் கூறலாம். (உலக நடப்புகள், இன்றைய உலகில் எவ்வளவு வேக மாக, சில நொடிகளில் கடுமையான மாற்றங்களுக்கு உள்ளாகின்றன என்பதற்கு இவையும் ஒருவகையில் தீர்க்கமான உதாரணங்களாக இருக்கின்றன.)

நான்கு மாதங்களுக்கு முன்னர், கடந்த செப்டம்பரின் ஆரம்ப நாட்களில், சிரியாவைச் சுற்றி யுத்தத்தின் கரு மேகங்கள் சூழ்ந்து செறிந்து திரண்டு கவிழ்ந்திருந்தன.

ஈராக்கை, லிபியாவை கபளீகாரம் செய்து தீர்த்த யுத்தத்தின் கோர நகங்கள், அதே வேகத்துடன் சிரியாவை கிழித்துத் தீர்க்க திடசங்கட்பம் பூண்டிருந்த காலம் அவை.

**எண்ணற்ற ஆயிரம் ஆயிரம் பேர்**
**அவர் தம் பிள்ளைகளின்**
**வாழ்வும், கனவுகளும்**
**வீதியெங்கும் விசிறப்படும்**
**சக்கைகளாய் !!!**

ஐக்கிய நாட்டுச் சபையின் இருக்கை, ஏனைய நாடுகளின் நிலைப்பாடு, இவற்றைப் புறந்தள்ளி, மேற்கு, ஒரே குறிக்கோளுடன் சிரியா பொருத்து தீர்க்கமாய் வதில்லை எனவும், அது



22-01-2014 ஜெனிவா-2 பேச்சுவார்த்தை

செயற்பட்ட காலங்கள் அவை. கொடிய யுத்தத்திற்கான முஸ்தீபு, தீவிரமாக முன்னெடுக்கப்பட்ட கடந்த ஆண்டின் நடுப்பகுதி நாட்கள் அவை. ஆனால், யுத்தத்தின் ஆரம்ப அடிவைப்பு, சிரியாவாக இருந்தாலும், யுத்தமானது சிரியாவுடன் நிற்கப்போவதில்லை எனவும், அது அடுத்ததாய் ஈரானை நோக்கி விஸ்த்தரிக்கப்படும் எனவும், ஈரான் கட்டுப்பாட்டுக்குள் வரும் பட்சத்தில் மத்திய கிழக்கின் அனைத்து நாடுகளும் கூட பல்வேறு நெருக்கடிகளை முகங்கொள்ள நேரிடும் என்ற வகையிலும் மேற்படி நடவடிக்கையின் பல்வேறு பரிமாணங்கள் சர்வதேச ஆய்வாளர்களால் கணிக்கப்பட்டு இருந்தது.


எண்ணெய் என்பதை மையமாகக் கொண்டு இடம்பெறக் கூடிய இந் நிகழ்வுகளின் போக்கில் வேறு பல வல்லரசுகளை (ரஷ்யா உட்பட்ட வல்லரசுகளை) வெறும் செல்லாக் காசாக உலக அரங்கில் கொணர்ந்து சேர்க்கும் திட்டத்தினையும், இச்சிரிய யுத்த முஸ்தீபு உள்ளடக்கியே இருந்தது எனும் கூற்றையும் நாம் புறந்தள்ளுவதற்கு இல்லை.

ஆக, இத்தகைய ஓர் தீர்க்கமான சூழலில், சூழும் அபாயங்கள் குறித்து, யாரைவிடவும் அதிகமாக இதை, புட்டினே, நன்கு உணர்ந்தும் அறிந்தும் இருந்தார், என்பதற்கு சான்று பகர்வனவாய் ரஷ்யாவின் அடுத்து வந்த செயற்பாடுகள், குறித்த நான்கு மாதங்களின் முன் இடம்பெறத் தொடங்கின.

சிரியாவைத் தாக்கும் திட்டங்களில், மிகப்பெரிய முட்டுக் கட்டையாய் ஆரம்ப நாள் முதல் இருந்து வந்தது ரஷ்யாவே. ஈரான், லிபியாவை போன்றல்லாது சிரியாவில் ரஷ்யாவின் கடற்படைத் தளம் ஒன்று அமைக்கப்பட்டு இருப்பதும், மற்றும் கருங் கடல் ஊடாக ரஷ்யாவின் தொடர்பு நெருக்கமாய் இருக்கக் கூடியதாக இருந்ததும், ரஷ்யாவுக்கு சிரியாவின் கேந்திர முக்கியத்துவம் இன்றியமையாததாய் அமைந்திருந்ததும் இம்முட்டுக்கட்டையை ரஷ்யா உருவாக்குவதற்கான பிரதான காரணங்களாய் அமைந்திருந்தன எனலாம்.

ரஷ்யா-சிரியாவின் நெருக்கம்-அவர்களது இராணுவ கொடுக்கல்-வாங்கல்கள், போன்ற விடயங்கள் எந்த மட்டத்தில், எந்த அளவிற்கு இருந்தன என்பது இன்றுவரை சற்றே மர்மம் கலந்ததாய்த்தான் இருக் கின்றது, உதாரணமாக, ஈராக்கைப் போன்று, ஐநா உதவியுடனோ அன்றி தன்னிச்சையாகவோ சிரியாவில் ஓர் "பறத்தலுக்கு-எதிரானத்-தடையை" (**No-Fly-Zone**) உருவாக்கிக் கொள்வது சிரியாவிற்கு எதிரான யுத்தத்தந்திர உபாயங்களில் முக்கியமான கூறாக அமையலாம்.

**நெட்டென்யாஹூ புட்டினைத் தேடி ரஷ்யாவிற்குச் சென்று சொச்சியில் (Sochi) நடாத்திய மூன்று மணி நேர பேச்சுவார்த்தையில் கேட்டுக் கொண்டதெல்லாம் சிரியாவிற்கு S−300 ரக ஏவுகணைகளை வழுங்க வேண்டாம் என்பதே.**



S-300

ஆனால், இதற்கு பிரதானமான தடையாக அமையக்கூடியது சிரியாவிடம் அடங்கியுள்ள இராணுவத் தள பாடங்களில், ரஷ்யாவின் முதல்தர ஏவுகணைகளில் ஒன்றான S-300 வகைசார்ந்த ஏவுகணைகள் அடங்கியுள்ளனவா இல்லையா என்பதே.

உள்வரும் ஏவுகணைகளை தாக்கி அழிக்கக் கூடிய இவ் S-300 வகை ஏவகணைகள் உலகிலேயே பிரமாதமானவை எனக்கூறப்படுகின்றன. ஒலியின் வேகத்தை விட ஆறு மடங்கு வேகத்தில் (6mach மணிக்கு 4500 மைல் வேகம்) பயணிக்கக் கூடிய இவற்றுக்கு ராடர்கள் உட்பட ஏனைய அனைத்து ஏற்பாடுகளையும் அர்த்த மற்றவையாக்கும் சக்தி உண்டு எனவும் கூறப்படுகின்றது.

இருக்கலாம். ஏனெனில் மே மாதத்தின் நடுப்பகுதியில் (14.05.2013) இஸ்ரேலிய அதிபர் நெட்டென் யாஹூ புட்டினைத் தேடி ரஷ்யாவிற்குச் சென்று சொச்சியில் (**Sochi**) நடாத்திய மூன்று மணி நேர பேச்சுவார்த்தையில் கேட்டுக் கொண்டதெல்லாம் சிரியாவிற்கு S-300 ரக ஏவுகணைகளை வழங்க வேண்டாம் என்பதே.

இப்பேச்சுவார்த்தை மறுபுறத்தில், சிரியாவிற்கு எதிரான தாக்குதலில்

இஸ்ரேல் எந்த அளவிற்கு நேரடியாக பங்கேற்கப்போகின்றது என்பதையும் உலக நாடுகளுக்கு துல்லியமாக முன்கூட்டி அறியத்தர தவறவில்லை.


ஆனால், மேற்படி சந்திப்பின் போது, நெட்டென்யாஹூவின் கோரிக்கைகளுக்கு புட்டின் செவிசாய்க்க மறுத்தது மட்டுமல்லாமல், போதாததற்கு, நெட்டென்யாஹூவை சிரியாவிற்கு எதிரான எந்தவொரு தாக்குதலிலும் ஈடுபடாமலிருக்கும் எச்சரிக்கையை வேறு, விடுக்கவும் பின்தங்கினார் இல்லை என்பதை அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

ஆக, எதிர்பார்த்தாற் போல் இன்றி, ரஷ்யாவில் இருந்து, வெறுங்கையோடு திரும்பிய நெட்டென்யாஹூ தொடர்ந்து வந்த தினங்களில் ரஷ்யாவிற்கு எதிராக, மிக முக்கியமாக, S 300 ரக ஏவுகணையைக் குறிவைத்து பல்வேறு அறிக்கைகளை விட முனைந்தார்.

ரஷ்யாவின் **S-300** ரக ஏவகணை யை இஸ்ரேல் செயலிழக்கச் செய்யும் எனவும், குறிப்பாக மேற்படி ஏவகணைகள் சிரியாவில் நிலைக்கொண்டு, செயற்பட ஆரம்பிக்கும் நிலமையினை சிரியா எய்தும் முன்னரே அவை இஸ்ரேலால் தவிடு பொடியாக்கப்படலாம் என்ற வகையில் அவர் விட்ட அறிக்கைகள் அமைந்திருந்தன. (தகவல்: Debka File )

மறுபுறத்தில், புட்டின் இச்சவாலை ஏற்று இஸ்ரேல் மேற்படி ஏவகணையைச் செயலிழக்கச் செய்யும் திட்டத்தை நடைமுறையில் நிறைவேற்றிக் காட்ட வேண்டும் என்று பதில் சவால் விட்டார் (30.05.2013)

ஆக, ரஷ்யாவிற்கும் இஸ்ரேலுக்கும் இடையே இடம்பெற்ற இப்பரஸ்பர சவால்கள், ஓர் சிரிய யுத்தம் நிகழும் பட்சத்தில் இவை, ஆளுக்குஆள் ஏற்கக் கூடிய பாத்திரத்தை வகிக்கக் கூடிய பங்கை திட்டவட்டமாக உலகிற்கு எடுத்துக் காட்டுவதாக அமைந்துக்கிடந்தது.



உள்வரும் ஏவுகணைகளை தாக்கி அழிக்கக் கூடிய S-300 வகை ஏவுகணைகள்

இச்சூழலில், அடுத்து வந்த தினங்களில் S-300 ரக ஏவுகணைகளை ரஷ்யா, சிரியாவிற்காக அனுப்பி வைத்துள்ளது என்ற செய்தியை உள்ளடக்கிய அறிக்கைகள் வந்து சேர்ந்த வண்ணமாய் இருந்தன.

நெட்டென்யாஹூவின் சவாலை ஏற்று புட்டின் பதில்சவால் விட்ட தினங்களிலேயே (30.05.2013) சிரிய அதிபர் அஸார்ட், ரஷ்யாவின் S-300 ரக ஏவகணைகள் சிரியாவை அடைந்து விட்டதாகவும், ஏனைய சில இன்னமும் வந்தடைய இருப்பதாகவும் அறிக்கை விட்டார்.

அடுத்து வந்த தினங்களில், அதாவது ஜுன் மாதத்தின் ஆரம்ப பகுதியில் (10.06.13) இது தொடர்பில் அறிக்கைவிட்ட அமெரிக்கா தனது செய்மதிகள், ரஷ்யா, சிரியாவிற்காக அனுப்பி வைத்துள்ள இராணுவ தளபாடங்களில் S-300ஐ ஒத்த தளபாடங்களும் உள்ளடங்கியுள்ளதை அவதானித்து இருப்பதாக அறிக்கை விட்டது. அதாவது, மேற்படி ஏவுகணைகள் சிரியாவை அடைந்து தன் செயற்பாட்டுத் தன்மையை எட்ட (Operational level) இன்னும் ஆறு மாத காலம் பிடிக்கும் என்றும் கணிப்பிடப்பட்டது.

அதாவது, சிரியா தனக்காக வழங்கப்பட்ட S-300 ரக ஏவுகணைகளை கிரமமாக கையேற்று, அவற்றை இயக்கு விக்கக் கூடிய நிலைமையினை அது எட்ட இன்னும் ஆறு மாத காலம் - அதாவது கிட்டத்தட்ட வருடத்தின் கடைசி மாதம் அளவில் (டிசெம்பர் 2013) காலநேரம் தேவைப்படும் என்ற கணிப்பை வெளியிடும் வண்ணம் மேற்கண்ட அறிக்கை விடப்பட்டிருந்தது, இச்செய்தியின் மறுபக்கம் யாதெனில், அப்படியாயின், ஓர் சிரிய தாக்குதல் டிசெம்பர் 2013 க்கு முன்னதாக அமெரிக்கா/இஸ்ரேலால் முன்னெடுக்கப்பட்டு முடித்து வைக்கப்பட வேண்டிய ஒரு தேவையை கோருவதாகவே மேற்படி செய்தி தெரியத் தருவதாய் உள்ளது.

இதன் அடுத்து வந்த தினங்களில் ரஷ்யாவோ, சிரியாவுடனான தனது S-300 ரக ஏவுகணைத் தொடர்பான ஒப்பந்தங்கள் அல்லது வாக்குறுதிகள் அனைத்தும் செவ்வனே நிறைவேற்றப் படவே செய்யும் என்று

சிரியாவுக்கான, தன் வாக்குறுதிகள் பொறுத்து அறிக்கைவிட்டிருந்தது. (20.06.13)

இவ்வறிக்கையின் உள்ளடக்கம், S-300ஐ சிரியாவிற்கு தருவதுடன் தனது கடமை முடிவுறும் என்பதா அல்லது தனது கடப்பாடு, S-300ஐ சிரியா சார்பாக பாவிப்பது / இயக்குவது சம்பந்தப்பட்ட ஒன்றா என்ற தெளிவுறுத்தல் மேற்படி அறிக்கையில் காணக்கிட்டவில்லை, என்பது குறிப்பிடத்தக்கதாகும்.


இருந்தும், பின்தள்ளிப் போடக் கூடிய ஒரு சிரியப் போர், மேற்படி சூழலில் மேலும் மேலும் அநேக கஷ்டங்களை கொணர்ந்தே சேர்க்கும் என்ற சூழலில், சிரிய போரின் நிர்ணயத் திகதியை நோக்கிச் சம்பந்தப்பட்ட சக்திகள் (அமெரிக்கா, இஸ்ரேல் போன்றவை) வேகமாக அசைந்தன என்பதையே தொடர்ந்து வந்த காலப் பகுதி சுட்டிக் காட்டுவதாய் இருந்தது.

அடுத்து வந்த இரு மாதங்களில் போர்த் தீவிரம் தனது உச்ச நிலையை எட்டியது. சிரியாவைச் சூழ அமெரிக்காவின் பிரம்மாண்டமான யுத்த கப்பல்கள் ஐந்தும் போதாதற்கு விமானம் தாங்கி கப்பலும் அபாயகரமான அளவிற்கு சிரியாவினை நெருங்கத் தொடங்கின.

இதேநேரம், இதனுடன் தொடர்புபட்டாற்போல், செப்டம்பரின் தொடக்கத்துடன், அமெரிக்கா விடுக்கத் தொடங்கிய அரச அறிக்கைகள் புதிய பரிமாணத்தை சிரியா தொடர்பில் காட்டி நிற்பதாய் இருந்தன. வெள்ளை மாளிகை அடுத்தடுத்து பல அறிக்கைகளை வெளியிட்டது. வெளிநாட்டமைச்சர் ஜோன்கெரி அமெரிக்காவின் அப்போதைய நிலைப்பாட்டை பிசகின்றி, பின்வருமாறு, கறாராக தெரிவித்து நின்றார்: "சிரியா மீதான <u>தாக்குதலுக்கு</u> நாங்கள் ஐநாபாதுகாப்புச் சபையின் ஒப்புதலை நாடப்போவதில்லை. நாம் எடுக்கும் எந்த நடவடிக்கைகளுக்கும் ஐநா பாதுகாப்புச் சபை மூலம் ரஷ்யா முட்டுக்கட்டைப் போட முயற்சிக்கிறது. எனவே, தோழமை நாடுகளுடனும், நாடாளுமன்றத்திலும் விவாதித்து நாங்கள் முடிவெடுப்போம்." (02.09.2013)



புட்டின், நெட்டென்யாஹு சந்திப்பு



**<u>"சிரியா மீதான தாக்குதலுக்கு</u>**

**<u>நாங்கள் ஐநா பாதுகாப்புச்</u>**

**<u>சபையின் ஒப்புதலை</u>**

**<u>நாடப்போவதில்லை.</u>**

-ஜோன் கெரி-

மறுபுறம், பராக் ஒபாமா, தன் பங்கிற்கு, பின்வருமாறு அறிக்கை விடுத்தார், "இரசாயன ஆயதங்களைப் பயன்படுத்திய சிரியாவைத் தண்டிக்கும் கடமை அமெரிக்காவிற்கு உண்டு. சிரியா மீதான <u>தாக்குதல்</u> என்பது தரைப்படை மூலமாகவே <u>நடாத்தப்படும்</u>".

இவ்வறிக்கைகள், மேலும் விரிவான பொருள்கோடல்களைச் செய்ய வேண்டிய அவசியங்களைக் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவு.

பச்சையாக, முற்றும் வெளிப்படையாக தமது நிலைப்பாடு யாது என்பதையும் ஓர் சிரிய யுத்தத்தின் நிகழ்தகவு எது என்பதையும் மேற்படி அறிக்கைகள் எந்தவோர் சந்தேகத்திற்கும் அப்பாற்பட்ட வகையில் தெள்ளத் தெளிவாக கூறிநின்றன. இவ்வறிக்கைகள் வந்து சேர்ந்து இரு தினங்கள் முடியும் முன்னரே ரஷ்யாவின் அறிக்கைகளில் ஒன்று பின்வருவனவற்றைக் கூறி நின்றது: "சிரியா மீது நேற்று வீசப்பட்ட இரு பால்டிக் ரக ஏவுகணைகள் மத்திய தரைக் கடலில் விழுந்தன". "இவை ராடர்கள் மூலம் கணகானிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது." (04.09.2013)

அதிர்ச்சியூட்டிய இச்செய்திகள் தொடர்பில் அறிக்கை விட்ட இஸ்ரேல், எந்தவொரு ஏவகணையையும் தான் இயக்க வில்லை அல்லது அத்தகைய அறிதல் இதுவரை தமக்கு இல்லை என ஆரம்பத்தில் கூறிய இஸ்ரேல் சில மணித்தியாலங்களின் பின்னர்,

தனது ஆங்கர் ஏவுகணையை இயக்கிச் சோதனை செய்ததாக பொறுப்பேற்றுள்ளது," (04.09.2013)

இதேவேளை, இவ் ஏவுகணைகள் ஏவப்பட்ட கணம் முதல் (ரஷ்ய நேரப்படி 10.16) தனது ஆர்மவிர் ராடர்கள் அவற்றைக் கண்டுணர்ந்து, அவை செயலிழக்கும் வரை அவற்றை பின்பற்றியதாகவும் ரஷ்யா அறிவித்தது.

இதன்பின்னராக வெளியிடப்பட்ட இஸ்ரேலிய அறிக்கைகள், தனது, இந்த ஏவுகணை சோதனைகள் அமெரிக்காவுடன் இணைந்து நடாத்தப்பட்ட ஒரு பரீட்சார்த்த முயற்சி என்ற அளவில் முடித்துக் கொண்டன.

ஆனால், மறுபுறத்தில் அமெரிக்காவோ தமது எந்தவொரு கப்பலோ அன்றி விமானமோ எந்த வொரு ஏவுகணையையும் (குறித்த காலப் பகுதியில்) விடுக்க வில்லை என்று கூறியது.


அப்படி என்றால் இஸ்ரேலின் ஆங்கர் ஏவுகணையை செயலிழக் கச் செய்த ஏவுகணை எது என்பது குறித்து இற்றைநாள் வரை முரண்பட்ட தகவல்களே கிட்டக்கூடியவை என்றாகிறது.

இது இப்படி இருக்க, மேற்படி ஏவுகணை விடுபட்ட நிகழ்வினை அடுத்து தனது மிக முக்கிய சிரேஷ்ட்ட இராணுவ அதிகாரிகளைப் பதவி நீக்கம் செய்ததாய் அமெரிக்கா அறிவித்தது.

தொலைதூர அணு ஏவுகணைகள் சம்பந்தமான சிரேஷ்ட்ட அதிகாரி மைக்கல்கெரியையும், மற்றும் தந்திரோபாய மைய கட்டளைப் பீடத்தின் இரண்டாவது உயர் அதிகாரி டிம் கியார்டினாவையும் உடனடியாக அமெரிக்கா பதவி நீக்கம் செய்தது. பதவி நீக்கத்திற்கு இவ்ஏவுகணை வீச்சோடு சம்பந்தப்படாத, வேறு பல சமாதானங்களும் காரணங்களும் பின்னர் கூறப்பட்டாலும் ஆய்வாளர்களின் பார்வையில் அக்காரணங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டவையாக தெரியவில்லை.

## இஸ்ரேலின் ஆங்கர் ஏவுகணையை செயலிழக்கச் செய்த ஏவுகணை எது ?

எது எப்படியாயினும் மேற்படி நிகழ்ச்சியை, அடுத்து நிகழ்வுகள் கிடுகிடுவென சர்வதேச அரங்கில் சூடு பிடிக்கத் தொடங்கின.




ஈரானிய அணு ஒப்பந்தம் யாரும் எதிர்பார்க்காத வகையில் சுமுகமாக முடிக்கப்பட்டது. - பின்னர் அது முடிந்த தும் முடியாததுமாக, அதே சூட்டில் சிரியா தொடர்பாக ஜெனீவா-II மாநாடு ஜனவரியில் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டது. (ஒப்பந்தம் முடிந்த மறுநாள்) இதனைத் தொடர்ந்து, அடுத்து வந்த தினங்களில் - ரஷ்ய முன்னெடுப்பிற் கூடாக, சிரியாவின் இரசாயன ஆயதங்களை களைந்து விடவும் ஜெனீவாவிற்கான வாய்ப்புகளை முன்னெடுக்கவும் நிகழ்ச்சி நிரல் ஒன்றும் அறிவிக்கப்பட்டது.

அதாவது, இந்நிகழ்வுகள் ஓர் சங்கிலித் தொடராய், ஒன்றை சார்ந்து ஒன்றாய் மத்திய கிழக்கில் இயங்க முற்படுவது ஆழ அவதானிக்கத்தக்கதே. இனி, இத்தகைய ஓர் பின்னணியில், சுமுகமாக இயங்கிவந்த சிரியாவை இன்றைய நிலைமைகளுக்கு கொணர்ந்து சேர்த்துள்ளமைக்கான சரியான காரணங்களை தேடிப் பார்க்க முயல்வதும் இது தொடர்பில், ஓர் பயனுள்ள பயிற்சியாகவே அமையும்.

சிரியாவானது, ஈராக்கைப் போன்றோ அன்றி ஈரானைப் போன்றோ, எண்ணெய் / எரிவாயு வளம் கொண்ட ஓர் நாடில்லை. ஆக மொத்தத்தில் அது உற்பத்தி செய்திருக்கக் கூடிய பெற்றோலியம் 2008இல் நாளொன்றுக்கு 150 ஆயிரம் பீப்பாய்களாகவே இருந்துள்ளது. அதாவது, அதனது எண்ணெய் உற்பத்தி, உலக எண்ணெய் உற்பத்தியில் 0.5 சதவீதமா கவே இருந்திருக்கின்றது. மேலும், சிரியாவின் தேசிய வருமானத்தில் இவ் எண்ணெய் உற்பத்தி, 23.25 சதவீதமாகவே கடந்த காலத்திலும் இருந்துள்ளது.

ஆகவே, ரஷ்யாவின் பங்காளியாக இருக்கும் சிரியாவை குறிவைப்பது நிச்சயமாக எண்ணெய்க்காக அல்ல என்ற வாதம் ஓரளவு ஏற்றுக்கொள் ளப்படக் கூடியதே.

41ம் பக்கம் பார்க்க

தொடர்ச்சி- ஜெனிவா கண்ணோட்டத்தில் ....

இதேபோன்று இக்காலப்பகுதியில் செய்து முடிக்கப்பட்ட மாலைத்தீவு சம்பந்தமான அமெரிக்காவின் பாது காப்பு ஒப்பந்தங்கள் ஈறாக, **(Sofa)** (இன்று வாபஸ் வாங்கப்பட்டுள்ள தாக கூறப்பட்டாலும்) அனைத்துமே ஓர் இந்தியப் பார்வையில் நெருடல் மிக்கது என்பதும் கவனத்தில் கொள்ளப்படத்தக்கதே.

போதாததற்கு, இப்போக்கின் உச்ச மாகவோ என்னவோ அண்மையில் நடந்து முடிந்த தேவயானி விவகாரம் கூட பல விடயங்களை, இப்பின்னணி யில் சுட்டிக்காட்டக் கூடிய ஒன்று தான்.


தேவயானியின் விவகாரமானது சுருக் கமானது. கச்சிதமாக நிறைவேற்றப் பட்ட ஒன்று. கைது செய்யப்பட்டார். ஆடை களையப்பட்டு உடற் பரிசோ


**தமிழ்த் தரப்பு தான் பேண வேண்டிய 'சமநிலையை", தேவைப்படும் அந்தந்த விகிதாசாரத்தில் பேணுகின்றதா என்பதே இங்கு எழக்கூடிய பிரதான வினாவாகும்.**

தனை **(Including Cavity Search)** செய்யப்பட்டு போதைவஸ்து கூட்டத் தோடு கூட்டமாய் அடைக்கப்பட்ட துடன் விடயம் முடிந்தது. அதாவது தூதுவராலய பாஷையில் கூறுவதா னால் "விடயம்" விபரிக்கப்பட்டு விட்டது என்பதாகும். இதில் ஓர் இந்தி யப் பார்வையில் மிக நெருடலாக காணப்பட்டது யாதெனில் சம்பந்தப் பட்ட வீட்டு உதவியாளர் - ரிச்சர்ட்ஸ் சங்கீதாவின் - குடும்பம், பாதுகாப்புக் காரணங்களாக இந்தியாவிலிருந்து, தேவயானி கைது செய்யப்படுவதற்கு சில தினங்களுக்கு முன்னதாகவே, அமெரிக்காவால் அமெரிக்காவுக்கு வெளியேற்றப்பட்டது **(evacuated)** என்ற செய்தியாகும். இது, மேற்படி நிகழ்வானது நுணுக்கமான ஒரு திட்ட வரைபின் அடிப்படையிலேயே நிறை வேற்றப்பட்டுள்ளது என்பதை சுட்டுவ தாக உள்ளது.

நோக்கம், பலதரப்பட்டதாக இருக்க லாம். மன்மோகன் அரசுக்கு புதிய நெருக்கடியைத் தோற்றுவித்து, மோடி அலையை ஊக்குவிப்பது, இந்திய-பாக் உறவு சீர்படுமெனில் அதை குலைக்க அல்லது இந்திய-ரஷ்ய-சீன உறவுகள் வலுப்பெறு மெனில் (சிரிய விவகாரத்தில் அண் மையில் **G20** மகாநாட்டின் போது இக்கூட்டு மேலும் உறுதிப்படக் கூடிய சாத்தியத்தை எட்டியிருந்தது.) அதைக் குலைக்க அல்லது அண் மையில் (12.10.2013) இந்தியா, ஓர் அமெரிக்கக் கப்பலையும் அதில் இருந்தவர்களையும் (எட்டு கப்பல் செலுத்துனர்கள் 35 பாதுகாப்பு காவலர்கள் உட்பட) அனுமதி இன்றி தமது கடல் எல்லைகளை ஆயுதங்க ளுடன் கடந்தார்கள் என்பதற்காக இந்தியா கைது செய்து அடைத்து வைத்ததினால் அல்லது ஆப்கான் விவகாரத்தில் இந்தியா அமெ ரிக்கா வுக்கு எதிரான நிலைப் பாடுகளின் திசையில் செயற் பட்டமையினால் அல்லது இன்று அதிக ரிக்கக் கூடிய ஓர் இந்திய செல் வாக்கை பிராந்திய மட்டத்தி லும் அல்லது சர்வதேச மட்டங் களிலும் குறைப்பதற்காக - இவை அல்லது இவை போன்ற ஏனையவை தோற்றுவித்திரு க்கக்கூடிய முரண்பாடுகளின் பின்ன ணியில், தேவயானியின் விடயம் ஓர் அறிவிப்பு என்பதும் தேவயானி வெறும் ஓர் பகடையே என்பதும் ஒருபுறமிருக்க இவ்விடயமும் ஓர் அமெரிக்க-இந்திய "தந்திரோபாய உறவின்" உண்மை இலட்சணத்தை அம்பலப்படுத்த தவறவில்லை எனக் கொள்வதே தேவயானியினது கைது கூறக்கூடிய அடிப்படை செய்தி யாகும். இச் செய்தி பல்வேறு மட்டங் களிலும் ஆர்வத்துடன் உள்வாங்கப் படும் என்பது தெளிவு. அத்தகைய உள்வாங்கல்கள் வேறு பல நடவடிக் கைகளையும் பிராந்தியத்தில் ஊக்கு விக்கும் கருப்பொருளாக இருக்கக் கூடும் என்பதும் தெளிவு. உதாரண மாக தேவயானி செய்தி வந்த மறுதினமே இலங்கை அரசு, இந்திய எண்ணெய்க் குதங்களை மீளப்பெறு வதற்கான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் என்று பிரகடனப் படுத்தியதை இப்படிப் பினையின் ஓர்








சிறு எதிரொலி என்று கருதவும் இடமில்லாமல் இல்லை.

இவை அனைத்தும் ஒருபுறமிருக்க "இலங்கை-இந்திய" உறவுகளின் நெருக்கடிமிக்க மேற்குறிப்பிட்ட ஜூன்-ஜூலை காலப்பகுதியில் அமெரி க்கா-இலங்கை உறவுத் தொடர்பில் இடம்பெற்ற இன்னும் இரண்டு நடவ டிக்கைகளை குறிப்போமானால் அது அமெரிக்கா இலங்கைக்கு ஈரானுடன் வர்த்தகம் செய்ய தடை

விலக்களித்ததையும் பின் ஜூலை மாதத்தில் அமெரிக்க சீல் படைப்பிரிவினர் இலங்கையில் மேற்கொண்ட பயிற்சி நடவடிக்கையினையும் குறிக்கலாம்.

ஆக, சுருக்கமாக கூறுவோமானால் அமெரிக்காவும் இந்தியாவும் தத்தம் அளவில் ஓர் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த உறவில் தம்மிடை ஈடுபட்டுள்ளன என்று கூறிக்கொண்ட போதிலும் அவையிடையே தத்தமது தனித்த நலன்களை ஒட்டிய தனித்த நடவடிக்கைகள் தத்தம் வழியே மேற்கொள்ளப்பட்டே வருகின்றது என்பதே உண்மை.



**13வது திருத்தம் தொடர்பில் இந்தியா காட்டிவரும் அதிருப்திப்போக்குக் குறித்து எம்மால் எதுவும் செய்ய முடியாது... இந்த விடயத்தில் எத்தகைய சவாலையும் எதிர்க்கொள்ள அரசு தயாராகவே உள்ளது.'**

அதாவது ஓர் இந்திய செல்வாக்கினை அப்புறப்படுத்தும் பின்னணியில் அமெரிக்கா, ஓர் இலங்கை-சீன உறவுக்கான தன் மறைமுக ஆமோதிப்பை அல்லது ஊக்குவிப்பை வழங்கக் கூடும்.

விடயம் இப்படி இருக்குமெனில், அதாவது இந்திய அமெரிக்க நலன்களை ஒரே டப்பாவுக்குள் அடைக்க முடியாது என்பது உண்மை எனில் அத்தகைய ஓர் பின்னணியில் இலங்கைத் தொடர்பான பிரச்சினையில் அமெரிக்கா-இந்திய சீனா என்ற மூன்று பிரதான வெவ்வேறு வகையான, முரண்படக்கூடிய செல்வாக்குகள் செயற்பட முற்படுகின்றன என்பது தெளிவு.

இவற்றை மீறி சில நாடுகள் தனித்தாற் போல் செயற்படுவதாக தோற்றம் காட்டினாலும் (அது நோர்வேயாகவோ அன்றி ஜப்பானாகவோ அன்றி பாக்கிஸ்தானகவோ அல்லது அவுஸ்திரேலியாகவோ கூட இருக்க லாம்) ஆனால், அவற்றின் இறுதித் தீர்மானங்களும், நடவடிக்கைகளும் இம்முற்செல்வாக்கினை ஒட்டியே நடந்தேருகிறது என்பதில் ஐயமில்லை.

அப்படியெனில் தமிழ்த் தரப்பு மேல்சம்பந்தப்பட்ட நலன்கள் தொடர்பில் தான் பேண வேண்டிய "சமநிலையை", தேவைப்படும் அந்தந்த விகிதாசாரத்தில் பேணுகின்றதா என்பதே இங்கு எழக்கூடிய பிரதான வினாவாகும்.

தேவைப்பாடு இப்படி இருக்க, இத்தகைய ஒரு பின்னணியில், தமிழ்த் தரப்பினர் இக்காலப்பகுதியிலும் (ஜூன்-ஜூலை) அல்லது அதற்கு பிற்பட்ட காலப்பகுதியிலும் தமிழ் மக்கள் பிரச்சினையை எப்படி கையாண்டார்கள், எவ்வெவ்வகையில் முன்வைக்க முனைந்தார்கள் என்பது எமது கரிசனைக்குரிய ஒன்றாகும்.

மேற்குறிப்பிட்ட ஜூன் ஜூலை காலப்பகுதி தொடக்கம் இன்றுவரை நீடிக்கும் அல்லது இனி வரப்போகும் அண்மித்த ஓர் காலப்பகுதியைக் கொண்ட ஒரு "இலங்கைக் கலண்டரில்" பின் வரும் நிகழ்ச்சி நிரல்கள் முக்கியத்துவம் பெற்றதாக அடையாளப்படுத்தப்படக்கூடும்.

01. வடமாகாணசபைத் தேர்தல்
02. பொதுநலவாய மகாநாடு
03. இனி நடக்கவிருக்கும் ஜெனிவா மகாநாடு.

**01. வடமாகாணசபைத் தேர்தல்**

வடமாகாணசபைத் தேர்தலுக்கு முன்னதாகவும் அதனைத் தொடர்ந்தும் தமிழ்த் தரப்பினர் தாம் முகம் கொண்ட பிரச்சினைகளை எவ்வாறு கையாண்டனர் என்பது ஆழமான புரிதலுக்கு உட்படுத்தப்படவேண்டிய கேள்வி ஒன்றே என்பதில் ஐயம் இல்லை.

மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னதாக 13வது திருத்தத்தின் சாரத்தை நீர்த்துப் போகச் செய்திருக்க முடியுமானால், அது தமிழ் மக்களுக்கு மாத்திரம் அல்ல - கூடவே, மன்மோகனுக்கும் (தமிழ் நாட்டுக்கு ஊடாக) தீராத தலையிடியைத் தந்திருக்கக் கூடிய ஒரு சூழலை உருவாக்கியிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

13ஐ நீர்க்கச் செய்தல் வெற்றிகரமாக முடியும் பட்சத்தில், தென்னிந்தியாவின் தமிழ் நாட்டில் "அரபு வசந்தத்தை" ஒட்டிய ஒரு "தமிழ் வசந்தமும்" அதன் விளைபயனாக பல்வேறு சக்திகளின் ஊடுருவலுக்கு வழி சமைக்கக் கூடிய தோற்றப்பாடுகளின் உருவாக்கமும் நாம் நிராகரிக்க முடியாத ஒன்று. (இந்தியாவின் காஷ்மீர் போன்று). ஆனால், இச்சமன்பாட்டை மாத்திரம் வைத்துக் கொண்டு அதாவது தமிழ் நாட்டின் சீர்குலைவு என்ற ஓர் அழுத்தத்தை மாத்திரம் வைத்துக் கொண்டு அதற்கூடாக இந்திய வெளியுறவுக் கொள்கைகளை ஓர் குறிப்பிட்ட புள்ளிக்கப்பாலும் மாற்றி அமைக்கலாம் என்ற எண்ணம் நடைமுறை யதார்த்தத்தோடு பொருந்திவராத ஒன்று என்பது மாத்திரமன்றி இன்னும் சரியாகக் கூறுவோமானால் சற்றே அபாயகரமானதும் தமிழ் மக்கள் நலனை ஆழமாகவும் நிரந்தரமாகவும் பாதிக்கக் கூடிய ஒன்றானதும் கூட.

ஆக, தமிழ் நாட்டு ஆதரவை அல்லது தமிழ் நாட்டு அரசியலை இலங்கைத் தமிழ் மக்கள் நலன் சார்பாக பாவிப்பது என்பது ஆகமொத்தத்தில் ஓர் கத்தி முனையில் நடக்கும் கைங்காரியம் தான்.

இது ஒருபுறம் இருக்க, மேலே குறிப்பிட்ட 13ஐ நீர்த்துப் போகச் செய்தல் தொடர்பாக மேற்கத்திய நாடுகள், சம்பந்தப்பட்ட காலப் பகுதியில், மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை? அவை எவ்விதத்தில் இலங்கை மேற்கொண்டிருந்த மேற்படி நடவடிக்கை களை தடுத்து நிறுத்த முற்பட்டன என்ப தெல்லாம் கூட இது தொடர்பாக கவனத் தில் எடுக்கப்பட வேண்டிய கேள்விகளே.

ஏனெனில் மேற்கு நாடுகள் 13 தொடர்பாக, எந்தவொரு செயலூக்கமும் பெறவில்லை என்றால், அவற்றின் எண்ணப்பாடு உள் நோக்கம் என்பன கேள்விக்கு உரிய ஒன்றே. இச்சூழலில் இந்தியா தொடர்பான விவகாரங்களை தமிழ்த்தரப்பு, தமது பிரச்சி னைகள் தொடர்பாக, எத்தகைய உணர்தி றனோடு கையாண்டார்கள் என்பதும் இங்கு எழக்கூடிய மற்றுமொருவினாவே.

இப்பின்னணியில், குறிப்பிட்டக் காலப்பகு தியில் (கடந்த ஜுன் ஜுலை) தமிழ் அரசியல் தரப்பில் இந்தியா தொடர்பான பின்வரும் நிலைப்பாடுகள் ஒலிக்கக் கேட்டன: **"இந்தியா கூறுவதை இலங்கை கேட்கும் நிலையில் இல்லை... இதை இந்தியா யோசிக்க வேண்டும்."** சுரேஸ் பிரேமச் சந்திரன்(10.06.2013) இக்கூற்று ஆற்றப் படுவதற்கு ஏதுவான முறையில் இலங்கை - இந்திய உறவுகளின் இழுபறி, மேலே குறிப் பிட்டாற் போல், குறிப்பிட்ட புள்ளியை, இச்சூழலில் அடைந்திருந்தது என்பதை யும் நாம் இங்கே நினைவூட்டிக் கொள்ள வேண்டும்.

மேலே குறித்துக் காட்டியது போல, மேமாத த்தின் மத்தியில் செயலூக்கம் பெறத் தொட ங்கிய இவ் இழுபறி, குர்ஷித்-பீரிஸ் தொலை தொடர்பு உரையாடல் என்ற



மனோகணேசன்

புள்ளியில் மே லும் வேகப்பட்டு மே 25 அளவில் சீன-இல ங்கை ஒப்பந்தங்க ளுக்கூடு நகர்ந்து (02.06.13) 13வது திருத்தம் தொடர்பிலான தனியார் பிரேரணையை, கோயில்கள் பரவலாக தாக்கப்படும் ஓர் பின்னணியில், பாராளு மன்றத்தில் சமர்ப்பி க்கும் அளவிற்கு முன் னேறி இருந்தது.

இப்பின்னணியிலேயே சுரேஸ்பிரேமச் சந்தி ரனின் மேற்படிக்கூற்று ஆற்றப்பட்டதாய் உள்ளது என்பதனையே இங்கு நாம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டுவது

Times of India,

**இந்திய புலனாய்வு வட்டாரங்களை மேற்கோள் காட்டி, இஸ்லாமிய தீவிரவாதிகள் தமிழ் நாட்டில் தாக்குதல்களை மேற்கொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து 28 கி.மீ தொலைவில் இறக்கப்படலாம் எனவும் அதற்கு சிங்கள மீனவர்கள் துணைபுரியலாம் என்ற செய்தியையும் வெளியிட்டிருந்தது.**

(10.06.2013). இதனைத் தொடர்ந்து வந்த இரு கிழமைகள், செறிவு மிகுந்த நகர்வுகளை, இலங்கை - இந்திய உறவில் கண்டன.

தமிழ்க் கூட்டமைப்பு தனது இந்திய பயண த்தை மேற்கொண்டு மன்மோகன், மேனன் போன்றோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை களில் ஈடுபட்டது (ஜுன் 16 - 19).

தீவிரம் பெற்ற மேற்படி தினங்களிலேயே இந்தியா, இலங்கை விவகாரங்களுக்கான ஒரு சிறப்புத்தூதரை நியமிக்க முனைந்து நின்றது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த இலங் கை அரசு, இந்தியா அப்படி நியமிக்குமிடத்து "அதை தாம் ஏற்கப்போவதில்லை என்றும், 13வது திருத்தம் தொடர்பில் இந்தியா காட் டிவரும் அதிருப்திப் போக்குக் குறித்து எம் மால் எதுவும் செய்ய முடியாது... இறை மை பாதிப்பதை எந்த விதத்திலும் அனும திக்க முடியாது. இந்த விடயத்தில் இந்தியா வினதோ, சர்வதேசத்தினதோ எத்தகைய சவாலையும் எதிர்கொள்ள அரசு தயா ராகவே உள்ளது." என்றும் கூறியது (18.06.13).

அதாவது இழுபறியின் உயரிய புள்ளி களை இந்நகர்வுகளில், இங்கே நாம் கா ணும் அதேகணத்தில் தமிழ்க் கூட்டமை ப்பு தொடர்பாக இந்தியாவின் உறவுமு றையின் வீச்சினையும் காண்கின்றோம்.

இலங்கை அரசின் மேற்படி உரமிக்க பிரகடனத்திற்கு பின்னணி காரணிகளாக பலவற்றை நாம் அடையாளப்படுத்தா லாம். அவற்றில் பாக்கிஸ்தானின் உதவி யோடு இரசாயன உயிரியல் ஆய்வு மையம் ஒன்றை கொப்பேகடுவ இராணுவ தளத்தில் அமைப்பது குறித்த செய்தியும் (13.07.13) இலங்கை பாக்கிஸ் தானுடன் அணு ஒப்பந்தம் குறித்த செய்தியும் (13.07. 13) இலங்கை ரஷ்யாவோடு செய்து கொ ண்டதாய்க் கூறப்படும் அணு ஒப்பந்தம்



ஐ.நா. மனித உரிமை ஆ

குறித்த செய்தியும் மற்றும் முன்னரே குறித்த அமெரிக்க சில் படைப்பிரிவினரின் வருகையும் கூட்டு நடவடிக்கை குறித்த செய்தியையும் (21.07.13) இது தொடர்பில் கோடிடலாம். (செய்திகளின் வெளிவரவு ஜுலை மாதங்களில் நடந்திருந்தாலும் மேற்பட்ட நிகழ்வுகள் ஜுலைக்கு முன்ன ராக இடம்பெற்றிருத்தலே சாத்தியம்)

இலங்கையின் இவ் உரமிக்க பிரகட னத்தைத் தொடர்ந்து இந்தியா இலங்கை

க்கு ஓர் தூதராலய மட்டத்திலான உத்தரவை பிறப்பித்ததையும் (கைது செய்யப்பட்டிருந்த இந்திய மீனவர்களை விடுவிக்கும் பொருட்டு விடுக்கப்பட்ட Demarche உத்தரவு) அதனை இலங்கை அரசு நிராகரிப்பதாகவும் செய்திகள் வெளிவந்தன.

வேறு வார்த்தையில் கூறுவதானால் மேற்படி உத்தரவுக்கூடாக மேற்குறிப்பிட்ட இழுபறி ஒரு புதிய பரிமாணத்தை நோக்கி நகரத் தொடங்கியது எனலாம்.

இதனைத் தொடர்ந்து, இப்போக்குகளின் உச்சமாக, அல்லது இப்போக்குடன் தொடர்புபட்டதாகக் காணக்கூடிய வகையில், இந்தியாவின், Times of India, இந்திய புலனாய்வு வட்டாரங்களை மேற்கோள் காட்டி, இஸ்லாமிய தீவிரவாதிகள் தமிழ் நாட்டில் தாக்குதல்களை மேற்கொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து 28 கி.மீ தொலைவில் இறக்கப்படலாம் எனவும் அதற்கு சிங்கள மீனவர்கள் துணைபுரியலாம் என்ற செய்தியையும் வெளியிட்டிருந்தது. இச்செய்தியின் நம்பகத்தன்மை கேள்விக் குட்பட்டதுதான் என்றாலும், மேற்படி செய்தி, "இழுபறியின்" புதிய பரிமாணத்தை வெளிப்படுத்துவ தாகவும் குறிப்பிட்ட 28 கி.மீ தொலை பிரதேசத்தில் இந்தியபடை நடமாட்டங்களை எதிர்பார்க்கப்படலாம் எனவும் சில வட்டாரங்கள் இச்செய்தியினை பொருள்கோடல் செய்து முடித்தன.


ஆணையாளர் நவீன்பிள்ளை


கமரோன் - வடபகுதி விஜயத்தின்போது

இத்தகைய ஒரு சுழற்சியின் நிர்ப்பந்தங்களின் பின்னணியிலேயே, 13ஐ நீர்த்துப் போகச் செய்யும் ஏற்பாடுகள் கிடப்பில் போடப்பட்டு, வடமாகாண சபைத் தேர்தலும் நடாத்தி முடிக்கப்பட்டு, முன்னாள் உயர் நீதி மன்றத்தின் நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவானதும் நடந்து முடிந்தது.

இதேவேளை இச்சுழற்சியின் போது சுரேஸ் பிரேமச்சந்திரனால் முன்னர் உரைக்கப்பட்ட கருத்துப் போக (இந் தியா கூறுவதை இலங்கை கேட்கும் நிலையில் இல்லை... என்பது ஈறாக) மேலும் முன்னிலைக்கு வந்த இருவேறுப்பட்டக் கருத்துக்களை (தமிழ்த் தரப்பின் மத்தியில் இருந்து வெளிவந்தவை) இங்கே குறித்துக் காட்டுவது பொருத்தமானதாகும்.

தமது இந்திய விஜயத்தை முடித்திருந்த தமிழ்க் கூட்டமைப்பினர் மன்மோகனின் சந்திப்பின் பின் "இந்தியா 13 தொடர்பிலான உறுதிமிக்க உறுதி மொழியைத் தெரிவித்திருந்தமையை அறிவித்திருந்தனர். (19.06.13)"


இப்பின்னணியில் கருத்துத் தெரிவித்திருந்த மனோகணேசனோ பின்வருமாறு கூறியிருந்தார்: "தொடர்ச்சியாக புதுடில்லி சென்று இந்திய அரசுத்தலைவர்கள் சொன்னதாக செய்திகளை இலங்கை வந்து தமிழ் மக்களிடம் சொல்வது கூட்டமைப்பின் ஏற்புடமைக்கு இழுக்கை ஏற்படுத்திவிடும் என நான் எச்சரிக்கை விடுக்கின்றேன்... சொல்லெனா துன்பங்களைக் கண்டுவிட்ட தமிழ் மக்கள் மத்தியில் பெரும் சலிப்பை இந்த டில்லி விஜயம் ஏற்படுத்துவதாய் உள்ளது" (26.06.13)

மேற்படி கூற்றில் உள்ளடங்கியிருக்கும் "அரசியலின்" நிலைமையும் அதன் வேர்களும் பிறிதொரு கேள்விக்கு உரியன என்றாலும் இவ்வாற்றுகை குறிக்கப்பட வேண்டிய ஒன்றே.

ஆனால், இதற்கெல்லாம் உச்சம் வைத்தாற்போல் இக்காலப்பகுதியில் ஆற்றப்பட்ட பின்வரும் பிறிதொரு கருத்தும் எமது அவதானத்திற்குரிய ஒன்றே.

"இந்தியா... தமிழர் போராட்டத்தின் தோற்றப்பாட்டையும் அதை ஒரு முடிவுக்கு கொண்டுவருவதற்கான தனது வகிப்பாகத்தையும் விளங்கிக் கொண்டு தனது பூகோள பிராந்திய நலன்களுக்கு அப்பாலும் (!?) தனது மாநி லங்களுக்கு இடையிலான அதிகார எல்லையை வரையறுத்துக் கொள்ளும் கொள்கை வகுப்பிலிருந்து விலகி, (!!?) 13வது திருத்தச் சட்டம் எனும் மாயையிலிருந்து (!!!?) விடுபட்டு, தமிழர் உரிமைப் போராட்டத்திற்கான நியாயப் பாட்டை உணர்ந்து அரசியல் தீர்வே தமது இறுதி மூச்சென ஏங்கி நிற்கும் தமிழ் மக்களுக்கு இதய சுத்தியுடன் தீர்வை முன் வைக்க, இலங்கை அரசை அவசரமும் அவசியமுமாக வலியுறுத்த வேண்டும்" (மனித உரிமை ஆர்வலர் - 12.06.13) (விளித்தல் குறிகள் எமது)

கனவுலகின் எல்லைக்கோடுகளை தொட்டு மீளக்கூடிய இக்கருத்துக்களின் பின்புலம் மகாபாரதமா அன்றி இராமாயணமா என்பது சகஜமாக எழக்கூடிய கேள்வியே. ஏனெனில் மேற்படி கூற்று வடகிழக்கின் இன்றைய யதார்த்த



இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்

நிலைகளோடு எவ்வளவு ஆழமாய் முரண்பட்டு நிற்கிறது என்பது ஒருபுற மிருக்க சர்வதேச அரசியலின் அல்

**சனல்-4 கின் புகைப்படங்களாக இருக்கலாம் அல்லது கனடாவின் பகிஷ்கரிப்பாய் இருக்கலாம் அல்லது கமரோனின் யாழ்ப்பாணத்து அதிரடி விஜயமாக இருக்கலாம் - அவை அனைத்தும் நடைமுறையில் அதி உக்கிரமான பாதிப்பை ஏற்படுத்தியது இந்தியாவிற்கு தான்.**

லது நாடுகளின் “நலன்-சார்ந்த“ அரசியல் அடிப்படைகளைக் காண உணர்திறனற்ற புரிதல்களை, துரதிர்ஸ்டவசமாய் இங்கே ஆழ கொண்டதாய் உள்ளது.

உதாரணமாக, இலங்கை அரசு - நில சுவீகரிப்பு, பெரும்பான்மை சமூக குடியேற்றங்கள், தொல்பொருள் ஆய்வு, வனபரிபாலன காப்பு, படைபல விஸ்தரிப்பு, பெயர் மாற்றங்கள், கலாசார மையங்கள் என்பது போன்ற போர்வைகளில் ஓர் நில ஆக்கிரமிப்பு போரை நிகழ்த்தி வருவதாக செய்திகள் வருவதும் (திருமலை நவம்), இதேபோன்று கோயில்கள் சிதைக்கப்படுவதும் பெண்களின் பாதுகாப்பு நாளாந்தம் கேள்விக்குட்படுவதும் - மேலும் இதுபோன்ற அனந்த செய்திகள் நாள்தோறும் வெளிவருவதும் இங்கே ஒரு யதார்த்தமாக காணக்கிட்டுகின்றது.

இச்சூழலில் மேற்படி கூற்றுகள் இலங்கையின் தமிழ் மக்களை, நடைமுறை யதார்த்தத்திலிருந்து மாத்திரமல்லாமல் சர்வதேச நாடுகளின் யதார்த்தத்திலிருந்தும் ஒவ்வாத வகையில் ஓரங்கட்டும் பாதிப்பை தோற்றுவித்துவிடுமோ என்ற ஐயப்பாட்டையும் எழுப்பவே செய்கின்றது.

இருந்தும் இவற்றை எல்லாம் சேர்த்துதான் எமது “தமிழ்த்தரப்பு“ என்று எடுத்துக்கொண்டால் இங்கே விகசிக்கக் கூடிய மூன்று வெவ்வேறு வகைப்பட்ட வேர்களை நாம் இனங்காணலாம். (முன் குறித்த மூன்று பார்வைகளின் அடிப்படையில்)

இனி கேள்வி, இம்மூன்று வேர்களையும் வெவ்வேறு விகிதாசாரத்தில் கொண்டிருக்கக் கூடிய ஓர் தமிழ்த் தலைமை, எதிர்வரும் ஜெனிவா மகாநாடு தொடர்பான தனது நகர்வுகளை எப்படி, எந்தவகையில் மேற்கொள்ளக் கூடும் என்பதே.

இதற்கு அனுசரனையாக மாகாண சபைத் தேர்தலை அடுத்து வந்த நிகழ்வுகளை எமது கவனத்தில் குறிப்பது அவசியம்.

II.

நவநீதம் பிள்ளையின் வருகை, ஒரு வகையில் பல்வேறு தீவிரங்களையும் ஒரு சில ஹாஸ்சியங்களையும் ஒருங்கே வெளிக்கொணர்வதாய் அமைந்திருந்தது. மேர்வின் சில்வாவின் திருமணப் பிரேரணை முதல் இலங்கையானது ஏதேச்சதிகாரத்தை நோக்கி நடைபயில்கின்றது எனும் நவனீதம் பிள்ளையின் கூற்றுக்கள் வரை பல வண்ணங்களை வெளிப்படுத்திய

இவ்வரவு, இலங்கை அரசு, வடமாகாணசபைத் தேர்தலை நடாத்தி முடித்தமைக்காக சர்வதேச அரங்கில் அதற்கு கிட்டியிருக்கக் கூடிய நற்பெயரை பறித்தெடுப்பதாக அமைந்தது மட்டுமல்லாமல் எதிர்வரும் மார்ச்சுக் காலப்பகுதியில் எழுத்து வடிவிலான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க இருப்பதாகவும் அதற்கு முன்னதாக ஏற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் ஓர் போர்க்குற்ற விசாரணை முறைமை ஸ்தாபிக்கப்படா பட்சத்தில் சர்வதேச விசாரணை பொறிமுறையொன்று அறிமுகப்படுத்துப்படும் என்ற கெடுவை விதிக்கும் ஓர் பயமுறுத்தலோடும் இனிதே நிறைவு பெற்றது.

இப்பயமுறுத்தலில் இருந்து நாடு



பிரித்தானிய பிரதமர் - டேவிட் கமரோன்

முற்றாய் விழித்தெழும் முன்னர் பொதுநலவாய மகாநாடு இலங்கையின் வாயிற்படிகளில் கதவைத் தட்டி நின்றது.

ஓர் இழுபறியை முடித்து வைத்த நிம்மதியில் இருந்த இந்தியாவிற்கு, பொதுநலவாய மகாநாடு, யாருக்கும் தராத தலையிடியை, இந்தியாவிற்கு தந்ததாக அமைந்தது ஒரு துரதிர்ஸ்ட

வசமானது என்றே வர்ணிக்கப்ப டலாம்.

கிட்டத்தட்ட இந்தியாவை மையமா கக் கொண்டே, பொதுநலவாய மகாநாட்டின் அனைத்து நிகழ்ச்சி நிரல்களும் அரங்கேறின என்றால் அது மிகையாகாது.

சனல்-4 கின் புகைப்படங்களாக இருக்கலாம் அல்லது கனடாவின் பகிஷ்கரிப்பாய் இருக்கலாம் அல்லது கமரோனின் யாழ்ப்பாணத்து அதிரடி விஜயமாக இருக்கலாம் அவை அனைத்தும் நடைமுறையில் அதி உக்கிரமான பாதிப்பை ஏற்படுத் தியது இந்தியாவிற்கு தான். இப்பாதி ப்பலைகளை நுணுகி ஆயும் போது இவற்றை "சமயம்-பார்த்து" அரங் கேற்றியதின் முக்கிய நோக்கம் மன்மோகனை இலங்கைக்குள் நுழையவிடாமல் இருப்பதற்காகவோ எனும் கேள்வி அழுத்தமாய் எழாமல் இருப்பது சற்றே முடியாத காரியம் தான். கனடாவின் பகிஷ்கரிப்பும் கூட, புலம் பெயர்ந்த மக்களின் வாக்குக ளை மையமாகக் கொண்டது என்று கூறப்பட்டாலும், அதைத் தாண்டிய ஓர் இந்தியத் தொடர்புபட்ட அரசிய லை அடையாளங் காண்பது அவ்வ ளவு கடினம் இல்லை.

இதேபோன்று சனல்-4 கின் தயா ரிப்பாளர், வெளியிட்ட வேகத்தில், (சமயம்- பார்த்து)இந்தியாவிற்குள் நுழைய முற்பட்டதும் தற்செயல் அல்ல என்றே கூறவேண்டும்.

மறுபுறத்தில், மேற்குறிப்பிட்ட ஓர் கனேடிய பகிஷ்கரிப்பு எத்தகைய விளைவினை கொந்தளிக்கும் ஓர் தமிழ் நாட்டில் ஏற்படுத்தும் என்ற கணிப்பின்றிய பேதமையுடன் இருந் துவர சர்வதேச அரசியல் ஒன்றும் அவ்வளவு வெகுளித்தனமான துறை யும் அல்ல. இத்தகைய பகிஷ்க ரிப்புகள் விளைவிக்கக் கூடிய விளை வுகளின் பல்முகங்கள் குறித்த சித்திரங்கள் மிகத்துல்லியமாக கணிப்பிடப்பட்ட பின்னரே முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்பது தெளிவு.

எதிர்பார்த்தால் போல், கனேடிய பகிஷ்கரிப்பு பல் விளைவுகளை தமிழ் நாட்டில் எதிரொலித்தாலும் சுப. வீரபாண்டியன் அவர்களின் வார்த்தையில் அது பின்வருமாறு ரத்தினச் சுருக்கமாய் வெளிவந் திருந்தது:

"கனடாவின் நிலைப்பாடு மிகுந்த வரவேற்புக்குரியது. இந்தியா எத னைச் செய்ய வேண்டுமோ அதனை கனடா செய்திருக்கின்றது. இதன்

**அவ்வவ்கணங்கள் ஏற்படுத்தக் கூடிய அதிர்வுகளுக்கு ஏற்ப தமிழ்த் தரப்பின், சர்வதேசம் சம்பந்தமான நிலைப்பாடுகள் ஊசலாடக் கூடியது என்றால், மீண்டும் தமிழ்த் தரப்பு பூச்சியத் திலிருந்து ஆரம்பிக்கப்படவேண்டிய துரதிஸ்ட நிலைக்கு தள்ளப்படும் என்பது தெளிவு.**

மூலம் கனடாவிற்கு பரவலான பாரா ட்டுக்கள் இருக்கின்றன. இதனை வெற்றியாக கொண்டாடவில்லையே தவிர தமிழகத்தில் உள்ள அனைத்து கட்சிகளும் கனடாவின் நிலைப் பாட்டை பாராட்டுகின்றார்கள்" (10.11.13) இதில் தெறிக்கும் மனித நேய பாற்பட்ட உணர்வுகள் ஒருபுறம் இருக்க மறுபுறத்தில் இக்கூற்றில் அடங்கியுள்ள இந்திய மத்திய அரசிற்கு எதிரான கலக குரலின் சாரமும் அதைவிட மேலாக, வழமை யான இந்தியாவிலிருந்து மாறுபட்டு, மேற்கை ஓர் நட்பார்ந்த முறையில் விளிக்கத் தூண்டும் பண்பலையி னையும் இங்கே நாம் ஒருங்கே காணக்கிட்டுவதாய் உள்ளது.

இப்போக்கின் ஒரு தருக்க ரீதியான வளர்ச்சியானது, எதிர்கால இந்திய அரசியலை, எதை நோக்கி இட்டுச் செல்லக் கூடும் என்ற கேள்வி இந் திய கொள்கை வகுப்பாளர்களிடம் தோன்றியிராது என நாம் நம்புவது ஓரளவு சாத்தியமற்றதே.

இச்சூழலிலேயே, மேற்படி உணர்வு மையங்களை தமது நுணுகிய கவனத்துள் கொள்ளாத தமிழ்த் தரப்பினர் அல்லது ஓர் பிரிவினர் தமது ஆற்றுகைகளுக்கு ஊடாக (தமிழ் நாட்டு அரசியல் என்ற கொந்த ளித்த யதார்த்தத்திலும், சமயங்க ளில் இந்திய வெளிநாட்டுக் கொ ள்கை என்ற நுண்ணுணர்வு பிரதேச த்திலும் தம்மையறியாமல் கால்ப தித்து) அதற்கூடு மேற்குறி ப்பிட்ட "இழுபறி" காலத்தில் காணப்பட்ட தமது சிநேக உறவு நிலைகளை இன்று ஓர் மறு முனைக்குக் கொணர்ந்துச் சேர்த்துள்ளனரோ என்ற கேள்வி எழச்செய்கின்றது.

(பல்வேறு அழுத்தங்கள் காணப்பட்ட போதும் சம்பந்தன் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை என்ற நுண்ணுணர்வு பிரதேசத்தில் தவறி யும் கால்பதிக்க தயக்கம் காட்டிய காலங்களை நாம் நுணுக்கமான சாணக்கியம் கொண்ட காலங்கள் என்றே வரையறுக்கலாம்.)


ஏனெனில் பொதுநலவாய மகாநாட் டுக்கு பிற்பட்டக் காலத்தில் பெரும் இழுபறியில் கிடந்த இந்த இலங்கை- இந்திய உறவுகள், ஜூன் ஜூலைக்

காலப்பகுதிகளோடு ஒப்பிடும் போது ஒருவிதமான சகஜ நிலையை எட்டியுள்ளதாகக் காணக்கிட்டுகிறது என லாம்.

III.

பொதுநலவாய மகாநாட்டுக்குப் பிற்பட்டக் காலப்பகுதியில் பொதுநவாய மகாநாட்டின் பெறுபேறுகளை அதிகப்படியாக சுவீகரித்த (சுருட்டிய) இருவர் என்றால் ஒன்று கமரோன் மற்றது ராஜபக்ஷ - ஆகிய இருவருமே. கமரோன் பேச பேச, தெற்கில் அதன் அறுவடை சந்தோசமாக தெற்கின் ஆட்சியாளர்களால் கிரமமாக செய்து முடிக்கப்பட்டது. (மார்ச் 28ம் திகதி ஜெனீவா கூட்டம் என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மேல் - தென் மாகாணசபைகளுக்கான தேர்தல் மார்ச் 29ம் திகதி என அறிவிக்கப்பட்டது ஓர் குறித்த பார்வையை சுட்டுவதாக இருப்பதும் அவதானிக்கத் தக்கதே. இதன் பிரதிபலிப்பை தேர்தலை நிர்ணயிக்கும் திகதிகளிலும் காணலாம்)

இக்காலப்பகுதியில் இலங்கைத் தமிழர் சார்பாக தமிழக சட்டசபையில் நான்காவது தீர்மானத்தை முன்மொழிந்த ஜெயலலிதா பின்வருமாறு உரைத்திருந்தார்: "கடந்த இரண்டரை வருடங்களில் மூன்று தீர்மானங்களை இச்சட்டசபை நிறைவேற்றியுள்ளது (இலங்கைத் தமிழர் தொடர்பாக). ஆனால், மத்திய அரசானது இன்னுமே தமிழர்களுக்குச் சார்பான எந்தவொரு தீர்மானத்தையும் எடுத்தப்பாடில்லை." (தீர்மானங்கள்: ஜூன் 2011, மார்ச் 2013, அக்டோபர் 2013)


இந்திய வெளிவிவகார அமைச்சர் : குர்ஷித்


மறுபுறம் இந்நான்காவது தீர்மானம் இடம்பெற்ற மறுநாளே நெடுமாறனால் திறந்து வைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தின் வெளி சுவர் அரசால் உடைத்தெறியப்பட்டது. நெடுமாறனும் கைது செய்யப்பட்டார். ஒருபுறம் தீர்மானம் - மறுபுறம் மேற்படி நடவடிக்கை என்ற ரீதியில் தமிழ் நாட்டு அரசியல் எதிர்வரும் இந்திய தேர்தல்களை இலக்காகக் கொண்டு களைகட்டத் தொடங்கிவிட்டது எனலாம்.

இச்சூழலில் ஏற்கனவே சுட்டியது போல கமரோனின் வடக்கு சாகசங்கள் இங்குள்ள தமிழர்களை மாத்திரமல்லாது தமிழ் நாட்டில் இருக்கும் தமிழர்களையும் வளைத்துப்போடும் அளவிற்கு நேர்த்தியான தாகவே இருந்துள்ளது: "கமரோனின் விஜயத்தின் பின் (இலங்கை) இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு நம்பிக்கைக் கீற்று கிட்டியிருக் கின்றது" என்று தம் பங்கிற்கு பாட்டாளிகள் கட்சியின் ராமதாஸும் கூறி நின்றார்.

இனி மன்மோகனும் வராமல், கமரோனின் பின்னணியில், அழுத்தமான இந்திய பிரதிநிதித்துவம் இல்லாத ஒரு சூழலில், ஜூன் ஜூலைத் தொடக்கம் இறுக்கி வைத்திருந்த தன் பிடியை இந்தியா இழந்து விட்டதா எனும் கேள்வி இந்திய வட்டாரங்களிலும் பரவலாக எழத்தொடங்கியது.

ஆனால், இந்திய வெளிவிவகார அமைச்சு அழுத்தம் திருத்தமாய் கூறியது: "இலங்கை மீதான பிடியை இந்தியா இழக்கவில்லை." தொடர்ந்து இந்தியா தனது அதிருப்த்தியையும் பின்வருமாறு வெளிப்படையாகவே முன்வைத்தது: "இந்தியாவானது தனது கருத்தை கூறுகின்ற முறையானது பிரித்தானியாவிலிருந்து வேறுபட்டதாகும்" என. (24.11.13)

உண்மையாக இருக்கலாம். இருந்தும், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய பொதுநலவாய மகாநாடு முடிந்த கையோடு டில்லியில் பேச்சுவார்த்தை நடாத்தியமை, கடற்படைத்


ஜப்பானிய விஷேட தூதுவர் அக்காஷியுடன் இலங்கை ஜனாதிபதி

தளபதி டி.கே. ஜோசி இலங்கையின் சர்வதேச கடல் மகாநாட்டில் பங்கேற்றமை, தொடர்ந்து அவர் நடாத்திய பேச்சுவார்த்தைகள், அதன் பெறுபேறாய் இலங்கை கடற்படை வீரர்களை இந்தியா பயிற்றுவிக்கும் என்ற புரிந்துணர்வு - இவை மாறிய சமன்பாடுகளைச் சுட்டுவதாய் அமைந்தது.

இக்காரணங்கள் தந்த அதிர்வுகளினாலோ என்னவோ, விக்னேஸ்வரனின், "நிதமும் நூற்றுக்கு மேற்பட்ட இந்திய இழுவைப் படகுகள்.. எல்லைத் தாண்டி.. மீன்பிடிக்கின்றன.. இளநிகளைக் கூட வெட்டி எடுத்துச் செல்கின்றார்கள்" எனும் மன்னார் உரையும் (02.12.13) சம்பந்தன், அரியநேந்திரன் ஆகியோரின் சம்பூர் தொடர்பான உரைகளும் சற்றே தலைத்தூக்க முற்பட்டன.

இவற்றை எல்லாம், கவனமாக ஆயும் போது பிரதானமான கேள்வியாக முன்நிலைக்கு வருவது, அவ்வவ்கணங்கள் ஏற்படுத்தக் கூடிய அதிர்வுகளுக்கு ஏற்ப தமிழ்த் தரப்பின், சர்வதேசம் சம்பந்தமான நிலைப்பாடுகள் மாறக்கூடிய நடைமுறையை கொண்டுள்ளதா என்பதே அது. அப்படி மாறக்கூடியது என்றால், மீண்டும் தமிழ்த் தரப்பு பூச்சியத்திலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டிய துரதிஸ்ட நிலைக்கு தள்ளப்படும் என்பது தெளிவு.

எதிர்வரும் ஜெனிவா மகாநாடு சனல்-4 போன்ற ஊடகங்களையும் ஏனைய நிறுவனங்களையும் ஊக்குவித்து அதிகபட்ச செயற்பாட்டுக்கும் வேறு அநேக அதிரடி திருப்பங்களுக்கும் வழிவ குத்து உலகை அதிரச் செய்யலாம். கூடவே நவீன் பிள்ளை, பெயானி போன்றோரின் அறிக்கைகளும் மகாநாட்டின் உக்கிரத்தைக் கூட்டலாம்.

ஆனால், தலையாய கேள்வி இவையனைத்தும் இடம்பெறுவது அடிப்படையில் எதற்காக என்பதே.

இவை அனைத்தும் ஓர்பொறிமுறை யை உருவாக்குவ தற்காகவே தான் என்றால் இப்பொறிமுறையை உருவர்கும் புள்ளிவரை, அனை வரும் கைக்கோர்த்து ஒன்றாகவே நடக்கக் கூடும். ஆனால், அதன் பின்னரே பயணங்கள் வேறுபடக் கூடும்.

வேறு வார்த்தைகளில் கூறுவதா னால், பொறிமுறை உருவாகிய பின்னர் பொதுவில் அடுத்து இடம்பெ றக் கூடிய தர்க்க ரீதியான காட்சி, திரை மறைவிலான ஒரு பேரம் பேசு தலே அன்றி பிறிதில்லை.

இங்கேயே மேலே குறிப்பிட்ட மூன்று நலன்களும் முன்நிலைக்கு வந்து நிற்கக் கூடும்.

வேறுவார்த்தைகளில் கூறினால் நிகழக்கூடிய அத்தகைய "பேரங்க ளில்" தமிழ் மக்கள் பிரச்சினைகள், பேரங்களை ஒட்டிய நிகழ்ச்சி நிரல் களின் முக்கியத்துவ வரிசையில், விளிம்பில் அல்லது இறுதியில் வந்து சேரக்கூடிய ஒரு கொசுறாக சிறுமைப் படுத்தப்படலும் சாத்தியமானதே. இதற்கெதிரான ஓர் பொறிமுறையை தமிழ்த்தரப்பு பதிலுக்கு உருவாக்க பிரஞ்ஞை கொண்டுள்ளதா என்பதும் இது தொடர்புபட்ட கேள்வியே.

பேரங்கள், இலங்கையை முடிந்தளவு ஓர் இந்திய-சீன செல்வாக்கினில் இருந்து அப்புறப்படுத்தி தன் செல் வாக்கை இறுக்கமாக இலங்கையில் நிலைநிறுத்த முடியும் எனில் மேற் கின் ஓர் பார்வையில் உருவாக்கப் பட்ட பொறிமுறையின் இறுக்கம் தளர் த்தப்படலாம்.

அண்மையில் அகாஷி இலங்கையில் தனது பேச்சுவார்த்தைகளை சில நாட்களாக தொடர்ந்தது, இலங்கை யிடமிருந்து சில உத்தரவாதங்களை பெற்றுக்கொள்ளவாக இருக்கும் என அபிப்ராயப்படுபவர்கள், ஓரளவு சரியாகக் கூட இருக்கலாம். ஏனெ னில் அகாஷி இலங்கையில் பேச்சு வார்த்தைகளில் இருக்கும் போதே "பிரயாண பாதை நிமித்தம்" சீன தூதுக்குழு தென்னாபிரிக்கா செல் லும் வழியில் ஓய்வு / பேச்சொன்றை விமான நிலையத்திலேயே முடித்துச் சென்றதை எளிதில் புறந்தள்ள முடியாது.


ஆக தமிழ்த் தரப்பானது, "பொறிமு றைகளை" உருவாக்கச் செய்வதற் காக ஏற்படுத்தப்படும் சந்தடிகளிலும் ஆரவாரங்களிலும் தமது பயணத் தின் பிரக்ஞையை மூழ்கடித்து விடாமல், "பயணங்கள் வேறுபடும் அன்றி வேறுபடக் கூடிய புள்ளிக ளைப்" பற்றிய தமது பிரக்ஞைகளை கூர்மைப்படுத்திக் கொள்வார்களே யானால் தங்கள் நிலைப்பாடுகளை மேலும் உரமுள்ளதாக மாற்றிக் கொள்வார்கள். (முற்பட்ட காலங்க ளில் பல பொறிகள் பற்றிய அனுப வங்கள் மக்களுக்கு உண்டு) ஆனால், இதற்குரிய முன்நிபந்தனை இக்கட்டுரையின் ஆரம்ப பகுதியில் வாதிடப்பட்டுள்ள சக்திகளின் செல்தி சைகள் குறித்த மேலும் ஆழமான வாதிப்பும், புரிதலும், அவதானிப் புமே ஆகும்.

இது இல்லை எனில் ஓர் ஆர்வலர் உண்மைத் துயரோடு, அண்மையில் முன்வைத்த பின்வரும் ஆதங்கங்கள் பிறிதொரு பாணியில் தொடரக்கூடிய சந்தர்ப்பங்களே அதிகம்: "ஒரே புள் ளியை நோக்கி நடக்க எண்ணிய எமது இளைஞர்களிடம் காணப்பட முடியாத கூட்டுத் தன்மை, அரசியல் ஞானம் கொண்டவர்களை ஏற்காத மூர்க்கப் போக்கு, அரசியல் மயப்ப டுத்தப்பட்ட கட்டுமானங்கள் மீது நம்பிக்கை இன்மை,

**"ஒரே புள்ளியை நோக்கி நடக்கஎண்ணிய எமது இளைஞர்களிடம் காணப்பட முடியாத கூட்டுத் தன்மை, அரசியல் ஞானம் கொண்டவர்களை ஏற்காத மூர்க்கப் போக்கு, அரசியல் மயப்படுத்தப்பட்ட கட்டுமானங்கள் மீது நம்பிக்கை இன்மை, வல்லரசு ஒன்றின் மீதான வெறித்தன போக்கு, சர்வதேச அளவில் எம்மால் மேற்கொள்ளத் தெரியாத ராஜதந்திர நடவடிக்கைகள் என்ற எல்லா மூலகங்களும் ஒன்று சேர்ந்து எம்மை சின்னாபின்னப்படுத்தியது என்பதே உண்மை"**



இவ்வருடத்தின் ஜனவரிமாதம் விடுதலையான இந்திய மீனவர்கள்




**இலங்கை, இந்திய மீனவர்கள் எல்லை தாண்டும் முக்கிய பிரதேசம்**

வல்லரசு ஒன்றின் மீதான வெறித்தன போக்கு, சர்வதேச அளவில் எம்மால் மேற்கொள்ளத் தெரியாத ராஜதந்திர நடவடிக்கைகள் என்ற எல்லா மூல கங்களும் ஒன்று சேர்ந்து எம்மை சின்னாபின்னப்படுத்தியது என்பதே உண்மை" (வீரகேசரி 16.11.2013)

(நிற்க: மிக அண்மைக்காலத்தில் கவன ஈர்ப்பை பெறும் நிகழ்வுகள்) கொந்தளிக்கும் ஓர் தமிழ் நாடு இவ்விவகாரங்கள் தொடர்பாக இந் திய மத்திய அரசிற்கு, கொடுக்கக் கூடிய ஒரு தீவிர நெருக்கடி அமெரிக் காவிற்கோ அன்றி இங்கிலாந்திற் கோ அன்றி கனடாவிற்கோ இல்லை என்பதும் அது அவ்வகையில் இருக்க வும் முடியாது என்பதும் மிகக்கறா ராக புரிந்துக்கொள்ள வேண்டிய ஓர் தேவைப்பாடாகும். இத்தகைய ஓர் பின்னணியிலேயே இந்திய நிலைப் பாடுகள் - அது அண்மையில் ஆற்றப் பட்ட முன்னால் வெளிவுறவு செயலா ளர் நிருபமாராவின் ஞாபகார்த்த உரையாகவோ (தமிழ் மக்களின் பிரச்சினை அவர்களுக்கான சுயமரி யாதையுடன் தீர்க்கப்படல் வேண் டும், என்றதும்) அண்மைக்கால மன் மோகன் சிங்கின் கூற்றும் (இலங்கை இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் சிரத்தையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டே வருகின்றன என்ற தும்) நோக்கத்தக்கது.

சென்ற வருடத்தின் கடைசி தினத் தன்று வெளிவந்த செய்திகளின் பிரகாரம் (31.12.2013) கச்சத்தீவுக்கு அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்த 18 மீனவர்களையும் மூன்று வள்ளங் களையும் இலங்கை கடற்படை கைது செய்து கொண்டுச் சென்றதாக அறி வித்திருந்தது. "கச்சத்தீவின்" அருகே என்ற குறிப்பு இந்திய செய்தி தாள்களில் அதிக முக்கியத்துவம் தரப்பட்டு பிரசுரிக்கப்பட்டிருந்தது என்பதும் குறிக்கத்தக்கது. (உதார ணம் இந்து) தமிழ் நாட்டை இன்னும் கொந்தளிக்கச் செய்வது என்ற கோ தாவில் இதையாற்றுவதற்கூடு தன் பூகோள-அரசியல் பாத்திரத்தை மேலும் முன்னிறுத்தச் செய்யும் இத்தகைய முயற்சிகள், மேற்கிலும் சீனத்திலும் தனக்கு மேலும் அங்கீ காரத்தையும் நற்பெயரையும் தந்து, தன்னை ஜெனிவா சிக்கல்களில் இருந்து விடுவிக்கும் என்பதுதான் தெற்கின் பின்னணி எனில், இன்னும் பல சுவாரஸ்யங்களுக்கான கதவுகள் விரிந்தே கிடக்கின்றன எனலாம்.

## என் முற்றத்து வண்ணத்துப்பூச்சி

எதிர்தெதிர்த்து
அலையடிக்க
காற்றுக் கடலில்
தன்
பலயீனமான இறக்கைகளுடன்
தத்தளிக்கிறது
வண்ணத்துப்பூச்சி

முகத்தில்
மோதி மோதித்
தள்ளும் அலைகள்
எதிர்த்து
எதிர்த்து
முன்நோக்கி
முன்நோக்கி
அங்குமிங்குமாய்
அலைக்கழிகிறது

அலைகளுக்கிசைந்து
அள்ளுண்டுதிரும்பி
கைச்சிறகொடுக்கி
காற்றுக்குதிரையேறி
திசைகெட்டு அழிவதோ ...

அறைகாற்றில்
தன்வர்ணம்உதிரா
மனவலிமைதளரா

வண்ணத்துப்பூச்சி
தேன்வாசத்திசைப்பார்த்து
முன்நோக்கி
முன்நோக்கி
அங்குமிங்குமாய்
அலைக்கழிகிறது

-வாசுதேவன்-

<u>பிந்திய செய்தி:</u>

ஆக, அண்மைய நிகழ்வுகள் இரை ணமடு குளத்தையும் கச்சதீவையும் தாண்டி வேறெங்கும் ஆக்கப்பூர்வமாக சென்றதாக தெரியவில்லை. இவையும் மக்களுக்கிடையிலான முரண்களை ஊக்குவிக்கும் வெறும்கருவிகளாக இருக்கின்றதேயன்றி இணக்கப்பாடு கள், என்பது தொலைத்தூர கனவாகவே காணப்படுகின்றது.

ணியத்தை தயாரிக்க வல்லது.) என்றும்

V. இதுவரை செறிவூட்ட ப்பட்டிருக்கும் யுரேனியத்தின் 20 சதவீதத்தை 5 ஆக்குவது அல்லதுவேறு ஒக்சைட்டாக மாற்றவும் வேண்டும் எனவும் விதிக்கின்றது.

மறுபுறத்தில், பின்வரும் நன்மைகளை, இவ்வொப்பந்தம் ஈரானுக்கு வழங்குகிறது:

i. ஈரானின் தங்க, எரிபொருள், வாகன மற்றும் பயணிகள் விமான உதிரிப்பாகங்கள் தொடர்பாக செயற்பட்டு வந்த தடைகளை நீக்குகின்றது. (ஆனால், ஈரான் தனது எண்ணெய் விற்பணையை அதிகரிக்க முடியாது எனவும் மட்டுப்படுத்து கிறது).

ii. இதுவரை, வங்கிகளிலும் வேறு ஸ்தாபனங்களிலும் முடக்கப்பட்டிருந்த ஈரானிய பணத்தில் ஏழு கோடி டொலரை ஈரான் மீளப்பெறவும் வழிசெய்கிறது.

இவ்வொப்பந்தத்தால், எது அதிகமாக பயனுறும் தேசம் என்று வாதிப்பதற்கு முன்பாக, இவ்வொப்பந்தத்திற்கான சாத்தியப்பாடுகள் எங்கிருந்து முளைத்தன என்பதே சர்வதேச அரசியலைப் பயிலும் மாணாக்கரின் முன் அலசப்படும் பெருத்த வினாவாக உள்ளது. காரணம் பின்னையது (சாத்தியப்பாடு என்பதில்) முன்னையதற்கான பதிலின் முதலடி (பயனுறும் தேசம்) இருக்கக் கூடும்

மத்தியக்கிழக்கு விவகாரங்கள் தொடர்பில் ஒரு நுணுக்கமான பார்வையைக் கொண்ட அத்துல் அனேஜா அண்மையில் (04.12.2013) எழுதியிருந்த ஒரு விவரணத்தில், அமெரிக்கா இத்தகைய ஒரு நேசக்கரம் நீட்டலுக்கான காரணங்களை கிட்டத்தட்ட மூன்று, நான்காக பட்டியலிட்டிருந்தார்.

ஒன்று, யுத்தக்களைப்பு (ஈரான், ஆப்கான் போர்களின் நிமித்தம்) இரண்டாவது அமெரிக்க மக்களின் யுத்தத்திற்கு எதிரான ஆட்சேபங்கள் (அறுபது வீதமான மக்கள் போருக்கு எதிரான அபிப்ராயத்தை தெரிவித்திருந்தமை) போன்ற தொலைதூர காரணிகளை, அவர் முன்னிறுத்தியிருந்தாலும் அவர் பிரஸ்தாபித்துள்ள, ஈரானின் மீது சுமத்தப்பட்ட தடைகள், தோற்றுவித்துள்ள எதிர் விளைவுகள் தொடர்பான அவரது அவதானிப்புகள் எமது ஆழ்ந்த கவனத்துக்குரியதாகவே இருக்கின்றன.


> **அமுல்படுத்தப்பட்ட ஓர் ஈரானியத் தடை யைத் தொடர்ந்து, ஈரான் தனது எண் ணெய் ஏற்றுமதியை டொலர்களில் நடத்தமுடியாத நிலைமையை எவ்வாறு அது சமாளித்தது என்பது அவதானத்திற் குரியது.**

ஏனெனில் “யுத்தக்களைப்பு“ என்பது கிட்டத்தட்ட பதினொன்று விமானம் தாங்கிக் கப்பல்களுக்கு முதலீடு செய்துள்ள முதலாளியர்க்கு அப்படி ஒன்றும் அவ்வளவு சீக்கிரமாக, எளிதில் வரமுடியாத ஒன்று என்பதும், அவர் மேலும் குறிப்பிட்டுள்ள இந்த அறுபது வீதமான மக்களை, தனது பிரம்மாண்டமான ஊடகத் திசைதிருப்பும் அதிரடிகள் மூலம் வெறுமனே அடங்கிப் போகச் செய்வதும் கூட (வியட்நாம் போன்ற சூழல்கள் உருவாகாத வரை) பிரதானமான காரியமாக இருக்கப்போவதில்லை என்பது தெளிவு. (இலங்கையில், பெரும்பான்மை இன மக்களை விழிக்கவிடாமல் செய்ய அல்லது உருவாகக் கூடிய சரியான சிந்தைகளை சிதறடிக்க பள்ளிகள், காளி கோயில்கள் உடைப்பு, இந்திய ஜனா எதிர்ப்பலைகள் - என்று கொடுக்கப்படும் அடுத்தடுத்த அதிரடிகளைப் போல).

ஆனால், இவற்றைத் தவிர்த்தால் அனேஜா, ஈரானின் மீது விதிக்கப்பட்ட தடைகளின் எதிர்விளைவுகள் என அடையாளங் காட்டியிருக்கக் கூடிய சில எதிர்வினைகள், மேலே குறித்தாற் போல் எமது கரிசனைக் குரிய ஒன்று தான்.

உதாரணமாக, அமுல்படுத்தப்பட்ட ஓர் ஈரானியத் தடையைத் தொடர்ந்து, ஈரான் தனது எண்ணெய் ஏற்றுமதியை டொலர்களில் நடத்தமுடியாத நிலைமையை எவ்வாறு அது சமாளித்தது என்பது அவதானத்திற்குரியது. இச்சிக்கலுக்கு முகம் கொடுக்கும் நோக்கில் ஈரான் ஆரம்பத்தில் யூரோவில் தனது வர்த்தக முன்னெடுப்புக்களை நடத்த முற்பட்டிருந்தாலும், பின்னர் ஐரோப்பிய யூனியனின் மேல் செலுத்தப்பட்ட அமெரிக்க அழுத்தங்களால், தங்கத்தாலும் பின்னர் பண்டமாற்று புரிந்துணர்வு அடிப்படையிலும் தன் எண்ணெய் வர்த்தகத்தை தொடரத் தொடங்கியது.

துருக்கியுடன் தங்கத்தின் அடிப்படையிலும், சீனாவுடன் யுவானிலும், இந்தியாவுடன் இந்திய ரூபாயிலும் தன் எண்ணெய் ஏற்றுமதியை நடத்த ஈரான் துணிந்தது. (சீனம், தான் ஈரானுக்குக் கொடுக்கவேண்டியிருந்த ஆனால், கொடுக்க முடியாதிருந்த 20 கோடி டொலர் பணத்திற்கு பதிலாக அபிவிருத்தித் திட்டங்களை ஈரானில் கொண்டு நடத்த இசைந்ததாகவும் செய்திகள் வெளிவந்தன (International business Times). இதுபோக யப்பான், தென்கொரியா போன்ற அமெரிக்க சார்பு நாடுகள் கூட பண்டமாற்று அடிப்படையிலோ அன்றி வேறு அடிப்படையிலோ தமக்கு மிக நிர்ப்பந்தமாக தேவைப்படக்கூடிய எண்ணெய் இறக்குமதியை ஈரானிடமிருந்து குறைந்த




நபுக்கோ பைப்லைன் திட்டம்.

விலையில், மிக லாபமாக (ஒப்பீட்டளவில்) வேண்டி பெற முனைப்புறுவதில் பின் நிற்கவில்லை. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அவைகளும் அமெரிக்கத் தடைகளைத் தாண்ட, கிட்டத்தட்ட ஈரான் போன்றே அல்லல்படும் சூழல்களை, இத்தடைகள், மறுபுறம் உருவாக்கியிருந்தன. இத்தடைகள் கொணர்ந்து சேர்த்த இச்சூழல்கள், ஒருபுறம் நாடுகளிடையே மறைமுகமாக ஒரு புதிய புரிந்துணர்வை எழுப்பி வந்த அதே வேளை டொலர் கட்டுவித்துவந்த ஒரு செயற்கையான பெறுமான அடுக்குத் தொடரை, தகர்த்தெறியக் கூடிய நடைமுறைகளில் இந்நாடுகளை மறைமுகமாக ஈடுபட வைத்தன எனலாம். (முன்பாக எண்ணெய்வள நாடுகள் தத்தம் எண்ணெயை, டொலர்களுக்கூடாக மாத்திரமே, விற்க வேண்டும் என்ற சவுதி அரேபியாவின் தலைமையில் அமெரிக்கா ஓர் ஒப்பந்தத்தை ஏற்ப டுத்தி இருந்ததை நினைவூட்டிக் கொள்வது சிறப்பானது)

ஆக, மேற்படி "ஈரானிய தடைகள்" தவிர்க்க முடியாதபடி, ஈரானை மாத்திரமல்ல மாறாக ஏனைய நாடுகளையும் கூட, தமது பொருளாதார நிர்ப்பந்தங்களை ஒட்டி ஒரு புதிய மாற்றுவழிக்கான பார்வையை நோக்கி, நிர்ப்பந்திக்கவும் செயற்படவும் தூண்டின எனலாம். (இலங்கையின் மிக அண்மித்த எண்ணெய்

**<u>ஈரானும் அமெரிக்காவும் தத்தமது பகைமையை மறந்துவிடும் பட்சத்தில் நபுக்கோ திட்டத்திற்கான எரிவாயு ஈரானின் "பஸ்ரா" எரிவாயுக் கிணறுகளில் இருந்து பெறப்படும். இத்திட்டம் (நபுக்கோ) நடைமுறையாகும் பட்சத்தில் ஐரோப்பிய நாடுகளின் மீதான ரஷ்யாவின் ஆதிக்கம் தளர்வு காணும் நிலையை எட்டக்கூடும்.</u>**

தொடர்பான சில நடவடிக்கைகள் கூட இவ்வகையில் சந்தேகத்திற்குரிய தோற்றப்பாட்டை கொண்டிருந்ததை மறக்கலாகாது.)

இது ஒருபுறமிருக்க இவ்வொப்பந்தம் செய்யப்பட்ட சில மணித்தியாலங்களுக்குள்ளேயே ஈரானிய உதவி வர்த்தக அமைச்சர் இந்தியாவிற்கு வருகைத்தந்து எண்ணெய் வியாபாரம் தொடர்பிலும் இடைநிறுத்தப்பட்ட ஈரான் - பாக்கிஸ்தான் - இந்திய எண்ணெய்க் குழாய்த் திட்டம் தொடர்பிலும், மேலும் முக்கியமாக, மேற்படித்திட்டம் சீனம் வரை நீட்டி விஸ்தரிக்கப்படக் கூடிய சாத்தியப்பாடுகள் குறித்தும் பேச்சுவார்த்தை நிகழ்த்தியதாகச் செய்திக் குறிப்புகள் வெளிவந்துள்ளன. மறுபுறத்தில் மேற்கு நாடுகளின் ஸ்தாபனமான நபுக்கோ வெஸ்ட் பைப் லைன் (**Nabuco West Pipe Line**) எரிவாயுவை துருக்கிக்கூடாக ஐரோப்பாவிற்கு கொண்டு செல்லும் "புதிய" நடைமுறையை பிரேரித்திருந்ததும் எமது அவதானத்திற்கு உரிய ஒன்றே.

முன்பு "நபுக்கோ-வெஸ்ட்-பைப்-லைன்-திட்டம்" இடைநடுவே காலாவதியாகியது. இதற்கு அடிப்படைக் காரணம் நபுக்கோவின் திட்டத்திற்கு தேவைப்படும் எரிவாயுவை யார் எங்கிருந்து வழங்கப்போவது என்பது தொடர்பில் தீர்க்கமான முடிவு எட்டப்படாமலேயே இருந்தது. வேறு வார்த்தையில் கூறுவதானால் நபுக்கோ திட்டத்திற்கு தொடர்ச்சியாக எரிவாயு வழங்கக் கூடிய மேற்கத்தைய சார்பு நாடொன்று காணக் கிட்டவில்லை. ஆனால், ஈரானும் அமெரிக்காவும் தத்தமது பகைமையை மறந்துவிடும் பட்சத்தில் நபுக்கோ திட்டத்திற்கான எரிவாயு ஈரானின் "பஸ்ரா" எரிவாயுக் கிணறுகளில் இருந்து பெறப்படும். (உலகத்திலேயே ஈரான் இரண்டாவது மிகப்பெரிய எரிவாயு படிவங்கள் கொண்ட நாடாக இருந்து வருகின்றது).

இத்திட்டம் (நபுக்கோ) நடைமுறையாகும் பட்சத்தில் ஐரோப்பிய நாடுகளின் மீதான ரஷ்யாவின் ஆதிக்கம் தளர்வு காணும் நிலையை எட்டக்கூடும். ஏனெனில் தற்போது ஐரோப்பா தனது எரிவாயு தேவைக்காக ரஷ்யாவையே சார்ந்துள்ளது. ஐரோப்பா மாத்திரமல்ல உக்ரேன் போன்ற நாடுகள் கூட மேற்கத்திய நாடுகளின் இழுவைக்கு எதிராகச் செயற்படும் காரணங்களில் மிக முக்கியமானது எரிவாயுக்காக ரஷ்யாவில் அந்நாடுகள் தங்கியிருத்தலே. (உக்ரேன், எரிபொருள் மற்றும் கடன்கள் தொடர்பில் ரஷ்யாவிற்கு அடுத்த வருடத்தில் செலுத்த வேண்டிய கடன் மாத்திரம் 17 கோடி அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளது - இதையொட்டிய நிர்ப்பந்தங்கள் உக்ரேனை ஐரோப்பிய

யூனியனில் இணைய விடாமல் தடுப்பதாகவும் உள்ளது.)

இதேவேளை, 2012 டிசெம்பரில் பூட்டின் தனது சவுத் ஸ்ட்ரீம் (**South Stream Pipe Line**) திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். 16 கோடி யூரோ செலவில் ஆரம்பித்து வைக கப்பட்ட இத்திட்டமானது கருங்க டலடியில் அமைக்கப்படும் குழாய்க ளுக்கூடாக 2016இல் எரிவாயுவை ஐரோப்பாவிற்கு வழங்க ஆரம்பித் துவிடும். இவ்வடிப்படையில் 2018 அளவில் 63 கோடி கியுபிக் மீட்டர் எரிவாயுவை ரஷ்யா ஐரோப்பாவிற்கு வழங்கக் கூடியதாக இருக்கும். இதற்கு கிட்டத்தட்ட ஒன்றரை வருடத்திற்கு முன்னதாக, - ஜூன் 2011 இல் ஈரானிய துறைமுக நகரான புஸரில் (**Bushehr**) ஈரான்-ஈராக்-சிரிய எரிவாயுக் குழாய்த் திட்டமொன்று கைச்சாத்திடப்பட்டது. (அதாவது சிரிய எழுச்சி ஆரம்பிக்க சில மாதங்களில்) இத்திட்டம் நடைமுறைக்கு வரும் பட்சத்தில் ஈரானின் தெற்கு பாஸ் (**South Pars**) எரிவாயுக் கிணறுகளில் இருந்து சிரியாவின் மத்தியத்தரைக்கடல் துறைமுகமான டாட்டஸ்க்கு வருடந்தோறும் 40 கோடி கியுபிக் மீட்டர் எரிவுாயு வழங்கப்பட்டிருக்கும். (டாட்டஸ்லேயே, ரஷ்யக் கடற்படைத் தளம் அமைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.)

ஆக, இவ்விரண்டுத் திட்டமுமே (அதாவது "சவுத்-ஸ்ரீம்-பைப்-லைன்-திட்டமும்", "ஈரான்-ஈராக்-சிரிய-திட்டமும்") நடைமுறைக்கு வரும் பட்சத்தில் உலகின் எரிவாயு வழங்களின் ஆதிக்கத்தை கையாளும் அல்லது கட்டுப்படுத்தும் ஒரே மாபெரும் நாடாக ரஷ்யா மாறியிருந்திருக்கும். இது, மறுபுறத்தில் மிக பலமான அரசியல் ஆதிக்கத்தை ரஷ்யாவிற்குத் தந்திருக்கும்.

ஆனால், "ஈரான் அணு ஒப்பந்தம்" நடைமுறைக்கு வந்து, அமெரிக்காவும் ஈரானும் ஓர் இணக்கப் பாட்டுக்கு வரும் பட்சத்தில், "ஈரான் அணு ஒப்பந்தம்" ஓர் தொலைதூரப் பார்வையில், இவ்வடிப்படையில், ரஷ்யாவை ஆட்டங்காணும் செயற்திட்டத்தை உள்ளடக்கியே உள்ளது என அனேஜா வாதிடுவார்.


ஈரானிய அணுஒப்பந்தம் கைகூடிய வேளை

ஆனால், மறுபுறத்தில் சிரியாவின் கள நிலவரம்தான், மேற்படி ஒப்பந்தத்தை நோக்கி, அமெரிக்காவை உந்திசெலுத்திய காரணியோ என்ற கேள்வியும் இதனுடன் தொடர்புடைய ஒன்றுதான்.

ஆகவே, இக்கேள்விகளை தோற்றுவிக்கும் சூழல்களை, சாரமிக்க ஒரு பின்புலமாகக் கொண்டு, மத்தியக கிழக்கின் இன்று-நேற்று, அரங்கேறிய-அரங்கேற்றப்படும், நகர்வுகளை நுணுகிப் பார்ப்பது பயன்தரக்கூடியது.

ஒரு பார்வையில், ஒப்பந்தமானது உண்மையில் ஈரானுக்கு எந்தவோர் பெருத்த பாதிப்பையும் தந்ததாகத் தெரியவில்லை. அதாவது, அதனது அணுத்திட்டத்திற்கு, "தற்சமயம்" பாரிய தடங்கல்கள் வந்ததாகத் தெரியவில்லை.

**IAEA** ன் பார்வைகளுக்காக சில அணுவுலைகளை திறந்துவிடுவது என்பதைத் தவிர, "தற்போதைக்கு" பெரிய நட்டங்கள் ஈரானை தீண்டியுள்ளதற்கான தடையங்கள் இல்லை என்றே கூற வேண்டும்.

அதன் காரணத்தினாலோ என்னவோ இஸ்ரேலின் நெட்டன் யாஹு முதல் சவுதி அரேபியாவின் அரச ஆட்சியாளர்கள் வரை இவ்வொப்பந்தம் ஒரு மோசடி எனவும் ஒரு வஞ்சகம் எனவும் கூற முற்பட்டார்கள்.

இவ்வொப்பந்தமானது, ஓர் இருமட்ட பேச்சுவார்த்தைகளின் மூலம் சாத்தியமாக்கப்பட்டது என்று இன்று அமெரிக்கா, கூறாமல் கூறியுள்ளது.

அதாவது ஐநா பாதுகாப்பு சபையின் ஆணைக்கு ஏற்ப, பாதுகாப்பு சபை சார்ந்த நாடுகள் (+1) ஈரானோடு நடத்திய வெளிப்படையான பேச்சுவார்த்தை ஒருபுறம்.

மறுபுறம், எந்வொரு நாட்டுக்கும் தெரியாமல் (?) அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையே கடந்த "ஒரு வருட காலமாய்" நடந்ததாய்க் கூறப்படும் "ரகசிய" பேச்சுவார்த்தை மறுபுறம்.

ரகசிய பேச்சுவார்த்தை நடைபெறுவதை கொஞ்சமும் அறிவிக்காமல் அமெரிக்காவானது, இஸ்ரேல் போன்ற எதிர்ப்பு நாடுகளுடன் (ஏனைய பாதுகாப்பு சபை நாடுகள் ஈறாக) சிரிக்க சிரிக்க பேசி வந்ததை, முதல்தரமான வஞ்சகம் எனக் கொண்டு, இதை வரலாற்றுத் தவறு என்று இஸ்ரேல், பிரான்ஸ் போன்றவையும் ஏனைய பலவும் கோபத்துடன் ஒப்பந்தத்தை தாக்கும் கோதாவில் ஆரம்பத்தில் குரல் தந்தார்கள் - அல்லது குதிப்பது போல் பாவனை செய்தார்கள்.

அமெரிக்க காங்கிரஸின் வெளிநாட்டு விவகார கமிட்டியின் தலைவராக இருக்கும் எட் ரொய்ஸ் (**Ed Royce**) ஒப்பந்தம் குறித்து ஆரம்பத்தில் - அதாவது ஒப்பந்தம் முடிந்த இரண்டொரு தினங்களில் - கருத்து தெரிவித்திருந்தார்: "(ஒப்பந்தம் குறித்து)... எனக்கு ஆழ்ந்த கவலைகள் உண்டு. ஈரான், தன் அணுவாயுத உற்பத்தி வல்லமையும், தலையாய அம்சங்களை தக்கவைத்துக் கொள்ளவே இது வழிசெய்கின்றது.. "இந்தக் கூற்றை மேலும் வலிமையாக "வொஷிங்டன்-போஸ்ட்" தலையங்கள் பின்வருமாறு வலியுறுத்தி (ஓரளவு அம்பலப்படுத்தியும்) கூறியிருந்தது:

"இவ்வொப்பந்தத்தில் அமெரிக்கா Clause) அடங்கியிருப்பது அவதானிக்கத்தக்கது. (இது) ஓர் 35 வருடங்கள் கழித்து ஈரானானது தன் அணுத் திட்டத்தை எந்தவொரு கட்டுப்பாடுமற்ற விதத்தில் முன்னெடுக்கவும், அதேவேளை, காணக்கிட்டும் அனைத்து தடைகளையும் அகற்றவும், ஈரான் தனக்குத் தேவையான புளுட்டோனியத்தை மீள உற்பத்தி செய்ய தொடங்கவும் இவ்வொப்பந்தம் வழிசெய்கிறது" என்ற கருத்துப்பட தனது தலையங்கத்தை தீட்டியிருந்தது.

"வொஷிங்டன் போஸ்ட்டுக்கு" எட்டிய இவ்வறிவு நுணுக்கமான அமெரிக்க அரச யந்திரத்திற்கு எட்டாது போனது எப்படி என்பது ஒருபுறமிருக்க மறுபுறத்தில் இவ்வொப்பந்தத்தால்

## ஈரான்-ஈராக்-சிரிய எரிவாயுத் திட்டம் – 2014
## சவுத் பாஸ் கிணறுகளில் இருந்து ஐரோப்பாவிற்கு
## ஆனால் அரேபிய வசந்தத்தின் பெருபேறுகள் என்னென்ன?

மிக நீண்ட காலமாக, ஈரான் மூடிவிட வேண்டும், என்று தீவிரமாக வலியுறுத்தியும் வாதிட்டும் வந்த நில அடிக்கீழான யுரேனிய செறிவாக்கும் ஆலையைப் பற்றி ஒன்றுமே கூறப்படவில்லை. கூறப்பட்டுள்ளவை யாவும் **Arak, Nathanz, Fordon, Qom** பற்றிய உலைகள் பற்றி மாத்திரமே'

"இதைவிட இவ்வொப்பந்தத்தில் "அஸ்தமன-ஷரத்துக்கள்" (**Sunset**

பெரிதும் பயன்பெறப் போகும் நாடுகள் துருக்கியும் ஈராக்கும் எனக் கூறப்படுகிறது.

முன்பே கூறியபடி சவுத் பாஸ் (**South Pars**) எரிவாயுத் திட்டம் அதாவது "நபுக்கோ மேற்கு" பைப் லைன் திட்டம் அமுலுக்கு வரும் பட்சத்தில் ஈரானிய எரிவாயு துருக்கிக்கு ஊடாக ஐரோப்பாவை சென்றடையும்.



புஸர் அணுஉலை


இனி மேற்படி "நபுக்கோ" திட்டத்தை, (இவ் ஈரானிய அணு ஒப்பந்தத்தின் பின்) அமுல்படுத்தப் போவது (அதாவது முதலீடு செய்வதும் பின், அதிக விகிதாசார இலாபங்களை சுருட்டுவது வரை) அமெரிக்காவின் இராட்சச எண்ணெய்க் கம்பனிகளாகவே இருக்கும் என்பது வெளிப்படை. மறுபுறத்தில் துருக்கி மேற்படி எரிவாயுக் குழாய்களை தனது நாட்டுக்கு ஊடாக செல்ல அனுமதிப்பதற்கூடு பெருத்த ஆதாயத்தை தேடிக்கொள்ளும் வாய்ப்புகளும் உருவாகியே உள்ளது. இது துருக்கியும் அமெரிக்காவும் இவ் ஈரானிய அணு ஒப்பந்தத்தால் அடையக்கூடிய நன்மையின் ஒரு பகுதியை சுட்டுகின்றது.

இவ்வாதாயங்கள் ஒருபுறமிருக்க, ஈரானுக்கும் துருக்கிக்கும் இடையிலான வர்த்தகத்தின் பெறுமதி, கடந்த வருடத்தில் மாத்திரம் 21.9 கோடி டொலர்களாக இருந்துள்ளது. துருக்கி ஈரானிடமிருந்து தனது எண்ணெயையும் எரிவாயுவையும் பெற ஈரானுக்குத் தங்கத்தை வழங்கி வந்தது. மறுபுறத்தில் நிதம் ஆயிரக்கணக்கான பொருட்களை ஈரானுக்கு ஏற்றுமதி செய்யும் நாடாக துருக்கியே திகழ்கின்றது. தடைகளால் துருக்கி கடந்த ஒன்பது மாதங்களில் மாத்திரம் அடைந்த நட்டம், ஆறு கோடி டொலர்களைத் தாண்டக்கூடும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இவை அனைத்தும், மேற்கத்தேய நாடுகள் போக, மேற்கத்தேய நாடுகளின் நேட்டோ பங்காளியான துருக்கி அடையப்போகும் இலாபங்களைச் சுட்டுகின்றன.

இது ஒருபுறமிருக்க, ஒப்பந்தம் முடிந்த கையோடு கிட்டத்தட்ட ஒரு கிழமைக்குள்ளாகவே ஈரான் (01.12.2013) தனது எண்ணெய் - எரிவாயு உற்பத்தி தொடர்பில் மிக பிரம்மாண்டத் தொகையான 70 கோடி டொலர்களை முதலீடு செய்ய உத்தேசித்துள்ளதாக அறிவித்ததும் இது தொடர்பில் அவதானிக்கத்தக்கது.

உலகின் பிரமாண்டமான எரிவாயுக் கிணறு - தெற்கு பாஸ், வடக்கு வயல்




உண்மையில் இக்கூற்று, ஈரானின் எரிவாயுக் கிணறுகளான South Pars தொடர்பாகவே ஆற்றப்பட்டது என்பதும் தெளிவு.

## South Pars
## எரிவாயுக் கிணறுகள்

ஈரானின் **South Pars** எரிவாயுக் கிணறுகள் உலகிலேயே பெரியன என்று கூறப்படுகின்றன. பாரசீக வளைகுடாவின் கடலுக்கடியிலான இக்கிணறுகள் கட்டாராலும், ஈரானாலும் பகிர்ந்துக்கொள்ளப் படுகின்றன. (கிணறுகள் இருநாடுகளின் கடல் எல்லைகளுக்குள் வியாபித்து இருப்பதால்). கிட்டத்தட்ட 51 டிரில்லியன் கியுபிக் மீட்டர் எரிவாயுப் படிவங்களைக் கொண்ட இவ் இராட்சச கிணறுகள் ஒரு பிரம்மாண்டமான 9700 சதுரக் கிலோ மீட்டர் பரப்பளவில் வியாபித்து படர்ந்திருக்கின்றன. இதில் 3700 சதுரக் கிலோ மீட்டர் ஈரானுக்கும் 6000 சதுர கிலோ மீட்டர் கட்டாருக்கும் உரித்தானதாகக் கூறப்படுகிறது.

இவ் எரிவாயுக் கிணறுகள் தொடர்பாக கிட்டத்தட்ட 4.7 கோடி டொலர்களை முதலீடு செய்வதற்காக சீனா செய்திருந்த ஒப்பந்தத்தை ஈரான் கடந்த ஏப்ரல் மாதம் அளவில் (ஏப்ரல் 2013), சீனா போதிய உற்சாகத்தைக் காட்டவில்லை என்ற காரணத்தைக் காட்டி ரத்து செய்தது, குறிப்பிடத்தக்கது.

இனி இத்தகைய ரத்து செய்தலும் ஒரு வருடமாய்த் தொடர்ந்த மேற்குறித்த பேச்சுவார்த்தைகளின் ஒரு பகுதியா? என்பது யாருக்கும் வந்து சேரக்கூடிய ஒரு வினாதான். அதாவது, அமெரிக்க எண்ணெய்க் கம்பனிகள் **South Pars** கிணறுகளில் இறங்க வழி செய்வதென்றால், எண்ணெய்க் கிணறுகள் தொடர்பான, சீனாவின் மேற்படி தலையீடு அகற்றப்பட வேண்டிய தேவையை கோரியே நிற்கின்றது.

இது ஒருபுறமிருக்க, **South Pars** எரிவாயுக் கிணறுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு நடவடிக்கை பொருத்து குறிப்பிடுவதெனில், அது, ஏற்கனவே மேலே குறிப்பிட்ட ஈரான்-ஈராக்-சிரிய எரிவாயுத் திட்டம் தான்.

10 கோடி அமெரிக்க டொலர்கள் செலவில் நிர்மாணிக்கப்படவிருந்த இப்பிரமாண்டமான திட்டத்தின் பிரகாரம் 2016இல் ஐரோப்பாவிற்கு எரிவாயு, **South Pars** கிணறுகளில் இருந்து கிட்ட வேண்டும். ஆனால், திட்டம் ஆரம்பித்த சில மாதங்களுக்குள் சிரியாவில் ஆரம்பிக்கப்பட்ட "அரேபிய வசந்தத்தின்" பெறுபேறால் தனது முதலாவது அடியைக் கூட இத்திட்டம் எடுத்து வைக்க முடியவில்லை.

தொடர்ந்து கட்டமைக்கப்பட்ட ஈரானிய-சிரிய தடைகள், ஒப்பந்தத்திற்கு கொடுத்த மரண அடியோடு இத்திட்டம் இன்று தவிடுபொடியான நிலையில் உள்ளது.

இனி, இந்த அரபு வசந்தத்தின் பெறுபேறை அமெரிக்க எண்ணெய்க் கம்பனிகள்தான் வழமைப்போல் சுருட்ட வேண்டும் என்பதை பலரும் எதிர்வு கூறியுள்ளார்கள்.

(இதற்கு முன்னதாக கட்டார் பிரேரித்திருந்த ஓர் எரிவாயுக் குழாய்த் திட்டம் - சவுதி அரேபியா, ஜோர்டான், சிரியா, துருக்கிக் கூடாக ஐரோப்பாவிற்கு எரிவாயுவை கொண்டு செல்லும் திட்டம் சிரியாவின் ரஷ்ய சார்புநிலையால் நிராகரிக்கப்பட்டிருந்தது என்பதும் நினைவில் கொள்ளத்தக்கதே")

இப்படியாக ஈரானின் எரிவாயுக் கிணறுகள், தாம் கொண்டிருக்கும் எரிவாயு அளவின் பிரம்மாண்டத்திற்கு ஏற்ப, அவை ஏற்படுத்தும் அரசியல் பரிமாணத்தின் தாக்கங்களும் பிராந்தியம் முழுவதும் பிரமாண்டமான அதிரடிகளை ஏற்படுத்தி வருகின்றது பல்லாயிரக் கணக்கான மக்களின் குருதியை உறிஞ்சி வருகிறது என்பதும் அவதானிக்கத்தக்கது.

இனி இந்தப்பின்னணியிலேயே சிரிய விவகாரம் இனி எதை நோக்கிப் போகக் கூடும் - இவ் ஈரானிய அணு ஒப்பந்தம் சிரியாவின் கள நிலவரங்களில் செலுத்தப் போகும் பாதிப்புக்கள் எவை எவை என்பதும் இங்கே சம்பந்தப்பட்ட கேள்விகளாக எழுகின்றன.

ஏனெனில் ஈரானிய ஒப்பந்தம் முடிந்த மறு தினமே சிரியாவின் ஜெனிவா **II** பொறுத்த அறிவிப்பு வெளியானது.

இவ்வொப்பந்தம் காரணமாக ஈரானிய-இஸ்புல்லா நகர்வுகள், இனியும், தொடர்ந்து அதே தீவிரத்துடன் செயலாற்றக் கூடுமா ...

அன்றி ஈரான் மேற்கொண்ட ரகசியப் பேச்சுவார்த்தைகளின் பெறுபேறாய் ஈரான், சிரிய போர் தொடர்பில் ஒரு பின்வாங்கிய அல்லது அடங்கிய நகர்வினையே அல்லது ஈடுபாட்டையே இனி அது களத்தில் மேற்கொள்ளுமா என்பதெல்லாமம் இனி வரும் காலம்தான் சுட்டக் கூடும்.

ஆனால், இவ்வொப்பந்தம் காரணமாக, ஓர் ஈரானிய இஸ்புல்லா நகர்வுகளை மந்தப்படுத்த மௌனிக்க செய்ய முடியும் என்றால், அல்லது ஈரான்-இஸ்புல்லாவின் அத்தகைய ஒரு பாத்திரத்தை சிரிய கள நிலவரங்களில் இருந்து அகற்ற முடியும் என்றால், அது அஸார்ட்டின் படைகளின் வீழ்ச்சிக்கு இனியும் ஒரு ரஷ்ய ராடரோ அன்றி அதனுடன் இணைந்த ஏவுகணைகளின் செயற்படுகளோ தேவையுறப்போவதில்லை, என்பதை குறிப்பதாக இருக்கும்.

இது ரஷ்ய செல்வாக்கினை இப்பிராந்தியத்திலிருந்து சூனியமுறச் செய்யக் கூடியது.

இதன் நிமித்தமாகவோ என்னவோ ஒப்பந்தம் முடிந்த கையோடு ஈரான் தன் எரிவாயுக் கிணறுகளின் முதலீடுகள் தொடர்பில் எப்படி ஒரு மறைமுகமான அறிவித்தலை விடுத்திருந்ததோ (70 கோடி டொலர்கள்) அதேபோன்று சிரியா தொடர்பாக ஈரான் அடுத்தடுத்து கோரிக்கைகளை பிரஸ்தாபிக்கத் தொடங்கி இருப்பதும், முன்வைக்கத் தொடங்கி இருப்பதும் இத்தகைய ஒரு பின்னணியில், எமது அவதானத்திற்குரிய ஒன்றே ஆகும். ஒப்பந்தம் முடிந்த இரு வாரங்களுக்குள்ளாகவே (05.12.2013) ஈரான், சிரியாவின் ஜெனிவா - II பேச்சுவார்த்தையானது சிரியாவில் சுதந்திர தேர்தல் நடக்க வழி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை அதிரடியாக வெளிப்படுத்தியிருந்தது.

மறுபுறத்தில், சிரியாவின் சட்டசபை அங்கத்தினர்களின் ஒருவரான (**Esam Khalil**), ஈரானிய ஒப்பந்தம் சிரிய நிலவரங்களில் ஒரு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை தான் நம்ப மறுப்பதாக அண்மையில் கூறியிருந்ததும் அவதானிக்கத்தக்கது. தொடர்ந்து ஈரான், ஈராக்கும் துருக்கியும் இணைந்து “சிரிய விவகாரத்திற்கு உதவலாம்“ என்று வேறு கூறி மீண்டும் சிரிய விடயத்தில் தன் ஆர்வத்தை காட்டிநின்றது.

ஆக, இவ்வொப்பந்தம் நடைமுறையில் ஈரானிய எரிவாயுக் கிணறுகளை மேற்கத்தேய எண்ணெய் நிறுவனங்கள் கைக்கொள்ளவும், அதே வேளை ரஷ்ய ஆதிக்கத்தை உலகளாவிய ரீதியில் மேலெழ செய்யாமல் தடைசெய்வதற்குமான இரட்டைக் குறிக்கோள்களை அனேஜா கூறியிருப்பது போல, கொண்டிருக்கலாம் தான்.

அப்படி என்றால் கேள்வி, ஈரான், இச்சூழலில், ஒப்பந்தத்தில் அஸ்தமன ஷரத்துக்கள் (**Sunset Clause**) எதிர்வு கூறுதற்போல் எதிர்காலத்தில் ஓர் அணுவாயுத நாடாகவும் ஒரு பொருளியல் வல்லமை மிகுந்த நாடாகவும் பலம் பெறுமா என்பதே.

இதற்கான பதில், இக்கட்டுரை தொடக்கத்தில் காணப்படுகின்ற செய்திகளில் பொதிந்திருக்கவே செய்கின்றது என நாம் கூறத் துணியலாம்.

ஏனெனில், ஓர் சிரிய தலைவிதி தன் சவக்குழியிலிருந்து கொண்ட மீட்சி, வெறுமனே சிரியாவிற்கு மாத்திரம் உரித்தானது அல்ல.கூடவே, ஈரானுக்கும் உரித்தானது தான்.


இனி, மேற்படி பிராந்தியத்திலிருந்து ரஷ்யாவின் செல்வாக்கோ, ஆதிக்கமோ, அன்றி ரஷ்ய நலனோ அகற்றப்பட்ட (அதாவது ரஷ்யாவின் ஏவுகணைகள் / ராடர்களின் செயற்பாடுகள் அகற்றப்பட்ட நிலையில்) இப்பிராந்தியங்களில் இனி ஆற்றப்படக் கூடிய ஊடுருவல்களுக்கு எதிராய் எந்தவொரு தடையும் பெரிதாக எழப்போவதில்லை.

ஆகவே, அத்தகைய சூழல்கள் கவிந்து எழும் பட்சத்தில் ஓர் “அஸ்தமன-ஷரத்து“ ஈரானை பொருத்த மட்டில் வெறுமனே அர்த்தமற்றதாய் சென்று முடியக் கூடும்.

இப்பின்னணியில், ஈரான், மேற்படி ஒப்பந்தப் பிடியில் இருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முடியுமா? பிந்திய செய்திகள், அரங்கே றவிருக்கும் பிரம்மாண்டமான இஸ்ரேல் - அமெரிக்க போர் ஒத்திகையைப் பொறுத்து (5000 அமெரிக்க வீரர்கள் இஸ்ரேலுக்கு வருகைத் தந்து பங்கேற்க போகும் இராணுவ ஒத்திகையைப் பொறுத்து) கூறத் தொடங்கியுள்ளன. (டிசெம்பர் 2013)



ஈரானிய வெளிவிவகார அமைச்சருடன் ரஷ்ய பிரதமர் புட்டின்



புட்டின்

இவை ஈரான் ஒப்பந்தத்தை முறிக்கும் பட்சத்தில் இடம்பெறக் கூடிய பின்விளைவுகள் பொறுத்த எச்சரிக்கையை ஈரானுக்கு வழங்கும் பொருட்டாகவும் இருக்கலாம். மறுபுறத்தில் புதிய தடைகளை அமெரிக்கா அறிமுகப்படுத்திய போது ஈரான் தொடரும் பேச்சுவார்த்தையிலிருந்து வெளியேறிய நிகழ்வுகளும் பின் அத்தடைகள் அகற்றப்பட்டு மீண்டும் ஈரான் பங்கேற்றதும் இவ் ஒப்பந்தத்திற்கு பின்னர் நடந்தேறிய அண்மைக்கால இழுபறிகளின் தொடர்ச்சி எனலாம்.

ஆக, இனிவரும் ஆறு மாத காலமும் மிக நுணுக்கமான ஆனால், தொலை தூர தாக்கங்களை, ஏற்படுத்தக் கூடிய, பாரிய நகர்வுகளை, மத்தியக் கிழக்கில் வெளிப்படுத்திக் காட்டலாம். (இவை இவ் ஒப்பந்த மானது வர்ணிக்கப்பட்டால் போல், உண்மையில் ஓர் நிக்சனின் கணமா என்பதை உலகிற்கு வெளிப்படுத்தும்).

**பிந்திய செய்தி –**


அண்மையில் துருக்கிய இராணுவம் சிரிய எல்லைகளுக்குள்ளாகவே தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாகவும் இதனை அடுத்து வந்த சில தினங்களில் துருக்கிய பிரதமர் ஈரானுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவித்தன. துருக்கிய பிரதமர் ஈரானில், சிரியா தொடர்பாக தெரிவித்திருந்த நட்பார்ந்த சமிஞ்சைகள் ஓர் ஈரான்-சிரிய-துருக்கிய கூட்டின் சாத்தியபாட்டைப் முன்மொழிவதாய் உள்ளது. இவற்றை நோக்குமிடத்து ஈரானிய அனு ஒப்பந்தத்தின் தலையாய நோக்கங்களில் ஒன்று, ரஷ்யாவின் இருப்புக்கு நெருக்கடிகளை தருவதா என ஆய்வாளர்கள் தரப்பில் தற்போது பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

# தீண்டாத வசந்தம்

## தெலுங்கு தலித் மறுமலர்ச்சி நாவல்

- தமிழில் A.G. எத்திராஜிலு -

ஒடுக்கப்பட்ட மக்கள் உலகமெங்கும் நிகழ்த்திய போராட்ட வாழ்வின் ஒட்டு மொத்த சாரத்தை உள்வாங்கி அதனை இங்குள்ள தலித் மக்களின் ஒட்டு மொத்த வாழ்வோடும் எழுச்சியோடும் பின்னிப் படரச் செய்யும் ஓர் பின்னணிக்கான ஆற்றல் ஜி. கல்யாணராவுக்கு நிரம்பவே உண்டு.




ஏனெனில் எதைவிடவும் மேலாக, மக்களின் இதய துடிப்பை நேர்த்தியாக எடுத்துக்கூறும் ஆற்றல் மிக்க ஓர் துடிப்பார்ந்த இதயத்தையும் கூடவே அங்கே ஒன்று குவிந்த பல்வேறு விதமான பசுமையான நினைவலைகளையும் அவர் நிரம்பவே நிரப்பிவைத்துள்ளது போலவே அச்சித்திரங்களைப் பார்ப்பதற்கான ஒரு விமர்சனப் பார்வையையும் தன்னுள் உருவாக்கியுள்ளார் என்பதனையும் இந்நாவல் பலமாகவே எதிரொலிக்கவே செய்கின்றது.

# புதிய பரிணமிப்பு



பீஷ்மா

ஒளி கோடிட்டு
மறையும் .....

கிடுகிடுத்து விழும்
இடி...

கம்பீரமிக்க
மலைகள் ....
அநாயாசமாய் தலைநிமிரும்

சட் சட் சட சட
சட... சட... வென
எங்கும்... மழை
சாரல்....
திரள் திரளாய்
மலைகளின்
முகமெங்கும்
முத்துக்களை
சாத்தி சாத்திக் கொட்டும்

மழையும்
இடியும்
மின்னலும்
வந்துசேரும்....

எண்ணற்ற
அருவிகள்
குதித்துத்தாவி
கற்பொந்துகளில்
புதைந்து - வெளிக்கிட்டு
தறிகெட்டுப் பாயும்

இவை அருவிகளா?
இல்லை
எத்தனை வேகம்
பதுங்குவதற்கு
இது என்ன ஊற்றா?

மலைகளின்
இதயத்தை
பிளந்து
கும்மாளமிட்டு
பாய்ந்தன
ஓடைகள்.

இப்போ,
மேகம் கவ்விய
மலைகள்
கரும்பூதமாய்
படர்ந்து கிடக்கிறது
கணப்பொழுதில்
வெட்டியடிக்கும்
மின்னல்
மலை சிகரம்
எங்கும்
கிழித்து செல்கிறது

நதி,
எங்கும்
நதி ....
சுழலும்
சுழலும்
பொங்கிச் சுழலும்
செம்மஞ்சள் கலவையாய்....

நதிக்கு
எதிராக போர் பிரகடனம்
செய்யும் ஓடை
முட்டும்
மோதும்
பின்வாங்கும்
இங்கும் அங்கும்
பின்னும்,
பின்வாங்கும்

எங்கெல்லாம்
பள்ளமுண்டோ
அங்கெல்லாம்
தங்கும்
இனி எங்கும்
வெள்ளக்காடு

ஓடைக் கட்டறுத்து
மீண்டும் நதியின்
மையத்தைத் தொட
சீறிப்பாயும்
நதியின் பிரவாகத்தால் - மீண்டும்
தலைக்கவிழ்ந்து
பின்வாங்கும்
மண்ணைக் குடைந்து
பாயும் ஓடை
அடுத்த வளைவில்
நதியினைத் தாக்க
திட்டமிடும்
மீண்டும் நதி
வேகம் காட்டும்
ஓடை பின்வாங்கும்

இனி, மீண்டும் குட்டையாய்
எங்கும் நீர் தேங்கும்

தேங்கிய குட்டையில்
துள்ளும்
விலாங்குகள்.....

நதிக்கு தலையையும்
ஓடைக்கு வாலையும்
காட்டி
வாழ்ந்து பழகும்

மலையின்
இடியின்
மின்னலின்
தாண்டவம்
மறைய
பொங்கிய நதியலை
அமைதிக்கொள்ளும்
இக்கணம்
தேங்கிய குட்டைகள்
போக்கிடமின்றி
நதியோடு
மிக மிக ரகசியமாய்
நதியில் நசிந்து
கலக்கும்
மலைகளோ
தன்னை வருத்தி
சினத்து
புகைக்கும்

இனி
மலைகள் எங்கும்
வெண்மேகங்கள்...
தேடிச் செல்லும்,
அமைதி
காகங்கள்
கரைந்து தீர்க்கும்

இனி,
புதிய இடி
புதிய மின்னல்
புதிய மழை
ஓர் புதிய நதி
சரி
மீண்டும்
பிரவாகம் ....
ஆனால்
புதிய
தளத்தில்
தடைகளை மீறிய
புதிய கோணத்தில்... ■

இதேவேளை, 2009இல் அஸாட்டால் அறிமுகப்படுத்தப்பட்ட நான்கு கடல்கள் சார்ந்த தந்திரோபாயமே (Four Seas Strategic) சிரியாவின் தற்போதைய பிரச்சினைகளின் மூலவேர் என்று ஆய்வாளர்களால் அடையாளங் காணப்பட்டுள்ளது.

மத்திய தரைக் கடல், கெஸ்பியன் கடல், கருங்கடல், பாரசீக வளைக்குடா ஆகிய நான்கு கடல்களையும் இணைத்து எண்ணெய் வழங்கும் ஓர் பொறிமுறையை உள்ளடக்கும் திட்டமே இந்நான்கு கடல் திட்டம் என்று கூறப்படுகின்றது. (மேலும் செங்கடலையும் உள்ளடக்கும் உத்தேசமும் இருந்து வந்ததாகவும் கூறப்படுகின்றது.)

இதற்காக சிரியா, துருக்கி, ஈராக், ஜோர்டான், ஆமெனியா, அசர்பஜான் போன்ற கடலோர நாடுகளையும் ஈரான் போன்ற ஏனைய நாடுகளையும் சிரியா, இத்திட்டம் தொடர்பாய் ஒன்றிணைக்க முற்பட்டிருந்தது.

ஈரான், இது தொடர்பில், தனது பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக சிரியாவிற்கு அறிவித்திருந்தது. ஆனால், ஈரான் இப்படியாக ஆதரவு வழங்க முன்வந்தது பிரதானமான விடயம் ஒன்றல்ல என் றும், விடயம், இவ்வறிவிப்பின் பின் துருக்கியும் இத்திட்டம் தொடர்பில் தனது ஆழ்ந்த அக்கறையை காட்டி செயலூக்கம் கொண்டு செயற்படத் தொடங்கியதே பிரதானப்பட்டது என்றும் கூறப்பட்டது.

அதாவது, இத்திட்டம் அறிவிக்கப்பட்டதனை தொடர்ந்து, துருக்கி ஏற்கனவே இஸ்ரேலுடன் தான் மேற்கொள்ள நிர்ணயித்திருந்த தனது விமானப்படை பயிற்சித் திட்டத்தை கைவிடுவதாக அறிவித்தது (23.10. 2009)

இக்கைவிடலுக்கு வெவ்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும், இது நான்கு கடல் திட்டத்தின் பிரதி பலனே என்பது ஆய்வாளர்களால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. (Qifa Nabki 23.10.2009)

**ரஷ்யாவின் பங்காளியாக இருக்கும் சிரியாவை குறி வைப்பது நிச்சயமாக எண்ணெய்க்காக அல்ல...**

**அப்படியென்றால் எதற்காக??**


ஒபாமா அஸாட் நெட்டன்யாஹு

மறுபுறத்தில், இந்நான்கு கடல் திட்டத்தின் பாரிய நன்மைகளை கையேந்தப்போகும் நாடாக திகழ்ந்தது சீனமே. சீனத்தின் அளவற்ற எண்ணெய்ப் பசிக்கு போதிய தீனை குறைந்த செலவிலும், வசதியுடனும் போட, இத்திட்டம் குறிப்பிடத்தக்க வாய்ப்பினை பெற்றுத் தருவதாக இருந்தது.

எண்ணெய் ஒரு புறம் இருக்க எண்ணெய் ஓர் ஆயுதமாக, ஓர் அரசியல் பலமாக சர்வதேச அரங்கில் உருவாகி வரக்கூடிய இன்றைய சூழலில் இத்திட்டம் தோற்றுவிக்கக் கூடிய விளைவுகள் பல பரிமாணங்களை, பல முகங்களையும் கொண்டதாய் இருந்தது என்பது உண்மையே.

இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தால் இன்று சிரியா, உலகிலேயே மிகப் பெரிய எண்ணெயை வர்த்தகப்படுத்தும் மைய சந்தையாக உருவெடுத்திருக்கும் (An Oil Hub) ஆனால், உருவெடுத்ததோ இம்மையம் அல்ல. மாறாக, சவுதி அரேபியா, கட்டார் மற்றும் மேற்கு நாடுகளின் ஆதரவுடனும் ஆசிர்வாதங்களுடன் உருவாகிய அரபு-வசந்தங்களின் தொடர்ச்சியான இன்னுமொரு சிரிய-வசந்தமே.

சிரியாவின், நான்கு கடல் திட்டத்தின் ஆரம்ப அடிவைப்பை (2009) அடுத்து முழுதாய் இரண்டு வருடங்கள் முடியும் முன்னரே (2011) "சிரிய-வசந்தம்" தன் நகர்வை சிரியாவில் துவங்கியது.

இது இன்று சிரியாவின் உள்நாட்டுப் போர் என வர்ணிக்கப்பட்டாலும், பெருமளவில், இது இற்றைவரை சிரியாவில் நடக்கும் ஓர் வெளிநாட்டுப் போராகவே இருந்து வருகின்றது.

ஒரு அர்த்தத்தில், இது ஈரான்-ரஷ்யா -சிரியா ஆகிய கூட்டுக்கும் மறுபுறத்தில், மறுகூட்டான சவுதி அரேபியா-கட்டார்-மேற்கத்திய நாடுகளுக்கும் இடையிலான போர் என்பதால் - இது ஓர் வெளிநாட்டுப் போர் என்று கூறப்படுகின்றது.

இன்னுமோர் அர்த்தத்தில், சிரியாவில் போராடிவரும் அநேக போராளிகள்-குழுக்கள்-படையணிகள்- உண்மையில் சிரியாவைச் சேர்ந்தவர்கள் இல்லை - இவர்களில் மிகப் பெரும்பாலானோர் வெளிநாடுகளைச் சேர்ந்தோர் என்பதும், இவர்கள் வெறுமனே சண்டையிட ஆயுதப் பாணிகளாக்கப்பட்டு சிரிய களங்களில் இறக்கிவிடப்பட்டோர்களே என்பதும் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அண்மைக்கால அறிக்கைகளின் பிரகாரம், சிரியாவில் தற்போது நிலைகொண்டுள்ள இத்தகைய வேற்றுநாட்டுப் போராளிகளின் எண்ணிக்கை 8000I தாண்டும் என்றும் இவர்கள் கிட்டத்தட்ட 74 வெவ்வேறு நாடுகளைச் சார்ந்த மதத்தீவிரவாத குழுக்களைச் சார்ந்தோர் எனவும் இவர்கள் பொதுவில் ஆப்கானிலோ அதையொத்த நாடுகளிலோ பயிற்றுவிக்கப்பட்டவர்கள் எனவும், இவர்கள் இடம் மாறி மாறி இன்று ஆப்பிரிக்கா, நாளை சிரியா, மறுநாள் லெபனான் என்று இறக்கிவிடப்படும் இடத்தில் போர் புரியக் கூடியவர்கள் என்றும் கூறப்படுகின்றது. (Japans Times News: 01.02.2014)

ஆகவே, இத்தகைய ஓர் அர்த்தத்திலும் - இது சிரியா வில் நடக்கும் ஓர் வெளிநாட்டுப் போர் என்றும் கூறப்படுகின்றது.



போதாததற்கு இறக்கப்படும் இத்தகைய பல்வேறு குழுக்களுக்கிடையிலேயே, தலைமைக்காகவும் செல்வாக்குகளுக்காகவும் நடக்கும் வெறித்தனமான போர்கள் வேறு, நிலமையை படுமோசமாக்கி மக்களை மிகுந்த அநாதரவான நிலைமக்கு கொணர்ந்து சேர்த்துள்ளது.

அகதிகளாக, அயல் நாடுகளுக்கு இடம் பெயர்ந்த மக்களின் தொகை 25லட்சத்தை சிரியாவில் எட்டுகின்றது என்றும் உள்நாட்டிலேயே 68 லட்சம் பேர் அகதிகளாக அகதிவாழ்வை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் என்றும் ஜெனிவா போச்சு வார்த்தை நடந்த காலப்பகுதியிலேயே கொல்லப்பட்டவர்களின் தொகை 1000ஐ தாண்டும் எனவும் மதிப்பிடப் படுகின்றது. (சிரிய சனத்தொகை: 230லட்சமாய் இருந்தது.)

ஜெனீவா -II பேச்சுவார்த்தை, மக்களுக்கு ஒரு சிறிதேனும் நிவாரணத்தை உண்டுபண்ணாத வகையிலும் எந்தவோர் இணக்கப்பாட்டுக்கு வரக் கூடிய சாத்தியத்தை தொட்டுக்காட்ட முடியாத கையறுநிலையிலும் எதிர்வரும்



சிரிய அகதிகள் ஈராக்கில்



சிரிய அகதிகள் துருக்கியில்



சிரிய அகதிகள் ஜோர்தானில்



சிரிய அகதிகள் எகிப்தில்



தாய்நாட்டில் சிரிய அகதிகள்


10ஆம் திகதி (பெப்ரவரி 10) மீண்டும் துவங்கும் என்ற நம்பிக்கை யோடும் முடிவுக்கு வந்துள்ளது.

சிரியாவிற்குள்ளேயே மேற்படி போர் நடவடிக்கைகளால், மனித கேடய ங்கள் போன்று சிறை பிடிக்கப்பட்டு, வெளித்தொடர்போ, போதிய உண வோ, மருத்துவவசதிகளோ, போதிய தண்ணீரோ இன்றி பல்வேறு துண்டிக்கப்பட்ட - துண்டாடப்பட்ட பிரதேசங்களில் (சிரிய படை

## காட்டுமிராண்டிகளின் இருண்ட காலத்துக்குள் இவ்வுலகு பிரவசிக்கின்றதா?

**சிரிய யுத்தத்தில் ...**


- **கொல்லப்பட்ட பொதுமக்கள் –130000**
- **அகதிகளாக வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தோர் – 2500000**
- **தாய் நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்டோர் – 6800000**




களாலும், போராளிக்குழுக்களாலும்) அல்லலுறும் அதி தேவைக் கூடிய மக்களுக்காகவாவது இவ் ஜெனீவா-II ஓரளவு விமோச னத்தை வழங்கும் என்று எதிர்பார்த்த வர்களும், அடைந்தது பெரும் ஏமாற்றமே.

ஆக, இவற்றை எல்லாம் நுணுகிப் பார்க்குகையில், உலக வர்த்தக மைய தகர்ப்பினைத் தொடர்ந்து, இனி உலகில் தொடர இருக்கும் போரை இன்னுமொரு “சிலுவைப் போர்“ என அன்றைய “புஷ்“ வர்ணித்தது தற்செயல் நிகழ்வு அல்ல என்றாகிறது.

ஆக, மூலதனங்களுக்கு இடையிலான இவ் ஆக்கிரமிப்புப் போட்டிகளில்-போர்களில், டாலர்களின் வெறிகளில் மக்கள்சாரிகளினதும் எண்ணற்ற ஆயிரம் ஆயிரம் அவர்தம் பிள்ளைகளினதும் வாழ்வுகளும் கனவுகளும் பிய்த்துக் கிழிக்கப்பட்டு ரத்தமற்ற சக்கைகளாய் வீதி எங்கும் விசிறப்படும், காட்டுமிராண்டிகளின் இருண்ட காலத்துக்குள் இவ்வுலகு பிரவேசிக்கின்றதா, என்பதனையொத்த கேள்விகளையே இச்சிரிய நிகழ்வுகள் எடுத்துரைப்பதாய் உளது.



மனதை
இரவுக்குள் ஊறவைத்து
தோய்த்துக்கழுவி
தூயபஞ்சுப்பொதியாக்கி
ஒவ்வொரு
கலைப்பொழுதும்
என்னிடம்
கையளித்துவிட்டுப் போகிறது
தூக்கம்.

எப்படியும்
மாலையாவதற்குள்,
அழுக்குமண்டிய
எண்ணெய்ப்பிசுக்கேறிய
சாக்குத் துண்டாகிவிடுகிறது
அது

பத்திரமாய் வைத்திருக்க
ஒரு இடத்தைத்தானும்
விட்டு வைக்கவில்லையே

- வாசுதேவன் -

# மெல்லக் கனவாய்..!

- ஜெயம் நிவேதன் -

எங்கும்
கிளைகளால் - நிழலை
தந்து - எங்கள்
திருடன் - பொலீஸ்
விளையாட்டில்
அரணாய் நின்ற
முணியாண்டிக்கோயில்
ஆனைமரம்
வேரோடு பறிபோனது

நேத்தி வைப்பதற்காய்
ஒத்தக் காசுடன்
மஞ்சள் தடவிய - அப்பாயின்
துணிமுடிச்சு
சுவாமிப்படத்தின் - முன்
அநாதையாய்
கிடக்கும்

வண்ணான் கானில்
கொராவை வெட்டி
கற்களை அடுக்கி
குட்டையை உருவாக்கி
குதித்து நீந்தி
கும்மாளமிட்ட
ஓடை - எங்கோ
திசை திரும்பிப்
போயிற்று
எங்கள் வெள்ளாவி
காளியைப்போல்

பொங்கல் வைத்து
குலவைப்போட்டு
கும்மியடித்து
கம்பு சுத்தி
சிலம்பு ஆடிய
பொட்டலும் - குட்டி
குட்டி சுவர்கள்
முளைத்து...
"ரெட்டு" விரித்த
வீடுகளாய் போனது

நேசமாய் - ஒரு
சிரிப்போடு
ஜன்னல் திறந்து
கறிகொடுத்து - கறி
வாங்கி, சம்பாசித்து
கிடந்த பொழுதுகள்
நினைவைத்தட்டும்.


இன்று,
குட்டிச் சுவருக்குள்
தனித்... தனி...
மனிதர்கள் - அவர்
தனித்தனி.

தேவைகள் - என்று
எங்கும் சுருங்கிப்
போனோம் ....

வழியில்
தனிமையாய் தென்படும்
ஒரு மனிதனை
யாரின் மகன்? - என
விழிகளை விரித்து
அவரின்.. பேரனா?
எனக்கூறி
மறையும் பொழுதுகள்
நீளும்

நிலத்தையும்
நீரையும்
மரங்களையும் மட்டுமல்ல
ஆன்மாவையும் தொலைத்து
எங்கோ பொழுது போகும்

எப்போதோ தொலைதூர
தேசத்திற்கு - ஓடி
மறைந்த பள்ளித்தோழன்
குசலம் விசாரிக்கும்
போது
எங்கோ ஒளிந்திருந்த
உறவுகள் ஒட்டும்
பழைய நினைவுகள்
மெல்லக்கனவாய்
நினைவை வருடும்
ஆன்மா உயிர்ப்பில்
கணநேர
சுவாசம்
கொள்ளும்.



# பங்களாதேஷ் – அடுத்தது என்ன?

க. சுப்பிரமணியம்

**1971ல் முஜிபூர் ரஹுமான் தலைமையில் பங்களாதேசம் தனது சுதந்திரத்தை பெறும்வரை அந்நாட்டில் கொன்றொழிக்கப்பட்டவர்களின் மொத்த தொகை பத்திலிருந்து முப்பது இலட்சமாக காணக்கிட்டுகின்றது**


பிரதமர் ஷேக் ஹசீனா



முன்னாள் பிரதமர் காலிதாஷியா


வங்கதேசம் தான் சுதந்திரம் பெற்ற பின் (1971), தனது மக்களவைக்கான 10வது தேர்தலை கடந்த ஜனவரி 05ம் திகதி நடாத்தி முடித்திருந்தது. 350 ஆசனங்களைக்கொண்ட இவ் அவையில் 50 ஆசனங்கள் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டது. (அவர்கள் தேர்ந்தெடுக்கபடாவிடின் நியமிக்கப்படலாம்.)

தேர்தலை, முன்னாள் பிரதமர் காலிதா ஸியாவின் கட்சி (பங்களாதேச தேசிய கட்சி - **BNP**) உட்பட ஏனைய 17 கட்சிகள், பகிஷ்கரித்திருந்தன. இக்காரணத்தினால் 153 ஆசனங்களுக்காக தேர்வு போட்டியின்றியே நடந்தேறியது. அதாவது ஷேக்அசீனாவின் அவாமிலீக் (**AL**) கட்சி போட்டியின்றி 153 ஆசனங்களை கைப்பற்றியது. தேர்தலின்போது எதிர்கட்சிகள் தேர்தலை பகிஷ்கரிக்கும்படியும், போக்குவரத்து சார்ந்த சகல துறையினருக்கும் (பஸ், ரயில், படகுகள்) உட்பட்ட அனைத்து துறைகளிலும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுமாறு கோரினர்.

தேர்தலுக்கு முன்னராக தேர்தலை நடத்தக்கூடாது என்றும் தேர்தலை தள்ளிப்போட வேண்டும் என்றும், பின்னர் தேர்தலுக்கு பின்னராக, நடத்தப்பட்ட தேர்தல் முடிவுகளை ரத்து செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலேயே இவ் வேலை நிறுத்தங்களும், ஹர்த்தால்களும் எதிர்கட்சிகளால் முன்னெடுக்கப்பட்டது. இக் கோரிக்கைக்கு செவிமடுக்காத போக்குவரத்து வாகனங்கள் மற்றும் பிரஜைகள் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். இவ் வன்முறைகளுக்கெதிராக பொலிஸார் மேற்கொண்ட வன்முறைகளிலும் பதில் சேதங்கள் நடந்தேறின. தேர்தல் காலங்களில் மாத்திரம் தேர்தல் தொடர்பாக வன்செயல்களால் குறைந்தது 24 பேர் கொல்லப்பட்டார்கள். இக் கலவரச்சூழ் நிலைகளால் இம்முறை வாக்களித்திருந்த வாக்காளர் விகிதாசாரம் 38 - 39 சதவீதமாகவே இருந்துள்ளது.

இருந்தும் தற்போதைய நிலைமைகளில் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் பிரதமராக தொடர்ந்து ஷேக் அசினாவே பதவி வகிப்பார். ஏதிர்கட்சி தலைவராக முன்னாள் ஜனாதிபதி எர்ஷாடின் மனைவி நியமிக்கப்பட்டுள்ளார்.


**முஜிபூர்ரஹுமான்**



பங்களாதேஸ் சுதந்திர போராட்டத்தில் கொள்ளப்பட்ட சிவிலியன்கள்

**சுதந்திரம் பெற்ற நாள் துவக்கம், மக்கள் மத்தியில் நடந்து முடிந்த மனித படுகொலைகள் – வன்கொடுமைகள் தொடர்பில் ஒர் ஆழமான விசாரணை தேவை என்ற ஆதங்கம், அவர்கள் இன்றுவரை சுமக்கும் ஆழமான வடுக்களின் அடியில் காயமல் ஈரத்துடன் இருந்தே வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.**

தேர்தலின்போது மையம் கொண்ட கேள்விகள் மொத்தத்தில் இரண்டாகும். ஒன்று பங்களாதேஷ் சர்வதேச குற்றவியல் நியாய சபையின் **(World Crime Tribunal)** செயற் பாடுகளும் அதன் தீர்ப்புகள் குறித்ததுமாகும். மற்றையது பங்களாதேஷின் சமூக அரசின் கட்டுமானங்களுக்குள் மதம் வகிக்கக்கூடிய பாத்திரம் குறித்திட்டது. உண்மையில் பங்களா தேஷை பொருத்தமட்டில் மேற்குறிப்பிட்ட இரண்டு காரணி களுமே ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்ததுதான். (இலங் கையை போன்று)

தேர்தலின்போது இவ்விரு காரணிகளும் பங்களா தேசத்தில் எவ்வாறு இந்தளவிற்கு முன்னிலைக்கு வந்தன என்பதை புரிந்துகொள்வதானால் தேர்தலுக்கு முன்னதாக பல மாதங்களாய் அந்நாட்டில் இடம்பெற்ற பல நிகழ்வுகளை நாம் மீட்டு பாரக்கவேண்டிய கட்டாயம் உண்டு.

1970களில் இடம்பெற்ற வங்கதேசத்தின் சுதந்திர போராட்டத்தின் போது, நாடு இரண்டு வெவ்வேறு முரண்பட்ட அடிப்படைகளை கொண்டு, கூறுப்பட்டு கிடந்தது.

ஒன்று பாகிஸ்தானின் இராணுவ ஆதரவோடு செயற்பட்ட தீவிர மதக்குழுக்கள், மதம் சார்ந்த ஓர் அரசை பங்களாதேசத்தில் நிலைநிறுத்த முற்பட்ட ஒரு போக்கு. மற்றையது இந்தியாவின் ஆதரவோடு வங்கதேசத்தின் விடுதலைக்காக போராடிய முத்திபாஹினி உட்பட்ட பல்வேறு போராட்ட குழுக்களின் நம்பிக்கைகளை முன்னெடுத்த ஒரு போக்கு.

1971ல் முஜிபூர் ரஹுமான் தலைமையில் பங்களாதேசம் தனது சுதந்திரத்தை பெறும்வரை மேற்படி முரண்கள் காரணமாக அந்நாட்டில் பாக் இராணுவ ஆதரவோடு கொன்று குவிக்கப் பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும், பாலியல் வன்முறை களுக்கு ஆளாக்கப்பட்டும் சிதைத்தளிக்கப்பட்ட ஆண், பெண் பிள்ளைக ளின் தொகை எண்ணில் அடங்காததாய் இருந்தது. கணக்கெடுப் புகளின் பிரகாரம் கொன்றொழிக்கப்பட்டவர்களின் மொத்த தொகைபத்திலிருந்து முப்பது இலட்சமாக காணக்கிட்டு கின்றது. (சில பங்களாதேச கணக்கெடுப்புகளின் பிரகாரம் இது முப்பது இலட்சமாகவும், சில மேற்கத்தைய கணக்கெடுப்புகளின் பிர காரம் இது பத்து இலட்சமாகவும் காணப்பட்டது. பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளான பெண்களின், பிள்ளைகளின் தொகை இரண்டு இலட்சத்துக்கும் நான்கு இலட்சத்துக்கும் இடைப்பட்டது. மூன்று கோடி மக்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தார்கள் என வும், ஒரு கோடி மக்கள், அகதிகளாக இந்திய எல்லையை கடந்தனர் எனவும் கணிக்கப்பட்டது. ஓர் பெண்கள் அமைப்பின் கணக்கெடுப்பின் படி "போர் குழந்தைகள்" என கூறப்படுகின்றவர்களின் பிறப்பு தொகை மாத்திரம் 25, 000 பேரை தாண்டு கின்றது என்றும் கணிக்கப்பட்டுள்ளது. (பார்க்க: விக்கிபீடியா முதல் பல்வேறு பங்களாதேஷிய, மேற்கத்தைய இணையத்தளங்கள்) மேலும் பங்களாதேசின் சுதந்திரத்தின் பின் அதன் தலை வராகிய இருந்த முஜுபுர் இரஹுமான், இத்தகைய அனைத்து பதிவுகளையும் அழித்துவிடுமாறு கூறியிருந்ததன் காரணம் வாழ்பவர்களை இத்தரவுகள், சாபக்கேடுகளாய் மேலும் தொடரக் கூடாது என்பதால் என்றும் கூறப்படுகின்றது.

ஆக, ஒவ்வொரு சராசரி வங்களாதேச மகனோ, மகளோ இக்காட்டுமிராண்டி தனங்களுக்கு அன்று தந்திருந்த விலை மிக அதிகமானதாகும்.

ஹிட்லரின் நாசிசத்தோடு ஒப்புநோக்கக்கூடிய இக் கொடூர ங்களுக்கு மதம் துணை நின்றுள்ளது, என்பதை நம்புவது சற்றே கடினம்தான். (பக்தி இயக்கத்தின்போது இந்து சமயத்தின் பெயரில் நடந்தேறியதாக கூறப்படும் மனித, கொலைகளும் இங்கு நினைவில் மீட்டத்தக்கவையே.)

இனி இந்த அனுபவங்களின் பின்னணியில் சுதந்திரம் பெற்ற நாள் துவக்கம், அம்மக்கள் மத்தியில் நடந்து முடிந்த மனித படுகொலைகள் - வன்கொடுமைகள் தொடர்பில் ஓர் ஆழமான விசாரணை தேவை என்ற ஆதங்கம், அவர்கள் இன்றுவரை சுமக்கும் ஆழமான வடுக்களின் அடியில் காயமல் ஈரத்துடன் இருந்தே வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் வரையறுக்கமுடியாத காரணங்களினால் நாடு சுதந்திரம்பெற்ற பின்னால் கூட, இப்படுகொலைகள் தொடர் பாக எந்தவொரு விசாரணையும் பங்களாதேசத்தில் நடக்க வில்லை என்பது ஒருபுற மிருக்க, மறுபுறம் இப்பாதகங்களில் ஈடுபட்டோர் ஒப்பீட்டளவில் அண்மை காலம்வரை சுதந்திர மாக இருக்க அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

அண்மையில் (12.12.2013) தூக்கிலிடப்பட்ட ஜமாத்தே இஸ்லா மின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான அப்துல் காதர் முல் லா என்பவரும் மேற்போன்ற குற்றங்கள் தொடர்பில் குற்றச் சாட்டப்பட்ட ஒருவரே. பங்களாதேசத்தின் சர்வதேச போர் குற்றவியல் ஆணைக்குழுவின் முன்னிலையில் நிறுத்தப்பட்ட இவருக்கு எதிராக சுமத்தப்பட்ட 06 குற்றச்சாட்டுகளில் 05ல் இவர் குற்றவாளியாக காணப்பட்டார் என கூறப்படுகின்றது. 344 பேரை கொலை செய்தது முதல் 11 வயது சிறுமியை கற்பழித்தது வரை இக்குற்றச் சாட்டுகள் பரந்து கிடந்தன. மேலும் மெஹரூம் நெசா (Meharoom Nesa) என்னும் இளம் வங்கதேசத்து பெண் கவிஞரை (29 வயது) அவர் பாடிய வங்களாதேசத்தின் விடுதலை பாடல்களுக்காக கழுத்தை வெட்டி கொன்றார் கள், அவரது பெற்றோர்கள், 02 சகோதர்கள் ஆகியோரையும் கொன்றார் என்றும் சர்வதேச போர் குற்றவியல் ஆணைக்குழுவின் முன்னால் வாதிக் கப்பட்டது.

**மெஹரூம் நெசா (Meharoom Nesa) என்னும் இளம் வங்கதேசத்து பெண் கவிஞரை (29 வயது) அவர் பாடிய வங்களாதேசத்தின் விடுதலை பாடல்களுக்காக கழுத்தை வெட்டி கொன்றார்கள், அவரது பெற்றோர்கள், 02 சகோதர்கள் ஆகியோரையும் கொன்றார் என்றும் சர்வதேச போர் குற்றவியல் ஆணைக்குழுவின் முன்னால் வாதிக்கப்பட்டது.**

ஆனால் இது சார்பாக சாட்சியளித்த வங்க தேசத்தின் மற்றொரு பெண் கவிஞரான குவாஷி ரோஷி வயது இப்போது 50; பின்வருமாறு சாட்சியம் அளித்துள்ளார்: (இவர்கள் வரு வதை பார்த்து) அவள் (மெஹரூம் நெசா) குர்ஆனை இறுகப் பற்றி பிடித்துக்கொண்ட போதும் இவர்கள் அவளை விட்டு வைக்கவில்லை;

இத் தண்டனை குறித்து இருவேறு விதமான பார்வைகள் பங்களாதேசத்திலும் சர்வதேச ஊடகங்களிலும் காணக்கிட் டுகின்றது.

ஒன்று, இத்தண்டனை சரியானது. அளிக்கப்பட்ட சாட்சியங்கள் போதுமானது, என்ற ரீதியிலானது. சாட்சியங்கள் நம்பத்த குந்தவை அல்ல உதாரணமாக மேற்படி குவாஸி ரோஸியின் சாட்சியமானது நேரடி சாட்சியமாக இன்றி பிறர் கூறியதை கேட்டு கூறும் சாட்சியமாகவே இருந்துள்ளது எனவும் நியாயாதிக்க சபை யின் நடைமுறை படிமுறைகள் தமது சர்வதேச சட்டங்கள் கோரும் தரத்தை உள்ளடக்கியதாக. இருக்கவேவில்லை என்றும் வாதிடப் படுகிறது.


இந்த வாத பிரதிவாதம் தொடர்ந்தும் பங்காளாதேசத்திலும் வெளி உலகிலும், தொடர்ந்து வரும் காலகட்டத்திலும் இருக்கவே போகின்றது என்றாலும் இவ்வளவு காலமாக இப்பாதகங்கள் குறித்து விசாரனை ஒன்று இல்லாமல் இருந்தது ஏன் என்பது முக்கியமான ஒரு கேள்வியாகும்.

1970 களில் பாக் இராணுவத்துடன், ஓர் இஸ்லாமிய நாட்டை பிரித்திடக்கூடாது என்ற அடிப்படையில் - வங்க தேசம் உருவாகு வதற்கு எதிராக, இணைந்து செயற்பட்ட மதக்குழுக்களின் தொட ர்ச்சியாகவே இன்றைய ஜமாய்த்தே இஸ்லாமி கட்சி காணக் கிட்டுகின்றது.

1971ல் முஜிபுர் இரஹுமான், வங்க தேசத்தின் விடுதலையை தொடர்ந்து நாட்டின் தலைமையை ஏற்ற போது அவர் மேற்படி கட்சியை தடை செய்திருந்தார். அந்நேரம் மேற்படி ஜமாத்தையை சேர்ந்த முக்கிய தலைவர்கள் பாகிஸ்தானுக்கும், மத்திய கிழக்கிற்கும், இங்கிலாந்துக் கும் தப்பியோட நேர்ந்தது. (மேற்படி நாடுகள் அவர்களை வரவேற்று இருத்திக்கொண் டதும் குறிப்பிட த்தக்கது.) 1975 இல் முஜிபூர் இரஹுமான் கொல்லப்பட்டு இராணுவ அதி காரி சியா உர் ரஹுமான் ஆட்சியை கைப்பற்றியதுடன் அமுலில் இருந்த தடை நீக்கப்பட்டது. 1982இல் எர்ஷாட் ஆட்சியை கைப்பற்றிய பின் ஜமாத்தே அரசியலில் ஈடுபடவும் வழிவகை செய்தார். இதனை தொடர்நது 1986 முதல் ஜமாத்தேயினர் ஏனைய தேசிய கட்சிகளுடன் கூட்டனி அமைத்து தேர்தல்களிலும் போட்டியிட்டு வந்தனர்.

மேலும் ஜமாத்தேயினருக்கு உள்நாட்டிலிருந்தும், வெளிநாடு களிலிருந்தும் பலவேறுபட்ட அனுசரனைகளும் நன்கொ டைகளும் கிட்டியதின் பின்னணியில் அவர்கள் மிக வலுவாக கிட்டத்தட்ட ஓர் தனி அரசாகக்கூட பங்களாதேசில் தங்களை கட்டமைத்துக்கொள்ளக்கூடிய சூழல் பின்னய காலங்களில் உருவாகி வந்துள்ளதை பல ஆய்வாளர்களும், சுட்டிக்கா ட்டியுள்ளனர்.

உதாரணமாக வங்கி நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், வைத்தியசாலைகள், இரும்பு புடவை, சீமெந்து போன்ற வற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் முதல் பல்வேறு ஊடகங்கள்- (**Omar Desh, Diganta TV, Naya Digant, Daily**



ஜமாத்தே தலைவருக்கு வழங்கப்பட்ட தண்டனையை தூக்கு தண்டனையாக மாற்றக்கோரி 12 நாட்கள் நடைபெற்ற தீவிர மக்கள் போராட்டத்தின் ஒரு காட்சி - ஷாபாக் சந்தி , டாக்கா.

Sangram) போன்றவையும், ஜமாதேயின் வலைபின்னல்கள் உள்ளடக்கியே இருந்தன. மேலும் இஸ்லாமிய வங்கி என்ற இவ்வலைப்பின்னலை சார்ந்த வங்கியே பங்களாதேசத்தின் ஆகப்பெரிய தனியார் வங்கி என்று கூறப்படுகின்றது. இவ்வங்கியின் அனுமதியளிக்கப்பட்ட மூலதனம் (**Authorized Capital**) 244.87 மில்லியன் அமெரிக்கன் டொலர்களாக உள்ளது. வங்கியின் பணம் செலுத்தப்பட்ட மூலதனம் (**Paid up Capital**) 122.53 மில்லியன் டொலர்கள் என்பதும் அவ்வங்கியில் அதனது வாடிக்கையாளர்களால் வைப்பு செய்யப்பட்டுள்ளவை (**Deposits**) 4176.44 மில்லியன் டொலர்

**மக்களின் நாடித்துடிப்பை மிக சரியாக கணித்த காலஞ்சென்ற முஜிபூர் ரகுமானின் புதல்வியும் தற்போதைய பிரதமருமான ஷேக் அசீனா 2008 பொதுத் தேர்தலின் போது தான் ஆட்சிக்கு வந்தால், சர்வதேச குற்றவியல் ஆணைக்குழுக்களை நிறுவுவதாக வாக்குறுதியளித்தார்.**

என்பதும் பங்குகள் உட்பட்ட முதலீடுகள் 3943.33 மில்லியன் டொலர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வடிப்படையில் ஜமாத்தேயினர் அனுபவிக்கக்கூடிய அரசியல் - பொருளாதார பலம் எத்தகையதாக பங்களாதேசில் நிலைக் கொண்டுள்ளது என்பதை பல்வேறு புத்தி ஜீவிகளும் கோடிட்டு காட்டியுள்ளனர். (வில்லியம் கோம்ஸ் : 26.02.13)

இதுபோன்ற பின்னணியும், மேலும் ஏற்கனவே குறிப்பிட்டவாறு வரையறுக்க முடியாத காரணிகளும் இணைந்து 1970 இடம்பெற்ற வங்களாதேஷ் பாதககங்களை இதுவரை மூடி மறைக்க ஏதுவாக இருந்தன போலும்.

இதுவொரு புறம் இருக்க இக்காலப்பகுதியில் (அதாவது 1971 பிற்பட்ட காலத்தில்) மேலும் வளர்ச்சியடைய தொடங்கிய ஜமாத் தேயினர் காலப்போக்கில் மதராஸ் வலைப்பின்னல்களையும் தனது மாணவர் பிரிவினரின் செயற்பாட்டையும் (**Chhatra Shibir**) மேலும் ஊக்குவிக்க தலைப்பட்டனர். ஷரியா சட்டத்தை அமுல்படுத்த தடையாக நிற்பவர்களை. வன்செயல்கள் மூலம் அகற்றுவதில் இவர்கள் பின் நிற்கவில்லை. 2005 இல் பங்களா தேசத்தில் காணக்கிட்டும் 64 மாவட்டங்களில் 63 மாவட்டங்களில் ஒரே சமயத்தில் குண்டுகளை வெடிக்க வைத்து தமது புதிய வரவை பிரகடனம் செய்தனர். (இதன்போது 04 சட்டத்தரணிகள் 02 நீதிபதிகள் ஆகியோர் கொல்லப்பட்டதாக கூறப்பட்டுகிறது.)


இச் செயற்பாடு இவர்களின் புதிய வரவை ஒரு பக்கம் கூறினாலும் மறு புறத்தில் வடுக்கலால் நிறைந்த பங்களாதேச மக்களின் 1970 இன் நினைவலைகளை மீண்டும் உயரிய விழிப்பு நிலைக்கு அவர்களில் கொணர்ந்து சேர்த்தது.

இதன் தர்க்க ரீதியான வெளிப்பாடாக மக்களிடம் இருந்து 1970 களின் பாதகங்கள் குறித்து ஓர் உயர் மட்ட விசாரணை தேவை என்ற கோஷம் உருபெறத்தொடங்கியது.

மக்களின் நாடித்துடிப்பை மிக சரியாக கணித்த காலஞ்சென்ற முஜுபுர் ரகுமானின் புதல்வியும் தற்போதைய பிரதமருமான ஷேக் அசீனா 2008 பொதுத் தேர்தலின் போது தான் ஆட்சிக்கு வந்தால், சர்வதேச குற்றவியல் ஆணைக்குழுக்களை நிறுவுவதாக வாக்குறுதியளித்தார்.

அதனை முழு மனதுடன் ஏற்ற மக்கள் அவருக்கு மிகப் பெரும்பான்மையான அதிகாரத்தை மக்களவையில் அளித்து அவரை ஆட்சியில் நிறுத்தினர். இதனை தொடர்ந்து மேற்படி ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இவ் ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்ட காலம் தொடக்கம் ஜமாத்தேயினர் மேற்படி ஆணைக்குழுக்களுக்கு எதிராக பல்வேறு போராட்டங்களை (வன்முறை உட்பட்டவை) நடத்தினர், இருந்தும் மேற்படி ஆணைக்குழுவில் விசாரிப்பதற்காக 1600 பேர் இனங்காணப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர். இவர்களுள்



**இந்தியப் பிரதமருடன் பிரதமர் ஷேக் ஹசீனா**

ஜமாத்தே இஸ்லாமின் 09 முக்கிய தலைவர் மாத்திரமல்லாது காலிதா ஸியாவின் வங்க தேசத்தின் தேசிய கட்சியை சேர்ந்த 02 சிரேஷ்ட தலைவர்களும் இப்படி இனங்காணப்பட்ட சந்தேக நபர்களுள் அடங்கினர்;.

இனி இக் கொந்தளிக்கும் சூழ்நிலையில் குற்றம் ஒப்புவிக்கப்பட டதாக கூறப்படும் அப்துல் காதர் முல்லாவுக்கு ஆணைக்குழு, ஆயுட்கால சிறைத்தண்டனையை வழங்கியது. 04.02.13 வழங்கப்பட்ட இவ் ஆயுட்கால சிறை தண்டனைக்கு எதிராக திரண்ட ஓர் வங்க தேசத்தின் மாணவ உலகு இத் தண்டனை மனித இனக் கொலைக்கான தூக்குத்தண்டனையாக இருந்திருக்கவேண்டும் என்ற அடிப்படையில் டாக்காவின் ஷாபாக் சந்தியில் (**Shabag Intersection**) 05.02.13 இல் அணிதிரள தொடங்கியது. ஆரம்பத்தில் ஐநூறு, ஆயிரம் என திரண்ட மக்கள் தாங்கள் கொண்டிருந்த வடுக்களின் நிமித்தம், பல்லாயிரங்களாய் இறுதியில் இலட்சங்களாய் இரவு பகல் கண்விழித்து ஷபாக் சந்தியை விட்டு அகல மறுத்து 12 தினங்களாக தமது போராட்டத்தை தொடர்ந்தனர்.

10.02.13 அன்று இம்மாணவ அனியினர் தமது கோரிக்கைகள் உள்ளடங்கிய பட்டியலை வங்க தேசத்தின் பாராளுமன்றத்தில் சமர்பித்தனர். இம் மனித பேரலையின் கொந்தளிப்பை, உக்கிரத்தை அறிந்துகொண்ட அசீனாவின் அரசு ஆயுட்கால தண்டனைக்கு எதிராக, தேவைப்படும் சட்ட திருத்தத்தையும் செய்து, மேனமுறையீடு செய்ய தொடங்கியது. அவ்வடி ப்படையில் மேற்படி ஜமாத்தே தலைவருக்கு தூக்குத்தண்டனை வழங்கப்பட்டது.

இந்நடைமுறையின் - அதாவது ஓர் தூக்கு தண்டனையை உறுதிசெய்வதற்காக பின்பற்றப்பட்ட இச் சட்டத்திருத்தம் சர்வதேச அரங்கில் இன்று விமர்சனத்திற்கு உட்படுத்தப்ப டுகின்றது. இருந்தும் மேற்படி மக்களின் நாடித்துடிப்பை மீண்டும் தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டுள்ள அசீனா தொடர்ந்தும் பிரதமராகி உள்ளார்.

மேற்படி தேர்தலின்போது நூற்றுக்கும் மேற்பட்ட தேர்தல் சாவடிகளை ஜமாத்தேயினரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது என்று செய்திகள் கூறுவதாய் உள்ளது. (மொத்தமாய் கிட்டத்தட்ட 1400 தேர்தல் சாவடிகள் காணப்பட்டதாய் கூறப்படுகின்றது.) அமெரிக்கா மறைமுகமாக தனது ஆதரவை காலிதாவின் கட்சிக்கு வழங்கி வருகின்றது. தேர்தலுக்கு முன்னதாக பங்களாதேசத்தில் இடம்பெற்றிருந்த வன்முறைகள் உச்ச நிலையில் இருந்தபோது அமெரிக்கா தான் பங்களா தேசிற்கு வழங்கி இருந்த G+ சலுகையை இரத்து செய்தது. மேலும் தேர்தலின் பின், மேற்படி தேர்தலை தான் அங்கீகரிக்க போவதில்லை என்ற அடிப்படையில் புதிய ஓர் தேர்தலை கோரியது.

இதே போன்று ஜமாத்தேயின் தலைவரின் தூக்குத் தண்டனைக்கு எதிராக பாகிஸ்தான், ஐரோப்பிய ஒன்றியம், கட்டார், துருக்கி போன்ற நாடுகளும் தமது கடும் எதிர்ப்பை தெரி வித்திருந்தன.

இதேபோன்று மறுபுறத்தில் இந்தியா ஹசீனாவின் ஆட்சிக்கு போதிய ஆதரவை தந்து தேர்தலை அங்கீகரிப்பதாக கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இது இப்படி இருக்க வங்களாதேசத்தில் இப்படியாக, வெளிநாடு களின் முரண்கள் ஆழ ஊடுருவி அந்நாட்டையும் கொந்த ளிக்கும் ஒரு தேசமாக மாற்றும் நடைமுறையில் இறங்கியிரு ப்பதை மேற்படி நிகழ்வுகள் சுட்டுவதாக உள்ளது.

இவ் யதார்த்தங்களின் பின்னணியில் பங்களாதேஷின் மேற்படி முரண்கள் உக்கிரப்பட்டு அமைதியின்மை தொடர்வதற்கான அறிகுறியே அதிகமாக காணக்கிட்டுகின்றது- பங்களாதேசின் மனித பேரலை, மேலும் ஓர் மாபெரும் அலையாகி இவ் அனர்த்தங்களை முற்றாக தடுத்து நிறுத்தா தவரை.

கொண்டது ஒரு மாபெரும் இந்திய விடுதலை இயக்கப் பின்னணியிலேயே சாத்தியமானது என்ற கருத்தை எவ்வளவு அழுந்தக் கூறியுள்ளார் என்பது கேள்விக்குறியே.

இந்திய விடுதலை இயக்கம், ஏனைய இத்தகைய விடுதலை இயக்கங்கள் போன்றே பாகுபாடுகளைப் புறந்தள்ளி சேர்த்து, அணைத்து ஒற்றைக் குரலில் கூவவே செய்தது தன் கூவலின் உரம் உயர்ந்திருக்க வேண்டும் என்ற தேவைப்பாட்டின் நிமித்தத்தின் காரணமாய்.

ஆனால், அத்தகைய ஒரு தேவைப்பாடு முடிவுற்றதும் சமூகத்தின் இத்தணிந்த, தாக்கம் குறைந்த சக்திகளை புறந்தள்ளி தமக்குச் சாதகமான வெறும் பகடைகளாக பாவித்துக் கொள்ளும் வர்க்கப்பண்பு அடுத்தக் கட்டத்தில் வந்து சேர்ந்துக் கொள்கிறது.


நாதஸ்வர வித்துவான் ஷேக் சின்ன மௌளானா


ஒரு கட்டத்தில் தோழமைச் சக்திகளாக இனங்காணப்பட்டு தோழராக, தோழியராக இருந்து வந்தவை பிற்பட்டக் காலங்களில் அந்நியமுற்ற சூழல்களை நோக்கித் தள்ளப்படுதல் இவ்வடிப்படைகளின் நியதியாகின்றது.

பால்-சாதி மதம் கடந்த இசைகளை உருவாக்க முனைந்த ஓர் இந்திய சுதந்திர கால பின்னணியின் தொடர்ச்சி இன்றைய வளர்ந்த கட்டத்தில் பாட முற்படுமானால் அல்லது தன் இசையை எழுப்ப முற்படுமானால் அது பொறுக்கப்படுவது இல்லை.

உண்மைதான், தன் குரலில் பாடுவதை இன்னமும் பொறுப்பது எப்படி? குயில்கள் ஒன்றிணைந்து தமது கூடுகளைக் கட்டாதவரை.

# பட்ஜெட்...

சென்றமுறை வெளிவந்த பட்ஜெட்டில் இருந்து இம்முறை வெளிவந்திருக்கும் பட்ஜெட் பெரிய அளவில் வித்தியாசம் ஒன்றையும் காட்டியதாக இல்லை. ஒற்றுமை: குறிப்பிட்டதொரு போக்கு பட்ஜெட்டில் முக்கிய இடத்தைப் பிடித்து இருப்பதை அல்லது பிடிப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. அது, அரச ஊழியர்களுக்கு மாத்திரம் வேதன உயர்வை வழங்கி ஏனையோரை புறந்தள்ளும் ஓர் பண்பு சார்ந்தது. இம்முறை வெளிவந்துள்ள பட்ஜெட்டின் பிரகாரம் ரூபா 1000 உயர்வாக கிட்டும் எனக் கூறப்படுகின்றது. இதனுடன்



அண்மையில் வந்து சேர்ந்திருக்கக் கூடிய பால்மா விலை அதிகரிப்பு, இத்தியாதி ஆகியவற்றுடன் சேர்ந்து வழமையாக கூடிக்கொண்டு வரும் பணவீக்கத்தையும் சேர்த்துப் பார்த்தால் கொடுக்கப்பட்ட வேதன உயர்வின் உண்மைப் பெறுமதி ரூபா 500ஆக தான் தேறும் என்றாகின்றது. அப்படி என்றால் அரச ஊழியர்கள் அல்லாதோரின் வேதனம் - இதே சமன்பாட்டு அடிப்படையில் பார்ப்போம் என்றால் - ரூபா 500ஆல் அடிப்பட்டுப் போய்விடும். அதாவது இருந்த வேதனத்தின் மதிப்பு, ரூபா 500ஆல் குறைந்தது போன்றதொரு நிலைமை. அப்படியென்றால் இவர்களிடமிருந்துப் பறிக்கப்பட்ட ரூபாய் 500, பிறிதொருவருக்கு ரூபாய் 500 வேதன உயர்வாக வழங்கப்படுகின்றது. அப்படியென்றால் பட்ஜெட் என்னும் இப்பொறிமுறை ஒருவரிடமிருந்து பறித்து மற்றவருக்குக் கொடுக்கும் பொறிமுறையாகிவிடுகின்றதோ என்ற கேள்வியை இப்பட்ஜெட்டுக்கள் எழுப்பி விடுகின்றன. இதுவொருபுறமிருக்க இந்நாணயத்தின் மறுபக்கம் எழுப்பும் இன்னுமொரு கேள்வி, அரச துறையில் இல்லாத ஆயிரக்கணக்கான மலையகத் தொழிலாளர், மற்றும் அதிகளவு காணப்படக்கூடிய ஏனைய சிறுபான்மையினரின் நிலைமை இப்பொறிமுறையால் எந்தளவு பாதிக்கப்படும் - அத்தகையோரின் விகிதாசாரம் தான் என்ன என்பது சம்பந்தப்பட்ட ஒன்றாகும்.

# குயில்களின் தேசம்





T.M. கிருஸ்ணா

தென்னிந்திய, கர்நாடக இசை குறித்து, அண்மையில் (16.12.2013) பாடகர் டி.எம். கிருஸ்ணா அவர்களால் வெளியிடப்பட்டுள்ள நூலில் (A Sothern Music: The Karnatic Story) சில முக்கிய விடயங்கள் தொட்டுக்காட்டப்பட்டுள்ளன.

நிலமானிய விழுமியங்களை அதிகமாக தாங்கிப் பிடிக்கக் கூடிய ஒரு கர்நாடக இசையுலகில், சாதியம் அல்லது பால் சார்ந்த பாகுபாடுகளையும், அவை உருவாக்கக் கூடிய கனத்த தடைக்கற்களையும் தாண்டி போராடி முன்னேறிய இசைக்கலைஞர்களாக தங்களை ஸ்தாபித்துக் கொண்ட மிகப் பிரபல்யமான இசைக் கலைஞர்களான சுப்புலெட்சுமி, பட்டம்மாள் மற்றும் நாதஸ்வர இசைக் கலைஞரான ஷேக் சின்னமௌலானா போன்ற மாபெரும் கலைஞர்களின் வாழ்வடிப்படைகள் குறித்து, தன் நூலில் கிருஸ்ணா, தொட்டுக்காட்டியுள்ளார்.

ஒரு தேவதாசி குடும்பப் பின்னணியைக் கொண்ட பாடகர் எம்.எஸ். சுப்புலெட்சுமி சென்னைக்கு குடியேறி பிராமணராகிய டி. சதாசிவத்திற்கு இரண்டாம் தாரமாக வாழ்க்கைப்பட்ட பின்னர் நிகழும் அவரது இசைப்பங்களிப்புக் குறித்தும் அவ்விசை முகங்கொடுத்திருக்கக் கூடிய "எல்லைப்பாடுகள்" குறித்தும் நூல் தொட்டுக் காட்டுகின்றது.



மிகப் பிரபல்யமான மாபெரும் கலைஞர்கள் : வலது பக்கத்திலிருந்து முதலாவது : M.S. சுப்புலெட்சுமி, வலது புறமிருந்து இரண்டாவதாக : D.K. பட்டம்மாள், வலது புறமிருந்து மூன்றாவதாக : M.L. வசந்தகுமாரி

மறுபுறத்தில், காஞ்சிபுரத்தில் ஓர் பிராமணியக் குடும்பத்தில் பிறந்த பட்டம்மாள் ஆணுலக ஆதிக்கங்களைத் தாண்டி தன் இசையை ஸ்தாபிக்கச் செய்ய இருந்த சிரமங்கள் எத்தகையவையாக இருந்தன என்பதையும் கிருஸ்ணா குறிக்கத்தவறவில்லை. இதே தடைகளை பிறிதொரு தளத்தில் ஷேக் சின்ன மௌளானா அனுபவித்திருக்கக் கூடும்.

இவைத் தொடர்பான சித்திரிப்புகளில் பாடகர் கிருஸ்ணா, சுப்பிரமணிய பாரதியாரை ஆங்காங்கே தொட்டுக்காட்டி இருந்தாலும், மேற்படி சாத்தியப்பாடுகளை அதாவது சுப்புலெட்சுமி, மௌலானா, பட்டம்மாள் போன்ற கலைஞர்கள் தத்தமது தடைக்கற்களை தாண்டி தம் இசையை ஸ்தாபிக்கச் செய்தது அல்லது தத்தமது அங்கீகாரத்தை அடையாளங்களை பெற்றுக்


50ம் பக்கம் பார்க்க

## வெளிவந்துவிட்டது...

# ● தெணியானின்

**“நெஞ்சில் பதிந்துள்ள நினைவுகளில்**

**பேராசிரியர் : கா. சிவத்தம்பி”**




இது

குமரன் புத்தக இல்லத்தின்

புதிய வெளியீடு

**தெணியானின் படைப்புகள் சில :**

### ● நாவல்கள்

- விடிவை நோக்கி - வீரகேசரி வெளியீடு - 1973
- கழுகுகள் - நர்மதா வெளியீடு - 1981
- பொற்சிறையில் வாடும் புனிதர்கள் - முரசொலி வெளியீடு - 1989
- மரக்கொக்கு - நான்காம் பரிணாமம் - 1994
- காத்திருப்பு - பூபாலசிங்கம் புத்தகச்சாலை - 1999
- கானலில் மான் - பூபாலசிங்கம் புத்தகச்சாலை- 2002
- பனையின் நிழல் - மயூரன் வெளியீட்டகம் - 2003
- தவறிப்போனவன் கதை - எஸ். கொடகே சகோதரர்கள் - 2013
- குடிமைகள் - ஜீவநதி வெளியீட்டகம் - 2013

### ● சிறுகதைகள்

- சொத்து - N.C.B.H - 1984
- மாத்துவேட்டி - மல்லிகைப் பந்தல் வெளியீடு - 1996
- இந்நொரு புதிய கோணம் - பூமகள் வெளியீட்டகம் - 2007
- ஒடுக்கப்பட்டவர்கள் - பூபாலசிங்கம் புத்தகசாலை - 2010

### ● குறுநாவல்

- சிதைவுகள் - பரம்பரை அகதிகள் - மீறா பதிப்பகம் - 2003

### ● கட்டுரைகள்

- இன்னும் சொல்லாதது - எழுத்து வெளியீட்டகம்
- பூச்சியம் பூச்சியமல்ல - N.C.B.H - 2013

# வெளிவந்து விட்டது...

## மலையக ஆசிரியர் தொழிற்சங்கத்தின் (ஆசிரியர் ஒன்றியத்தின்) குரல்

# ஆசிரியன்

வஞ்சகத்தினில் வெற்றியை
வேண்டார்
மாயச் சூதைப் பழியெனக்
கொள்வார்
அஞ்சலின்றிச்
சமர்க்களத்தேறி
யாக்கும் வெற்றியதனை
மதிப்பார்
- பாரதி


நவம்பர் - 2013

மலையக ஆசிரியர் ஒன்றியத்தின் குரல்

தொழிற்சங்க பதிவெண் : 6044



தேயிலைத்துறை வீழ்ச்சி என்றொரு கண்ணாம்பூச்சி 04

அக்ரஹார காப்புறுதி 05

மலர்கள் எங்கே...? 07

நேர்காணல் திரு. S. சரவணபிரகாசம் 06

மெரேயா த.வி கொடூரம் 09


## மத்திய மாகாணத்தின் தமிழ்க் கல்வி அமைச்சு...?

கழுதை தேய்ந்து கட்டெறும்பானகதை

மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சு, இனி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்கு வழங்கப்பட மாட்டாது என்ற எண்ணப்பாடு இப்பொழுது ஓரளவுக்கு உறுதியாகத் தொடங்கியுள்ளது.

இந்த விடயம் ஒருபுறம் இருக்க, மத்திய மாகாணத்தை பொறுத்த வரையில் இனி தமிழ்க் கல்வி அமைச்சு என்ற ஒரு பிரிவுக்கே மூடுவிழா நடத்தும் யோசனையும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தகவல் அறிந்தவர்கள் அபிப்பிராயம் கொண்டுள்ளனர்.

இப்படி தமிழ்க் கல்வி அமைச்சின் பறிப்பு நியாயப்பாடாக இருந்ததுக்கு இ.தொ.கா- திகாம்பர வெட்டுக்குத்துக்களே எனும் காரணம் பரவலாக அடிப்பட தவறவில்லை.

தற்போதைய அரசாங்கம் பதவி ஏற்றதில் இருந்து அனைத்து அரசியல் கட்சிகளுக்கிடையே மட்டுமல்லாமல் சிறுபான்மை இனங்கள் மத்தியிலும் கூட பாரிய பிளவுகளை தோற்றுவிப்பதில் வெற்றி கண்டுள்ளது.

J.V.P, சோமவன்ச - விமல் வீரவன்ச - பிரேமகுமார என சிதற ஐக்கிய தேசிய கட்சி, ரணில் - கரு என்று அதனது ஆரம்பப் பிளவை காட்டியது. தொடர்ந்து முஸ்லீம் காங்கிரஸ் சிதற அக்கீம் தனது தலைமையை இருத்திக் கொள்ள கடும்பிரயத்தனம் செய்ய வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டது.

இனி, மலையகத்தை எடுத்துக் கொண்டால், தொண்டமான் திகாம்பரம் பிளவுகள் யாருடைய கூட்டத்துக்கு ஆள் அதிகம் என்ற "பிள்ளை



பிடி" நாடகம் தொடக்கம் வெட்டு குத்துக்கள் - நீதிமன்ற ஏறல் - இறங்கள் என்ற திணுசில் சந்தி சிரிக்க அரங்கேறியது.

இப்பிளவுகளும் சீர்குலைவுகளும் சம்பந்தப்பட்ட சக்தியினை வழுவாக சிதறடிப்பதில் சென்று முடிவடைந்திருக்கின்றன.

மலையகத்தைப் பொறுத்தவரையில் இத்தகைய பிளவுகளை ஏற்படுத்தியதன் உடனடி பலாபலனாக மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சுக்கு மூடுவிழா நடத்தப்பட்டுள்ளது.

ஒரு பின்னடைந்து நிற்கும் சிறுபான்மை சமூகம் என்ற அடிப்படையில் பார்க்கும் போது இவ் இழப்பு ஓர் கனமான இழப்பாகவே கொள்ளப்பட வேண்டும். இருந்தபோதிலும் இவ் இழப்புக்கு எதிராக இவ் இழப்பில் நேரடியாக சம்பந்தப்படக் கூடிய மலையக ஆசிரியர் சமூகமே எந்த ஒரு பாரிய எதிர் விளைவையும் காட்டாமல் மௌனித்து இருப்பது ஆழமாக நோக்கக் கூடிய ஒன்றே யாகும்.

இவ் இழப்பை விட இம் மௌனத்துக்கான காரணத்தை ஆழமாக ஆராய முற்படுவதே கூடிய ஆக்கத்தை தருவதாக இருக்கும்.

ஆசிரியர் சமூகத்தில் அடிவருடிகளாக இருக்கும் ஒரு சில அதிபர்களையும் ஒரு சில ஆசிரியர்களையும் ஒரு சில அதிகாரிகளையும் பொறுத்தவரை இவ் இழப்பு ஈடு செய்ய முடியாத மாபெரும் இழப்பு எனும் கருத்துநிலை பரவி உள்ளது.

இது ஒரு புறம்,

மறுபுறத்தில், இவ் அமைச்சு (தமிழ்க் கல்வி அமைச்சு) இருந்தால் என்ன போனால் என்ன? இருந்தபோது வெறுமனே பழிவாங்கலுக்கும் தங்கள் பாதங்களை நக்க முனைந்த அடிவருடிகளுக்கும் சேவை செய்ததே தவிர மலையகத்தின் உண்மையான கல்வி அந்தஸ்தை உயர்த்த என்ன செய்துள்ளது.? இழிநிலைக்கு அல்லவா தள்ளியுள்ளது என்ற குமுறலும் எழுந்துள்ளதை காணக் கூடியதாக உள்ளது. இதற்கு உதாரணமாக



கேம்பிரிஜ் பாடசாலையில் 18 ஆசிரியர்கள் ஒரே நாளில் இடமாற்றம் செய்யப்பட்டது தொடக்கம் மெரேயா தமிழ் வித்தியாலயத்தில் சிறப்பாக கல்வி கற்று தந்த அனேக நல்ல ஆசிரியர்கள் உயர்தர மாணவிகளுக்கும் பெண் ஆசிரியர்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட துன்புறுத்தல்களை எதிர்த்து கேட்டதின் காரணமாக ஒரே நாளில் இடமாற்றம் செய்யப்பட்டார்கள்.


தொடர்ச்சி ப : 08


## நீதியின் முன் சுருண்டது அதிகாரத் திமிர்

### நோர்வூட் தமிழ் மகா வித்தியாலய அதிபருக்கெதிராக தொடுக்கப்பட்ட வழக்கில் ஆசிரியருக்கு பெரு வெற்றி

அதிகாரத்தில் உள்ளவர்கள் தன்னிச்சையாக விலகி தனிநபர்களை, தமது விருப்பத்திற்கிணங்கவும், மனம் போன போக்கிலும் மோசம் செய்யும் அவலநிலையானது கல்வித்துறையிலும் தலைவிரித்தாடுவது கற்றவர் சமூகத்திற்கு அவமானமான, வெட்கித் தலை குனிய வேண்டிய மானக்கேடான நிலையை தோற்றுவித்திருக்கின்றது.

இந்த வகையில் ஆசிரியர் திரு. யோகராஜா நுவரெலியா மேல்நீதிமன்றில் தொடர்ந்த வழக்கின் தீர்ப்பானது திட்டமிட்டு ஆசிரியர்களை பழிவாங்கும் அதிபர்களுக்கு கிடைத்த பலத்த சாட்டை அடியாக அமைந்து விட்டது. எத்தனையோ கௌரவம் மிக்க அதிபர்களுக்கு மத்தியில் இத்தகைய ஒரு சிலரின் அதிகார

முக்கியமாக இவ்வழக்குக்காக செலவழித்த தொகையில் ஒரு குறிப்பிட்ட தொகையை மலையக ஆசிரியர் ஒன்றியம் வழங்கிய போதும் இன்னொரு விகிதத்தை யோகராஜா கடந்த காலத்தில் கற்பித்த பாடசாலையின் (புளும்பீல்ட்) சக ஆசிரியர்கள் ஓரளவுக்கு சேர்த்து திரு. யோகராஜா அவர்களுக்கு வழக்கு செலவுக்கென வழங்கினார்கள்.

துஷ்பிரயோகம் முழு சமூகத்திற்கும் ஒரு கரும்புள்ளியாக அமைந்து விடுவது துரதிஷ்டமானதே!.

நோர்வூடை வசிப்பிடமாகக் கொண்ட திரு. யோகராஜா 1997ம் ஆண்டு நியமனம் கிடைத்தது முதல், சுமார் 15 வருடங்கள், ஒவ்வொரு நாளும் 30 கிலோ மீற்றர்களுக்குமேல் பயணம் செய்து கடமைபுரிந்து வந்தார். இறுதியாக இடமாற்ற கடிதம் கிடைக்கும் வரையில் மஸ்கெலிய புளும்பீல்ட் தமிழ் வித்தியாலயத்தில் 10 வருடங்களுக்கு மேலாக பணியாற்றி அப்பாடசாலையில் பல்வேறு சாதனைகளை புரிந்துள்ளார். புவியியல் அலகிற்கென தனியான கட்டடப் பகுதியை அமைத்ததற்காகவும், புவியியல் பாடத்தில் 100 சதவீத அடைவினை உயர்தரத்திற்கு பெற்றுக்கொடுத்ததற்காகவும், பல மாணவர்களின் உயர்வுக்கு காரணமாய் இருந்ததற்காகவும். 1000 ற்கும் மேற்பட்ட மாணவர்கள் கற்கும் அந்தப் பாடசாலை அவரை பல்வேறு வகையில் கௌரவப்படுத்தியிருந்தது, உப அதிபர் பதவி வழங்கியது உட்பட.


தொடர்ச்சி ப : 03




கொடுமையை எதிர்த்து நில் - பாரதி


தனிச்சுற்றுக்காக மட்டும், நந்தலாலா இலக்கிய வட்டத்திற்காக ஹட்டன் R.ஸ்ரீதர் அவர்களால் வெளியிடப்பட்டது.